
கல்கி
குடும்பத்துடன் படிக்க...
KALKI
2.12.2007
ரூ.8.00
80 பக்கங்கள்
மனம் விரும்பும் விஷயங்கள்!
இனியா
ரசிகர்கள்
கணவர்
சினிமா
புதிய தொழில்
டீ.வி.



"நல்லவர்களே வருக..."

"நமது தேர்தல் கமிஷன் சீறும் பாம்பாக இருந்தால் போதாது; பாயும் புலியாக மாற வேண்டும்"

"அரசியல் உலகம் கொலைக் களமாக மாறி வருகிறது என்று மக்கள் புலம்புவதில் சிறிதும் அர்த்தமில்லை. கிரிமினல்கள் அரசியல்வாதிகளாவதும், அரசியல்வாதிகள் கிரிமினல்களின் துணையை நாடுவதாலும்தான், இன்று அரசியல் உலகம் மாசுபட்டுப் போயிருக்கிறது'' என்கிறார் தமிழக பா.ஜ.க. தலைவர் இல.கணேசன்.

''இப்படியானதற்கு முதல் குற்றவாளி நமது சமுதாயம்தான். அநீதிகளை எதிர்த்துப் போராடும் குணத்தையும், அயோக்கியர்களை அரசியலை விட்டே அகற்றும் துணிச்சலையும் மக்கள் இழந்து விட்டார்களோ என்றே நினைக்கத் தோன்றுகிறது. அகிம்சை என்ற நல்ல வார்த்தைக்குத் தவறான விளக்கம் தரப்பட்டு, அதனால் மக்கள் கோழைகளாக்கப்பட்டு விட்டார்கள். 'வீரம் இல்லாத விவேகம் கோழைத்தனம், விவேகம் இல்லாத வீரம் முரட்டுத்தனம்' என்றார் தேவர் திருமகனார். வீரமும், விவேகமும் இரண்டறக் கலந்து நிற்கும் நல்ல சமுதாயத்தை உருவாக்கினால் மட்டுமே, அரசியலில் மட்டுமல்ல; ஒட்டுமொத்த சமுதாயத்தில் உள்ள துஷ்டர்களை விரட்டி அடிக்க முடியும். இதுவே நாம் செய்ய வேண்டிய முதல் கடமை.

வன்முறை என்பது நெருப்பைப் போன்றது. பாரபட்சம் காட்டாது எல்லாவற்றையும் பொசுக்கும் நெருப்பு. எதிரிகளாகக் கருதுவோரை நோக்கி அரசியல்வாதிகள் ஏவிவிடும் வன்முறை, திரும்ப ஏவிவிட்ட அவர்களையே தாக்குகிறது. இது கத்தி எடுத்தவன் கத்தியாலேயே சாவான் என்கிற கதைதான். காவல்துறை இப்போதேனும் விழித்துக் கொள்ளட்டும். அவர்கள் பாரபட்சமில்லாமலும், ஆளுகிறவர்களுக்குத் துணை போகாமலும் இருக்க வேண்டியது முக்கியம். இல்லையேல், வருங்கால அரசியலில் நாட்டு வெடி குண்டுகளுக்



-அரசியலுக்கு வரவேற்கும்
இல.கணேசன்

குப் பதிலாக, ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகளையும் கிரிமினல் அரசியல்வாதிகள் சந்திக்க நேரிடும்.

ஒரு காலத்தில் நேரு, படேல், ராஜாஜி, காமராஜர், கக்கன் என்று நல்லவர்கள் அரசியலில் இருந்தார்கள். அரசியலும் எளிமையாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தது. ஆனால், இன்று பகட்டு, படாடோபம், வீண் கௌரவம் என்று உலவி வரும் அரசியல்வாதிகள் அதிகமாகி விட்டார்கள். அரசியலும் வியாபாரம் போல் ஆகிவிட்டது. வியாபாரம் என்று வந்துவிட்டால் போட்டி, பொறாமை, வெட்டு, குத்துதானே! இந்த நிலை மாற, தியாக மனப்பான்மையும், சேவை மனப்பான்மையும் கொண்ட நல்லவர்கள் அரசியலுக்கு வர வேண்டும். நல்லவர்கள் வரத் தயங்கினால், கிரிமினல்களே அந்த வெற்றிடங்களை நிரப்புவார்கள். ஊடகங்களும், நல்ல அரசியல்வாதிகளை ஊக்குவிக்கும் வண்ணம் செய்திகள் வெளியிட வேண்டும்.

அரசியலில் ஈடுபட இன்று பணம் நிறையத் தேவையாக இருக்கிறது. அரசியலில் பணத்தின் ஆதிக்கத்தைக் குறைக்க வேண்டும். தேர்தலில் போட்டியிடுபவர்கள் மிகக் குறைந்த அளவே பணம் செலவழித்தால் போதும் என்ற நிலை வர வேண்டும். தேர்தல் விளம்பரங்களுக்குப் பணம், தேர்தலில் தில்லுமுல்லு செய்ய குண்டர் படை என்றும், தேவை வரும்போது கட்டப் பஞ்சாயத்து, கள்ளச் சாராயம், பொய் புரட்டு என்றும் காவல் துறையின் துணையோடு அரசியல்வாதிகள் அராஜக ஆட்டம் ஆடி விடுகிறார்கள். நமது தேர்தல் கமிஷன் இந்த விஷயத்தில் சீறும் பாம்பாக இருக்கிறதே தவிர, பாயும் புலியாக மாறவில்லை. அதற்குரிய அதிகாரங்களும் தரப்படவேண்டும். எனவே, நடுநிலையான காவல்துறையோடு, நல்லவர்கள் அரசியலுக்கு வரும் பட்சத்தில், அதே சமயம் பணத்தின் ஆதிக்கம் அரசியலில் குறையும்போது, கிரிமினல்களுக்கு அரசியலில் இடமே இருக்காது; வன்முறைகளும் விடை பெற்றுக் கொள்ளும்'' என்கிறார் இல.கணேசன்.

- ப்ரியன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com


பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.



ரஜினி காட்டிய பிடிவாதம்

"பெங்களூரில் வசித்தபோது, ஒரு நாள் நான் ஒரு பாறையையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதில் ஸ்ரீ ராகவேந்திரரின் உருவம் என் கண்களுக்குத் தெரிந்தது. அப்போது, 'நீ சென்னைக்குப் புறப்பட்டுப் போ!' என்று ஒரு குரல் என்னுடைய காதுகளில் ஒலிப்பதுபோல உணர்ந்தேன். பாறையில் இருந்த ஸ்ரீ ராகவேந்திரரின் உருவம் எனக்கு ஆசி கூறுவதுபோல இருந்தது. நான் அதன் பிறகுதான் பெங்களூரிலிருந்து சென்னைக்கு வந்தேன். நடிப்புப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தேன். என் குருநாதர் கே.பி.சாரின் மூலமாகத் திரை உலகில் அறிமுகமானேன். ஸ்ரீ ராகவேந்திரரின் அருள் கிடைத்ததால்தான், எனக்கு இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை அமைந்திருக்கிறது'' என்று ரஜினி அடிக்கடி என்னிடம் கூறுவார்.

எஸ்.பி.முத்துராமன்



இப்படி மகான் ஸ்ரீ ராகவேந்திரர் மீது அளவில்லாத பக்தி கொண்ட ரஜினி, ஒரு நாள் ''ராகவேந்திரர் வாழ்க்கையை திரைப்படமாக எடுக்க வேண்டும்; அந்தப் படத்தில் அந்த மகானின் கதாபாத்திரத்தை நானே ஏற்று நடிக்க வேண்டும்'' என்று சொன்னபோது, ஸ்ரீ ராகவேந்திர சுவாமி மீது கொண்ட பக்தி காரணமாக ஆர்வத்தில் ஏதோ சொல்கிறார் என்றுதான் நினைத்து, ''சரி! பார்க்கலாம்'' என்று கூறி மழுப்பினேன்.

சில வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் ரஜினி, ''நான் தொண்ணூற்று ஒன்பது படங்கள் நடித்துவிட்டேன்; என்னுடைய நூறாவது படம், என் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அது ஸ்ரீ ராகவேந்திருடைய வாழ்க்கையாக இருக்குமானால், அதைவிட மகத்தான பேறு எனக்கு வேறு இருக்க முடியாது. அந்தப் படத்தை கே.பி. சார் எடுக்க வேண்டும்; நீங்கள்தான் இயக்க வேண்டும்'' என்றார். எனக்கு ரஜினியின் ஆர்வம் நன்றாகப் புரிந்தது. ஆனால், எனக்குள்ளே சில தயக்கங்களும் இருந்தன. அது குறித்து ரஜினியிடம் நான் வெளிப்படையாகவே சொன்னேன்.


ஸ்ரீ ராகவேந்திரர் போன்ற அமைதியே உருவான மகானாக ரஜினி நடித்தால், அதை ரசிகர்கள் ஏற்றுக்கொள்வார்களா? ஓர் ஆன்மிகவாதியின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் படமாக எடுத்தால், அது வர்த்தக ரீதியில் வெற்றி பெறுமா என்கிற தயக்கங்களுடன், தனிப்பட்ட முறையில் உண்டான இன்னொரு தயக்கம், இப்படிப்பட்ட ஒரு படத்தை என்னால் இயக்க முடியுமா என்பது. காரணம், நான் நிறைய சமூகக் கதைகளைப் படமாக எடுத்திருக்கிறேன் என்றாலும், புராணக் கதைகளை எடுத்தது இல்லை. அது மட்டுமில்லாமல், நான் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். எனவே என்னால் இந்தப் படத்தை இயக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை என்று ரஜினியிடம் சொல்லிவிட்டேன். அப்படியா என்று கேட்டுக்கொண்டு, மேலே எதுவும் சொல்லாமல் புறப்பட்டுச் சென்றுவிட்டார் ரஜினி.



ஆனால், அவர் சும்மா இருக்கவில்லை. அடுத்து கவிதாலயா அலுவலகத்துக்குச் சென்று, இயக்குநர் பாலசந்தர் சாரைச் சந்தித்திருக்கிறார். அவரிடம், தன்னுடைய நூறாவது படம் ஸ்ரீ ராகவேந்திரரின் வாழ்க்கையாக இருக்க வேண்டும். அந்தப் படத்தில் தான் அந்த மகானின் பாத்திரத்தில் நடிக்க வேண்டும்; அதை கவிதாலயா நிறுவனம் தயாரிக்க வேண்டும் என்ற தன் விருப்பத்தைச் சொல்லிவிட்டு, ''எஸ்.பி. முத்துராமன் இந்தப் படத்தை இயக்குவதற்குத் தயங்குகிறார். அவரிடம் நீங்கள்தான் பேசி எப்படியாவது சம்மதிக்க வைக்க வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதெல்லாம் முதலில் எனக்குத் தெரியாது. கவிதாலயாவிலிருந்து எனக்கு அழைப்பு வந்து, நான் பாலசந்தர் சாரைப் போய்ப் பார்த்த போதுதான் தெரிய வந்தது.

ரஜினியின் ஆர்வம் காரணமாக

எழுந்திருக்கும் பிடிவாதத்தை உணர்ந்திருந்த நான், அவரிடம் என்னுடைய தயக்கத்தைச் சொன்னேன். பாலசந்தர் சார் விடவில்லை. "ரஜினி, ஸ்ரீ ராகவேந்திரர் மீது கொண்ட பக்தி அளவில்லாதது. அவருடைய பாத்திரத்தில் ரஜினி நடிக்கிறபோது, அவர் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டு நடிப்பார். அதனால், அது ரஜினி படங்களிலேயே மிகவும் மாறுபட்ட ஒன்றாக இருக்கும். ரஜினி ரசிகர்கள் மத்தியில் அந்தப் படத்துக்கு நல்லதொரு வரவேற்பு இருக்கும். கமர்ஷியலாகப் படம் வெற்றி பெறுமா என்று உங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. தயவுசெய்து அது பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். காரணம், ரஜினியின் சென்டிமெண்ட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்துத்தான் நான் இந்தப் படத்தை எடுக்கிறேனே தவிர, இதன் மூலமாக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பது என்னுடைய நோக்கம் இல்லை. கவிதாலயா பேனரில் அந்தப் படத்தை எடுப்பதைப் பெருமையாக நினைக்கிறேன். எனவே, உங்களது இரண்டாவது தயக்கமும் அவசியமில் லாதது" என்றார்.


கே. பாலசந்தர்

கவிதாலயா பேனரில் ஸ்ரீ ராகவேந்திரர் படத்தை எடுப்பதைப் பெருமையாக நினைக்கிறேன்!

"அதெல்லாம் சரிதான் சார்! எனக்கு புராணப் படங்கள் இயக்கிய அனுபவமில்லை. நான் சுயமரியாதை குடும்பத்திலிருந்து வந்தவன் என்பதால், ஸ்ரீ ராகவேந்திரர் பற்றிப் படம் எடுத்தால் அது சரியாக இருக்குமா?" என்றவுடன் அவர், "நீங்கள் கமர்ஷியலாகப் பல வெற்றிப் படங்களைத் தந்த ஓர் இயக்குனர் மட்டுமல்ல, நாவல்களையும் நாடகங்களையும் சினிமாவாக எடுத்த அனுபவமும் உங்களுக்கு உண்டு. நீங்கள் எப்போதுமே ஒரு சிறு வட்டத்தைப் போட்டுக்கொண்டு, அதற்குள்ளே பணியாற்றியவர் இல்லை. எனவே, உங்களால் இந்தப் படத்தை மிகச் சிறப்பாக இயக்க முடியும் என்ற நம்பிக்கை



எனக்கு இருக்கிறது. ஸ்ரீ ராகவேந்திர மகானைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் நான் செய்து தருகிறேன்'' என்றார். அப்புறம் என்ன? உடனே நான் எனது ஒப்புதலைத் தெரிவித்தேன்.

அடுத்து, நான் தமிழ்ப் பட உலகில் மிக அதிக அளவில், மிகவும் அற்புதமான முறையில் புராணப் படங்களை வழங்கிய ஏ.பி.நாகராஜன் அவர்கள் இயக்கிய அத்தனை புராணப் படங்களையும் ஒவ்வொன்றாகப் பார்த்தேன். அதன் மூலமாகப் புராணக் கதைகளை, திரையில் எப்படிச் சொல்ல வேண்டும் என்று ஏ.பி.என். கடைப்பிடித்த திரை இலக்கணம் எனக்குப் புரிந்தது. என்னால், ஸ்ரீ ராகவேந்திரரது வாழ்க்கையைப் படமாக எடுக்க முடியும் என்ற தன்னம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

அந்த மகானின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் பல புத்தகங்களைப் படித்து, அவரைப் பற்றி பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். படத்தின் கதை, திரைக்கதை எழுதும் பொறுப்பை, திரையுலகின் மூத்த எழுத்தாளரான ஏ.எல்.நாராயணனிடம் ஒப்படைத்தோம். அவர் மிக நல்ல முறையில் ஸ்கிரிப்ட் எழுதி முடித்தார். படத்தின் பூஜை, மந்திராலயத்தில் ஸ்ரீ ராகவேந்திரர் ஜீவசமாதி அடைந்த ஸ்தலத்தில் நடந்தது.

முதல் நாள் படப்பிடிப்பில், ஸ்ரீ ராகவேந்திரர் மேக்-அப்பில் செட்டுக்குள் நுழைந்த ரஜினியின் முகத்தில் சாந்தம் ததும்பியது. கேமரா சுழல ஆரம்பிக்க, ஸ்ரீ ராகவேந்திர மகான் நடந்து வருவது போன்ற காட்சி எடுக்கப்பட வேண்டும். ரஜினி முயற்சித்தாலும், அவர் நடையில் இருந்த வேகத்தை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

(பயணம் தொடரும்)

எழுத்து வடிவம்:
எஸ்.சந்திரமௌலி



ரசிகர் மன்ற ராஜாக்கள்-4

தலைவர் வழியில்...

அம்பாசமுத்திரம் அகஸ்தியர்பட்டியைச் சேர்ந்த ஐயப்பன், யாராவது தன்னை 'ஐயப்பா' என்றால் திரும்பிப் பார்க்க மாட்டார். 'ரஜினி ஐயப்பா' என்றுவிட்டாலோ, ஓடோடி வந்து 'சொல்லு கண்ணா' என்று சூப்பர் ஸ்டார் வாய்ஸிலேயே சுருள வைத்துவிடுவார். சிறு வயது முதலே ரஜினி மீது தீவிர ப்ரியம். ''எப்படி இப்படியொரு க்ரேஸ் தலைவர் மேல வந்ததுன்னு தெரியல. ஆனா, வந்துடுச்சே... அதுதான் முக்கியம். அவர் என்னுன்னா எண்ணெயா நிக்க இளைய தலைமுறை நாங்க தவமிருக்கோம். அரசியல்னு இல்ல, எதுல வேணா தலைவர் இறங்கட்டும், அணிவகுக்க நாங்க ரெடி. கண்ணசைவுக்காகத்தான் காத்திருக்கோம்'' என்று உசுப்பேற்றும் ஐயப்பன், கிராமத்தில் வெள்ள காலங்களில் ரஜினி ரசிகர் மன்றம் மூலம் பொதுமக்களுக்கு அயராது உழைத்தவர்; உழைப்பவர்.


''ரஜினி ரசிகருங்க சும்மா பொழுதுபோகாம சுத்தறவங்க கிடையாது. படிச்சு நல்ல வேலைல இருக்கறவங்க. நாலும் யோசிக்கத் தெரிஞ்சவங்க. கட்-அவுட் கட்டுற அதே நேரத்துல, கல்லு மண்ணு சுமந்து முடியாதவங்களுக்கு வீடும் கட்டுவோம்'' என்கிற ஐயப்பன், ''வசதி வாய்ப்பு வந்தா தலைவர் பேர்ல அனாதை ஆசிரமம் ஒண்ணு அமைக்கணும்னு எனக்கு ரொம்ப நாளா ஆசைங்க'' என்கிறார்.

படித்து முடித்த பெரும்பான்மையான இளைஞர்களின் கனவு அரசாங்க வேலைதான். அது கொடுக்கும் வசதி வாய்ப்புகளும், சமூக அந்தஸ்தும், அதிகாரமுமே அரசாங்க வேலை மீது அவர்களை மோகம்கொள்ள வைக்கின்றன. அரசாங்க வேலைவாய்ப்புகள் குறித்து நம்மோடு பேசினார் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) தலைவர் காசி விஸ்வநாதன்.

''டி.என்.பி.எஸ்.சி. மூலம் இளநிலை உதவியாளரிலிருந்து உதவி கலெக்டர் வரை மட்டுமல்லாது, மாநில அரசாங்கத்தின் அனைத்து நிலை ஊழியர்களும் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

ஒருவர் தனியார் நிறுவனத்தின் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், அடித்தட்டுச் சமுதாய மக்களுக்கு ஓர் அளவுக்கு மேல் உதவி செய்ய முடியாது. ஆனால், ஒரு சாதாரண அரசு ஊழியரால் அவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் கிடைக்கும் அளவில்லா உதவிகளைச் செய்ய முடியும். வேலை இல்லாதவர்கள் மட்டும் டி.என்.பி.எஸ்.சி. போட்டித் தேர்வுகளுக்குத் தயாராவதில்லை. வக்கீல்கள், இன்ஜினீயர்கள், ஆசிரியர்கள், காவல் துறையில் வேலை செய்பவர்கள், ஏற்கெனவே அரசு பதவியில் இருப்பவர்கள், வேளாண்மையில் முதுநிலை பெற்றவர்கள், நிருபர்கள்... என எல்லா தரப்பினருமே குரூப் I, II தேர்வுகளுக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

Group I உட்பட எல்லா டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகளையும் முழுக்க முழுக்க தமிழிலேயே எழுதும் வசதி இப்போது வந்திருக்கிறது. நேர்முகத் தேர்வில் கூட அவரவர் விருப்பத்தின்படி, கேள்விகள் அனைத்தும் தமிழிலேயே கேட்கப்படும். தமிழக அரசின் ஓர் அங்கமாகிய டி.என்.பி.எஸ்.சி. மூலம் நடத்தப்படும் எல்லா போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி,



* காசி விஸ்வநாதன்

தமிழ் இலக்கியம், கலாசாரம், வரலாறு, பண்பாடு பகுதிகளிலிருந்தே கேள்விகள் இடம்பெறும்.

டி.என்.பி.எஸ்.சி.யில் பொது, பெண்கள், கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்றோர், முன்னாள் ராணுவத்தினர் என்று எல்லா பிரிவுகளிலும் உள்ஒதுக்கீடு வழங்கியுள்ளதன் நோக்கம், சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அரசாங்க வேலை கிடைக்க வேண்டும்

கிறதே?' என்றால்,

''டி.என்.பி.எஸ்.சி. தேர்வில் முறைகேடு நடப்பதற்கு வாய்ப்புகளே இல்லை. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரின் நேரடி மேற்பார்வையில் விடைத்தாளைத் திருத்துவது, மார்க் பதிவு செய்தல், அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களை வரிசைப்படுத்துதல் என்று எல்லா வேலைகளும் கம்ப்யூட்டர் மூலமே நடைபெறுவதால், நான் நினைத்தால்

"கடின உழைப்புக்குத்தான் கவர்ன்மெண்ட் வேலை!"

என்பதற்காகத்தான். அரசாங்கப் பணிக்கான வாய்ப்புகள் என்பது ஆலமரம் போல் பரந்து, விரிந்து கிடக்கிறது. அர்ப்பணிப்பு உணர்வோடு படித்தால் அரசாங்க வேலை நிச்சயம்'' என்ற காசி விஸ்வநாதனிடம்,

'நடந்து முடிந்த வி.ஏ.ஓ. தேர்வில் பணத்தின் மூலம் முறைகேடுகள் நடந்ததாகக் கூறப்படு

கூட எந்த மாற்றமும் செய்ய முடியாது. எல்லா டி.என்.பி.எஸ்.சி. தேர்வு முடிவுகளும் முழுக்க, முழுக்க மதிப்பெண்கள் அடிப்படையிலேயே வெளியிடப்படுகின்றன. எனவே, கடின உழைப்பு மட்டும் இருந்தால் போதும், கவர்ன்மெண்ட் வேலை உங்களைத் தேடி வந்து சேரும்'' என்கிறார் காசி விஸ்வநாதன்.

– சார்லஸ்

படம் : ஸ்ரீஹரி

இடி



''வீட்டு வேலைக்காரி கொஞ்சம்கூட பயப்படாம என்கூடச் சண்டை போடறாங்க...''

''வீட்டு வேலைக்கு வர்றவங்ககூட என்னை மாதிரியே இருக்கணும்னு நீ நினைச்சா, அது நடக்கற காரியமா விமலா?''

– கே.ஆனந்தன்



''உங்க வீட்ல எல்லாரும் இயற்கை உணவுக்கு மாறிட்டீங்களா, ஏன்?''

''என் மனைவியோட சமையல்தான் காரணம்!''

– ஆர்.சுந்தரராஜன்

சிரிப்ஸ்

● என்.கோமதி, நெல்லை

கிரேஸி, இப்ப எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும். ராமர் பதினாலு வருஷம் காட்டில், கொசுத் தொல்லையை எப்படிச் சமாளித்தார்?

Female Anopheles Mosquitoes, அதாவது வம்புக்கார பெண் கொசுக்கள்... இவை, ராமரிடம் நெருங்காது. காரணம், அவர் ஏக-பத்தினி விரதன் என்பது தெரியும். ஆண் கொசுக்கள் கடிக்கலாமே என்று கேட்கலாம். அவையும் கடிக்காது. காரணம், ஆணோ பெண்ணோ... கொசுக்கள் மனிதனைத்தான் விரும்பிக் கடிக்கும். ராமர் மனிதராக வாழ்ந்த புனிதர். அப்படியே கடித்தாலும், ராமர் சமாளித்துவிடுவார். அவருக்கு வில் power உண்டு.

● ராமாமிர்தம், மும்பை

பொன் வைக்கும் இடத்தில் பூ வைக்கலாமா?

எதுக்கும் உங்க பேங்க் மேனேஜரை ஒரு வார்த்தை கேட்டுடுங்க, 'நகைகள் வைக்கும் ஸேஃப் டெபாஸிட் லாக்கர்ல, நாலு முழம் பூ வைக்கலாமா' என்று.

● பி.சிவா, பாளையங்கோட்டை

நாயின் ஸ்பெஷல் நன்றி. காகத்தின் ஸ்பெஷல் ஒற்றுமை. மனிதனின் ஸ்பெஷல்?

மனிதனின்

காரியத்தைச் சாதித்துக்கொள்ள வாலைக் குழைத்தல் - காக்காய் பிடித்தல்!

● தங்கம், திருவாரூர்

தேவன், கல்கி, தமிலன், சாவி, கடுகு... இவர்களில் யாரைப்போல் தாங்கள் இருக்க விரும்புகிறீர்கள்?

வேண்டுமானால் மேக்கப் போட்டுக் கொண்டு ஜாடையில் இவர்களைப் போல இருக்க முயலலாம். நீங்கள் கூறிய ஐவரும், நகைச்சுவை பஞ்ச பாண்டவர்கள். நானோ நகைச்சுவை பஞ்சத்தில் அடிபட்ட கொஞ்ச பாண்டவன். கௌரவமாக ஒதுங்கியிருந்து, இந்த ஐவரின் எழுத்தைப் படித்து ரசிக்கவே அடியேனால் இயலும். நினைத்தாலும் இவர்களில் யாரைப் போலவும் என்னால் இருக்க இயலாது. வேண்டுமானால் நகைச்சுவை மணக்கும் இந்த பஞ்ச பாண்டவர்களை மணக்கும் பாஞ்சாலியாக இருக்க விரும்புகிறேன்.



● குலசை நதீன், காயல்பட்டினம்

'ஆதாம்-ஏவாள்' காதல் - இன்றைய காதல்... ஒப்பிடுக?

அந்தக் காலத்தில் ஆதாமுக்கு ஏவாளை விட்டால், ஏவாளுக்கு ஆதாமை விட்டால், காதலிக்க வேறு ஆள் கிடையாது. எனவே காதல்

வெற்றி என்று மார்தட்டிக் கொள்ள முடியாது. எதிர்க்க பெற்றோர் இல்லாததால் தோல்வியும் கிடையாது. அவர்கள் காதலுக்கு ஆப்பிள் ஒன்றுதான் சாட்சி. இந்தக் காலத்தில் காதல் ரொம்ப மார்டர்ன் ஆகிவிட்டது. காதலிக்கும் கட்டத்திலேயே ஒவ்வாமை தோன்றினால், காதல் விவகார-ரத்து

ஏப்பெழில் ஏது?

ஆகிவிடுகிறது. சம்பந்தப்பட்டவர்களும் கூலாக ஆப்பிளைக் கடித்தபடி 'Take an apple a day and keep the lover away' என்கிற ரேஞ்சில், அடுத்த காதலுக்குத் தயாராகிறார்கள். இடைப்பட்ட காலத்தில்தான், தானே தடுக்கிவிழும் அளவுக்குத் தாடி வளர்த்துக்கொண்டு, 'வாழ்வே மாயம்... உலகே மாயம்...' என்று பாடி, தத்துபித்தென்று காதலைத் தத்துவமாக்கித் தவித்தார்கள்.



● **ஜே.துரைராஜ், சென்னை**

வணக்கத்துக்கும் பணிவுக்கும் என்ன வித்தியாசம்?

வணக்கம் பணிவைத் தெரிவிக்கும் செயல். பணிவு வணக்கத்துக்குரிய பண்பு.

● **மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்**

'தாய்' என்பதற்கும், 'அம்மா' என்பதற்கும் வேறுபாடு என்ன?


பேச்சு வந்ததால் பாஷை வந்ததா? பாஷை வந்ததால் பேச்சு வளர்ந்ததா? என்ற எதிர் கேள்வியையே இந்தக் கேள்விக்கு பதிலாக வைத்துக்கொள்ளலாம். சரி, ஒரு பேச்சுக்கு, பேச்சு முதலில் வந்தது, பின்பு மொழி அதைத் தொடர்ந்து வளர்ந்தது என்றே வைத்துக்கொள்வோம். தாய் மொழி என்றுதான் சொல்கிறோம். அம்மா பாஷை என்று சொல்வதில்லை. ஆக, 'அம்மா', பிள்ளைக்கு இயல்பான பெண்மணி; 'தாய்', இலக்கணச் சுத்தமான சிரோன் மணி. (வட மொழி 'மாதா'வில் உள்ள முதல் எழுத்து 'மா', 'அம்மா'வின் கடைசி எழுத்து. கடைசி எழுத்து 'தா', 'தாய்'யின் முதல் எழுத்து.)

● **அ.யாழினி பர்வதம், சென்னை**

...........! என்ன விழிக்கிறீர்கள்? மௌனம் என் பதில். இதற்கேற்ப ஒரு கேள்வி கேளுங்கள் பார்க்கலாம்?

கைமாத்தாக ஒரு கோடி ரூபாய் எனக்குத் தர முடியுமா...? என்ன முழிக்கிறீர்கள்...! மௌனம் சம்மதத்துக்கு அடையாளம் என்று எடுத்துக்கொள்ளலாமா? ●

உடைந்த பல்...



அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அப்படிப்பட்ட மனித முகத்தின் அழகைத் தீர்மானிக்கும் காரணிகளாக இருப்பவை பற்களும், தாடைகளும்தான். இவற்றில் ஏற்படும் பிரச்னைகள், செய்ய வேண்டிய முதலுதவிகள், எடுத்துக் கொள்ள வேண்டிய சிகிச்சை முறைகள் குறித்து நம்மோடு பேசினார் ஸ்மைல் கார்டன் பல் மருத்துவமனையின் பல் மருத்துவர் முருகேசன்.

''மனிதர்களுக்குக் குழந்தைப் பருவம், டீன் ஏஜ் பருவம், அடல்ட் பருவம் மற்றும் நடுத்தரப் பருவம் என்கிற நான்கு நிலைகளில் பற்கள் சம்பந்தமான பிரச்னைகள் வருகின்றன. குழந்தைப் பருவத்தில் ஏழு மாதம் முதல் இரண்டரை வருடங்கள் வரை முளைக்கக்கூடிய பால் பற்களில் அதிகமாகச் சொத்தைப் பற்கள் வர வாய்ப்பு உண்டு. குழந்தைகள் பால் குடிக்கும்போது, அதிக நேரம் பாலானது வாயில் தங்க நேரிடுகிறது. இதனால் அதிலுள்ள சுகர் கண்டன்ட், அசிட்டோ ஜெனிக் பாக்டீரியாவை உற்பத்தி செய்கிறது. இந்த பாக்டீரியாக்கள் ராம்பன்ட் கேரிஸ் (Rampant caries) என்கிற சொத்தைப் பற்களை உண்டாக்குகின்றன. பால் மற்றும் உணவுப் பொருட்களை உண்ட பிறகு குழந்தைகளின் பற்களைப் பஞ்சு வைத்துத் துடைப்பதன் மூலமும், வாயைச் சுத்தமாகக் கழுவுவதன் மூலமும் சொத்தைப் பற்கள் வராமல் தடுக்கலாம். மூன்று வயதுக்கு மேலும் கை சூப்புவது, நாக்கைத் துருத்துதல் போன்ற அசாதாரணச் செயல்பாடுகள், குழந்தைகளின் பற்கள் மற்றும் தாடை வளர்ச்சியைப் பாதிக்கின்றன.

குழந்தைப் பருவத்தைவிட டீன் ஏஜ் பருவத்தில் பற்கள் சம்பந்தமான தொந்தரவுகள் அதிகம் வருகின்றன. சரியான கோணத்தில் பற்கள் முளைக்காமை, தாடை சீரான வளர்ச்சி அடையாமல் இருத்தல், விபத்துகளில் பற்கள் உடைவது ஆகிய மூன்று பிரச்னைகள்தான் டீன் ஏஜில் அதிகம். பால் பற்கள் உரிய காலத்துக்கு முன்கூட்டியே விழுவது, பாரம்பரியம் மற்றும் சுற்றுப்புறச் சூழல், மனிதனின் அசாதாரணப் பழக்க வழக்கங்கள்தான் இதற்குக் காரணம். தாடையில் பிரச்னை ஏற்படும்போது, சமச்சீர் செய்வதற்காக Orthopedic மற்றும் Myofunction Appliances சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். விபத்து நேரத்தில் பற்கள், பற்கூழ் (pulp) வரை உடைந்திருந்தால் வேர் சிகிச்சை செய்து crown (கரப்பி)

ஒரு மணி நேரத்தில் சிகிச்சை!

பொருத்திக்கொள்ளலாம். வேர் வரை உடைந்திருந்தால், எந்த நிலையில் உடைந்திருக்கிறது என்பதைப் பொறுத்துச் சிகிச்சை அளிக்கப்படும். பல் வேருடன் உடைந்திருக்கும் பட்சத்தில், அதனை பால் அல்லது சலைன் வாட்டர் இவற்றில் ஏதாவது ஒன்றில் வைத்து, உரிய மருத்துவரை அணுகி ஒரு மணி நேரத்துக்குள் பொருத்திக்கொண்டால் எந்தப் பிரச்னையும் இராது.

அடல்ட் பருவத்தில் முக்கியமான பல் பிரச்னை wisdom toothதான். Wisdom Tooth என்பது கீழ்தாடை மற்றும் மேல் தாடையின் இரு ஓரங்களிலும் கடைசியில் முளைக்ககூடிய பற்கள். இந்தப் பற்கள் முளைப்பதற்குப் போதுமான இட வசதி தாடையில் இல்லாத பட்சத்திலும், அந்தப் பற்களைச் சுற்றியுள்ள ஈறுகளில் உணவுத் துகள்கள் சேர்வதாலும், மேல் பற்களின் அழுத்தத்தாலும், ஈறுகள் வீக்கமடைந்து புண்ணாகின்றன. இதனால் காதுவலி, தலைவலி போன்றவை ஏற்படுகின்றன. இந்நிலையில் பற்கள் வெளியே வர வாய்ப்பிருந்தால் ஈறுகளை நீக்கிக் கொள்ளலாம். இல்லாதபட்சத்தில் Surgical Removal of Impacted Tooth சிகிச்சை மூலம் பற்களை வெளியேற்றிவிடலாம். இவற்றுக்கெல்லாம் முன்பாக பற்களை எக்ஸ்ரே எடுத்துப் பரிசோதித்தல் மிக அவசியம். இந்தப் பிரச்னை வர முக்கியக் காரணம், தாடையில் பற்களின் அமைப்பு சரியான வரிசையில் இல்லாமையே.

நடுத்தர வயது மற்றும் முதிய வயதினருக்கு ஈறுகளில் வீக்கம், பற்களின் வேர் வரை ஈறு இறங்கியிருப்பது, பல் ஆட்டம், ஈறுகளில் இரத்தக் கசிவு, பல் தேய்மானம் போன்றவையே அதிகம் வருகின்றன. வாய் பராமரிப்பில் ஏற்படும் சிக்கல்தான் இதற்கெல்லாம் காரணம். அதிகமான இரத்த அழுத்தத்தின்போது ஈறுகளில் இரத்தக் கசிவு ஏற்படும். அதேபோல் பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் சமயங்களில் எலும்புத் தேய்மானம் ஏற்படுகிறது. இதனால் பற்கள் பொருந்தியிருக்கும் Alveolar boneக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. இப்படி வேறு சில மருத்துவக் காரணங்களாலும் பற்கள் பாதிக்கப்படலாம்.

ஆறு மாதத்துக்கு ஒருமுறை பற்களைச் சுத்தம் செய்வதும், ஈறு பிரச்னைகளுக்கு கம் தெரபி சிகிச்சை செய்வதும், சரியான பின் பற்களுக்கு இடையே உள்ள இடைவெளியை நிரப்ப clip போட்டுக் கொள்வதுமே மேற்கண்ட பிரச்னைகளுக்கானத் தீர்வு.



✱ டாக்டர் முருகேசன்

அதிகமான பால் பொருட்களை உட்கொள்வது, வைட்டமின் A, C, D உள்ள தானியங்களை உணவில் சேர்த்துக்கொள்வது, சாப்பிட்ட முன்னும் பின்னும் வாயை நன்கு சுத்தம் செய்வது, பற்களில் ஒட்டும் தன்மையுள்ள பொருட்களைத் தவிர்ப்பது, புகையிலை, ஆல்கஹால் போன்றவற்றை முற்றிலும் தவிர்ப்பது, சமச்சீர் உணவு போன்றவை பற்கள் சம்பந்தமான தொந்தரவுகள் வராமல் தடுக்கும் பொதுவான வழிமுறைகள்'' என்கிறார் டாக்டர் முருகேசன்.

- கமலி



கல்கி



2007 டிசம்பர் 2
சர்வஜித் கார்த்திகை 16
மலர் : 66
இதழ் : 18

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.


ரௌடிகள் ராஜ்ஜியம்!

'அமைதிப் பூங்கா' என வர்ணிக்கப்பட்டு வந்த தமிழகத்தில், சமீபகாலமாக, அரசியல் பகைமை விளைவான கொலைகளும் கொலை முயற்சிகளும் அடுத்தடுத்து நிகழ்ந்து வருகின்றன; அதிகரித்தும் வருகின்றன. பூண்டி கலைச்செல்வம் கொல்லப்பட்டது; செங்கல்பட்டு நகராட்சி துணைத் தலைவர் குமார் கொலை செய்யப்பட்டது; காங்கிரஸ் தலைவர்கள் கிருஷ்ணசாமி, மயூரா ஜெயக்குமார் ஆகியோர் தாக்கப்பட்டது முதலியவை எல்லாமே வன்முறை கலாசாரத்தை உறுதி செய்கின்றன.

தினகரன் மதுரை அலுவலகம் தாக்கப்பட்டு மூன்று பேர் இறந்து போன சம்பவம் குறித்து இன்னமும் விசாரணை முடியவில்லை; யாருக்கும் தண்டனை அளிக்கப்படவில்லை. விசாரணைக் கைதிகள் ஜாமீனில் வெளிவந்துவிட்டனர். அரசியல் ஆதரவு பெற்ற ரௌடித் தனத்துக்கு, வழக்கை இழுத்தடிப்பது, சாட்சியத்தை அமுக்குவது போன்ற பல விதங்களில் பாதுகாப்பு உண்டு என்பதைத்தான் இந்த நிலைமையும், இதேபோல் கிடப்பில் கிடக்கிற வேறு பல கொலை வெறித் தாக்குதல் வழக்குகளும் உணர்த்துகின்றன.

ஒரு சக மனிதனைக் காயப்படுத்துவதற்கு அபரிமிதமான திமிரும் ஆக்ரோஷமும் தேவை. கொலை செய்வதற்கோ அரக்க குணம் தேவை. இந்தக் குணங்களை விதைத்து, வளர்த்து, பாதுகாத்து, பரவலாக்கும் 'கைங்கர்யத்தை' இன்று நம் நாட்டு அரசியல்வாதிகள் உபதொழிலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதில் தமிழகம் முதலிடத்துக்குப் போட்டியிட ஆரம்பித்துள்ளது.

வீட்டுக்குள் புகுந்து தாக்குவது, சாலையில் வழி மறித்துத்





தாக்குவது, வாக்கிங் போகிறபோது கொலை செய்வது, கட்சி அலுவலகத்துக்குள்ளேயே புகுந்து அடிப்பது என்று சகலவிதமான வித்தைகளிலும் தாங்கள் சளைத்தவர்களல்ல என்று நிரூபித்து வருகிறார்கள் இங்குள்ள அரசியல் தாதாக்கள்.

வன்முறை உபதொழில் என்றால், பணம் பண்ணுவது அரசியல்வாதிகளின் பிரதான தொழில். அந்த நோக்கில் மட்டுமே பதவிக்கு வருகிறார்கள். அப்பதவியைத் தக்கவைத்துக் கொள்ளவும் பலப்படுத்திக் கொள்ளவும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடவும் அடியாள் படையை வளர்க்கிறார்கள். கட்சிகளுக்கிடையேயான 'கணக்குகள்' மட்டுமின்றி உட்கட்சிப் பகைமைப் பழிகளைத் தீர்த்துக்கொள்ளவும் இந்த அடியாள் படை கை கொடுக்கிறது.

சில ஆண்டுகள் சென்று அடியாள் படை ஆட்களே 'அரசியல்வாதி'களாகிவிடுகிறார்கள். அதன் பிறகு அரசியல் சூழலுக்கு என்ன ஆகும் என்பதைத்தான் நாம் இன்று கையைப் பிசைந்தவாறு பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

ஏழைகளும் படிக்காதவர்களும் அதிகம் இருக்கிற நாட்டில் இதுபோன்ற தாதாத்தனங்களுக்கு மக்களின் எதிர்ப்பை எதிர்பார்க்க முடியாது. பயம் காரணமாக, 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்குவதுதான் இயல்பு.

ஆனால், வன்முறைக்கும் ரௌடித்தனத்துக்கும் தரப்படும் அரசியல் அங்கீகாரம், வளர்த்த கடாவாக விரைவில் மாறும். ஜனநாயகத்தைச் சீரழித்து, கொடுங்கோன்மைக்குப் பாதை போடும்.

இந்த அழிவிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டுமானால், கட்சிகளில் இப்போது களை வளர்த்துக்கொண்டிருக்கும் தலைவர்கள், அந்தக் கொடுமையை நிறுத்திவிட்டுக் களை நீக்குதல் என்கிற நற்பணியைத் தொடங்க வேண்டும்.

இதை வற்புறுத்தும் வகையில், வன்முறையில் ஈடுபடும் கட்சிகளுக்குத் தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கும் அதிகாரம் தேர்தல் கமிஷனுக்குத் தரப்படவேண்டும்.

மேலும் பல சீர்திருத்தங்கள் மூலம் தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தி, வேட்பாளர் தேர்வை நெறிப்படுத்தி, உட்கட்சி ஜனநாயகத்தையும் உறுதிசெய்ய முடியுமானால், உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் பிழைத்து, தழைக்கவும் செய்யும். இல்லாது போனால், உலகின் மிகப்பெரிய ரௌடி ராஜ்ஜியமாக இந்தியா உருமாறிவிடும். ●



வட்டமேஜை

சுசும்புராஜின் 'அது' படித்தேன். 'அது', 'இது'வாகிறதோ அல்லது 'இது'வாகாமல் 'அது'வாகவே இருக்கிறதோ... 'அதை'யும் 'இதை'யும் எழுதி நன்றாக மண்டை காய வைத்துவிட்டீர்.

- ம.சங்கரி ரமேஷ், வானூர்

கலப்படத்துக்கு பிள்ளையார் சுழியான இடத்தைச் சுட்டிக் காட்டிய தராசின் பதில் மெகா சூப்பர்!

- எஸ்.ஏ.கேசவன், கு.கழுகாசலபுரம்

இயற்கையையும், சக மனிதர்களையும் இயல்பாக நேசிப்பதுதான் வாழ்க்கை என்பதை மிக அழகாகப் படம் பிடித்து காட்டியிருந்தார் அருண் சரண்யா.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

டாக்டர் ராமதாஸின் நேர்காணல், தமிழக மக்களின் நலன் காக்கும் அருமருந்து.

- முருகானந்தம், திருவைகாவூர்

நேசிப்பதே வாழ்க்கை...

விண்ணை முட்டும் விளம்பர மோகத்தின் அவலநிலைகளை அலசி ஆராய்ந்த விதம் ரியலி டாப்!

- பி.சாய்குரு, மதுரை

'உணவுடன் கூடிய உறைவிடம்' என்ற தமிழக அரசின் திட்டம் பற்றிய ஜெயபாஸ்கரனின் கருத்துக்கள் சிந்திக்க வைத்தன.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

திருத்தவே முடியாத தீராத வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு மட்டுமே 'விவாகரத்து' விதிவிலக்காய் இருக்க வேண்டும். விதிவிலக்கே விதியாகி விடக்கூடாது!

- கல்யாணி, திருநெல்வேலி

பாகிஸ்தான் வழியில் இந்தியா சென்றால் ஏற்படும் விளைவுகளையும், எப்படிச் செயல்பட வேண்டும் என்றும் தாங்கள் கூறிய யோசனைகள் நச்!

- என்.சங்கரதாஸ், விருதுநகர்

ஆனந்தியின் தைரியத்தையும் கல்கியின் பெருந்தன்மையையும் காட்டியது சென்ற இதழின் நாவல் பிறந்த கதை.

- பி.ராஜன், சென்னை

'ஜிம்' குறித்த சாதக பாதக விஷயங்கள் ஜம், ஜம்!

- க.சுந்தர், நெய்வேலி

நோயற்று வாழட்டும் உலகு என்று உலக க்ஷேமம் கருதி

ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்

நடத்தும்

அதிருத்ர மஹாயக்ஞம்

ஹோமங்கள் நடைபெறும் நாட்கள் :

16.12.2007 முதல் 19.12.2007 வரை
(காலை 9.00 மணி முதல் பகல் 1.30 வரை)

ருண, ரோஹ நிவாரணத்திற்காக

1. மூலவர் ஸ்ரீ தன்வந்திரிக்கு தைலாபிஷேகம் ரூ.200 முதல்
   (29.11.2007 to 13.12.2007) (9.00 a.m. to 6.00 p.m.) ரூ.2000 வரை
2. சுமங்கலி பூஜை (16.12.2007 ஞாயிறு) - ரூ.300/-

ஹோமங்களின் பெயர்	நபர்	சங்கல்ப கட்டணம் ரூ.
1. நோய் நிவாரண ஹோமம்	4	500
2. ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்	2	200
3. மஹா சுதர்ஸன ஹோமம்	4	300
4. மஹா ம்ருத்ஞ்சய ஹோமம்	4	500
5. 27 நட்சத்திர பரிகார ஹோமம் (ஒரு நட்சத்திரத்திற்கு ரூ. 100)	1	100

அதிருத்ர மஹாயக்ஞம் (ஜப தர்ப்பணத்துடன்) மேற்கண்ட மற்ற 5 ஹோமங்களிலும், தைல திருமஞ்சனமும் சேர்த்து குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் சங்கல்பம் செய்ய ரூ. 5000 மட்டுமே!

நன்கொடைகள் மற்றும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள :

ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள்

தன்வந்திரி ஆரோக்கிய பீடம்

வாலாஜாபேட்டை - 632 513, வேலூர் மாவட்டம்.


Phone : 04172 - 230274, 230033 Cell : 94433 30203

E-mail : danvantriarokyapeedam@yahoo.co.in Website : muralidharaswamigal.com

குறிப்பு : கோகர்ணா மகாபலீஸ்வரர் ஆலயத்திலிருந்து 51 வேத விற்பன்னர்கள் இந்த ஹோமத்தில் பங்கேற்கிறார்கள். இந்த ஹோமங்களில் 16 விதமான தானங்கள், அர்ச்சகர் ஸம்பாவனை, ப்ராமண போஜனம், ஹோம த்ரவியங்கள் மற்றும் மளிகை பொருட்களுக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

ஆனைக்காரன்

செவக்காட்டுச் சித்திரங்கள்



முன்னாடி ஒரு காலத்தில் ஊர்ல பஞ்சம்னா பஞ்சம் அப்பிடியொரு பஞ்சம். வேல மரம், கருவ மரங்கூட பட்டுப்போச்சு. ஊருக்குள்ள மூக்கா மூக்கா மூக்காவாசிக்கு ஆட்டுக்காரங்க தான். செம்மறியாடும் வெள்ளாடுகளும் தண்ணிக்குத் தவியாய் தவிச்சன. வெள்ளாடாவது கொஞ்சம் தாகம் தாங்கும். செம்மறி அப்பிடி இல்ல. ஒரு நாளைக்கு மூணு தடவை வயிறு நிமிர தண்ணி குடிச்சாத்தான் அதுக்கு உசிரு. அதும் வேற வெங்காத்து வீசுது. ஆடுகள்லாம் செத்து விழுந்தன.

இதனால ஆட்டுக்காரங்கள்லாம் அசலூர்ப் பக்கம் ஆடுகளைப் பத்திட்டுப் போனாங்க. வழில எந்த ஊர்லயும் குளத்தில் தண்ணியே இல்ல. எங்கடா பச்சை தட்டுப்படுதுன்னு இவங்களும் தூர நெடுந்தொலைவுக்குப் போயிட்டாங்க. ஒரு இடத்துல மேற்க இருந்து முந்நூறு, நானூறு கொக்குகள் கூட்டமா பறந்து வந்தன. 'ஏய்ங்கப்பா இம்புட்டு கொக்குகள் வருதுனா அங்க செழிப்பாத்தான் இருக்கும்'னு அங்க போனாங்க. அங்கேயே தங்கி ஆடு மேச்சாங்க.

அது ஊத்துமலை ராசா நாடு. அந்த ராசாவுக்குப் பிள்ளை இல்லை. அவரு ஏகப்பட்ட தானதருமம் செஞ்சுப் பாத்தும் ஒரு பலனும் இல்லை. அள்ளிக் கொடுக்கற ராசாவுக்குப் பிள்ளை இல்லையேன்னு நாடே சோகமா இருந்துச்சு.

இப்படிச் சோகமா இருக்கையில ஆடு மேய்க்கப் போன ஆட்டுக்காரங்கள்ல ஒரு வயசாளி, பட்ட மரத்துல பால் வார்ப்பேன்னு சொல்லிட்டுத் திரிஞ்சாரு. அவரு 'குறி' சொல்றவரு. அவர் சொன்னாத் தப்பாது. ஒருநா இவரு இப்படிச் சொல்லும்போது அரண்மனைக் காவக்காரன் இதைக் கேட்டான். 'இந்தக் கிழட்டுப் பய நம்ம ராசாவுக்குப் பிள்ளை இல்லைங்கறதத்தானே இப்படி மறைபொருளாச் சொல்தாம்'னு கோவப்பட்டு, அந்தப் பெரியவர ராசாட்ட பிடிச்சிட்டுப் போய் நிப்பாட்டினான். ''ராசா, இந்த ஆளு ஊர் முழுக்கப் பட்ட மரத்துல பால் வார்ப்பேன், பால் வார்ப்பேன்னு ஓதுதான்'' அப்பிடின்னான்.

ராசாவும் ''உம்மைப் பார்த்தா வயசாளியாத் தெரியுதே. ஒழுங்கா உண்மையைச் சொல்லும், இல்ல உம்ம தலையைச் சீவிருவேன்''னாரு. ''ராசா, நான் எங்க நாட்ல அருள் வாக்குச் சொல்லுதவன். இன்னும் எங்க ஆளுங்க தெக்கேயிருந்து ஆயிரக்கணக்குல ஆடுகளோட கூட்டம் கூட்டமா வந்துக்கிட்டு இருக்காங்க. உன் நாடே நிறையப் போவுது. நீயும் உன் குடிபடைகளும் எங்கள காபந்து பண்ணீங்கன்னா, இன்னிலிருந்து மூணாம் பங்குனியில உனக்கு ஆம்பிளைப் பிள்ளை பிறக்கும்''னு குறி சொன்னாரு.

குறிகேட்ட ராசா தன் நாட்டில் புல் பூண்டுக செழிக்கும்படிச் செஞ்சாரு. தண்ணி குடிக்க ஆடுகளுக் குன்னு தனிக்குளம் ஒதுக்கி விட்டாரு. சொன்னபடியே மூணாம் பங்குனியில ராசா வுக்குப் பிள்ளை பிறந்தது. அதனால ரொம்ப சந் தோஷப்பட்டு, ''ஆட்டுக் காரப் பெரியவர அழைச் சுட்டு வாங்க''ன்னார்.

காவல்காரங்க போய்ப் பாத்தா ஆட்டுக்காரங்கள் லாம் அவங்க சீமைக்கே ஆடுகளை ஓட்டிட்டுப் போய்ட் டாங்க. ஏன்னு கேட்டாக்க, 'அவங்க பூமில பஞ்சம் தீர்ந்து, மழை பேஞ்சு செழிப்பாயிருச்சு. வெளியூர்ல போய் எப்படிச் சுகமா இருந்தாலும் சொந்த மண்ல வாழ்றது மாதிரி இருக் குமா?'ன்னு சொல்லப்பட்டது. இந்தத் தகவலை ராசாட்டப் போய்ச் சொன்னாங்க. உடனே ராசா மனம் மகிழ்ஞ்சிருச்சு. நம்மளுக்கு நல்லது சொன்னவங்களுக்கு மருவாதி பண்ண முடியலையேன்னு வருத்தப்பட்டார். ஆனாலும்', ஒரு ஆனைல பெட்டி நிறைய பொன்னும் பொருளும் ஏத்தி, படைவீரர்களையும் அனுப்பிவிட்டார்.

கோயில்!

● வே. இராமசாமி



இப்படி வந்த படைகளுக்கும் ஆட் டுக்காரங்களுக்கும் சண்டை வந்திருச்சு. இந்தச் சேதியக் கேட்டுட்டு வய சாளி, இளந்தாரிகளைத் திரட்டிட்டு வந்து படைகளை எதுத்தடிச்சார். படை மேற்கானிக்க ஓடிருக்கு. இவங்க அவங் களை விரட்டிருக்காங்க. ஓடுனவங்க

4



சும்மா ஓடலை. இவங்களுக்குத் தரப்படாதுன்னு தங்க நகைகள் கொண்டாந்த பெட்டிய கிணத்துக்குள்ள போட்டுட்டுப் போயிட்டாங்க.

அப்படியே ஓடுன படைகள் ஆனைக்காரன் கோயில் இருக்கிற இடத்துக்கு வரும்போது, படைக்காரங்களுக்கு கண்ணுமுழி தெரியாமப் போயிருச்சாம். அவங்கள்லாம் மனந்திருந்தி வந்து வயசாளிட்ட வாக்குக் கேட்டாங்க. அவர் சொன்னாரு, ''உங்களுக்கு ஒளி கிடைக்கும். ஆனால், அந்த இடத்தில் நீங்க கோட்டை கட்டி எங்க மக்களைக் காவல் காத்து நிக்கணும்''னாரு. அதும்படியே செஞ்சாங்க. அதுதான் பிற்காலத்துல ஆனைக்காரன் கோயிலா ஆயிருச்சு.

முன்னாடில்லாம் அந்தக் கோயிலுக்குக் கதவு கிடையாது. அங்க சுட்ட செம்மண்ணுல ஒரு பெரிய யானை செஞ்சு வெச்சிருந்தாங்க. எப்படித்தான் செஞ்சாங்களோ - என்ன மாதிரிதான் செஞ்சாங்களோ... நிஜ யானை மாதிரித்தான் அதுவுமிருந்திச்சு. அதுக்கு ஒரு கேடு வந்தது. எருமை வடிவத்துல. கோயிலுகிட்ட ராமநாதபுரம்னு ஒரு ஊரு இருக்கு. இங்க ஆட்டுக்காரங்கன்னா - அங்க ஒரே எருமை மாடு வெச்சிருந்தவங்களா ரொம்பப் பேரு வாழ்ந்துட்டு இருந்தாங்க.

அந்த ஊரு கரை முழுக்கக் குளத்துல தண்ணி குடிச்சிட்டு எருமை மாடுகளா நிக்கும். கரையே தெரியாது. அதுல ஒரு பொல்லாத எருமை கிடந்தது. அந்த எருமைக்குக் கொம்பு கரடுமுரடா இருந்துச்சு. பொதுவாகவே எருமைக் கொம்பு இங்கிட்டு ஒன்னும் அங்கிட்டு ஒன்னுமா, ஒரு ஒழுங்கு முறையாவே இருக்காது. பசு மாடுக மாதிரி ஓர் அமைப்பா இருக்கான்னா - இல்லை.

இப்படிப்பட்ட எருமை, ஆனைக்காரன் கோயிலுகிட்ட மேயும்போது இந்த மண் யானைச் சிலையைப் பார்த்தது. இது எவனோ நம்மளைவிடப் பெருசா இருக்கானேன்னு மிரண்டு ஓடிருச்சு. கொஞ்சந் தள்ளிப் போய் மண்டையைத் தூக்கிப் பாக்குது. பிறகு கிட்டத்துல போயிப் பாக்குது. அந்தானிக்கு மண் யானைச் சிலையை முட்டி முட்டித் தள்ளி உடைச்சிருச்சு. மத்த எருமைகளும் வந்து மிதி மிதின்னு மிதிச்சு சிலையை நொறுக்கி போட்டுட்டுப் போயிருச்சுங்களாம்.

அதுக்குப் பிறகு அதே மாதிரி யானையைச் செய்யவே முடியலையாம். என்ன செய்யறதுன்னு சின்ன யானைச் சிலை ஒன்னு செஞ்சு நிறுத்தினாங்களாம்.

இப்பவும் கோயில் கொடை அன்னிக்குச் சாமியாடும்போது ''காரானை போரானை கருத்த மத யானை''ன்னு சொல்லிச் சாமியாடுவாங்க. அதோடும் இல்லாம சாமியாடிகளும் மத்தவங்களும் கெட்ட வார்த்தையில வைவாங்க. என்னடா இது? ஒருத்தனை ஒருத்தன் வைதாங்களேன்னா, இந்த வசவுலதான் அந்தக் கோயிலே உருவாச்சு!

(மண் வாசம் வீசும்)

தூறல் கவிதை

கிட்டிப்புல் தொலைத்த இளசுகள்
கிரிக்கெட் ஆடுகிறார்கள்
விளை நிலத்தில்



-சாந்தி பெல்சன்

நம்முள்ளும் சிலிர்ப்பு!





• புத்தக விமர்சனம்

ஆஹா, அலாஸ்கா! - சிவசங்கரி, வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17, விலை ரூ.30

அலாஸ்கா எங்கே இருக்கிறது, எப்படிச் செல்வது, தேவையான முன்னேற்பாடுகள், அலாஸ்காவின் நில அமைப்பு, அரசியல், சமூக வாழ்க்கை போன்ற பல விவரங்களுடன், தமது அலாஸ்கா பயண அனுபவங்களை அழகாக வர்ணித்துள்ளார் சிவசங்கரி. கப்பலின் ஒவ்வொரு தளத்தையும் விவரிக்கும்போது, நம்மையும் உடன் அழைத்துச் சென்றுவிடுகிறார்! பனியடர்ந்த க்ளேஸியரில் அவர் நடக்கும்போது நமக்குள்ளும் சிலிர்ப்பு!

எல்லை சாமிகள் பாகம் 2 - குள.சண்முகசுந்தரம், விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 02, விலை ரூ.70

உயிர்களைக் காக்கவும், விளைச்சல் பெருகவும் வேண்டுதல் நடத்தும் பல ஊர்களில் உள்ள எல்லைச் சாமிகளைத் தேடி, நேரில் சென்று, பூஜைகள், திருவிழாக்கள், தல வரலாறுகளை புகைப் படங்களுடன் படம் பிடித்துக் காட்டுகிறார் நூலாசிரியர். கிராம மக்கள் பலர், தாங்கள் வணங்கும் சாமிக்காக, தங்களுடைய சுய விருப்பங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, கடவுள் அவதாரங்களோடு ஐக்யமாகி வாழ்வதை அறியும்போது பிரமிப்பு உண்டாகிறது.

சிலையும் நீயே! சிற்பியும் நீயே! - கீதா தெய்வசிகாமணி, திருவரசு புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17. விலை ரூ.75

பிரபல நாளிதழ் ஒன்றில் வெளிவந்து, வாசகர்களின் வரவேற்பைப் பெற்ற தன்னம்பிக்கைத் தொடர். தேவையற்ற எண்ணங்கள், சொற்கள், செயல்கள் போன்ற கற்துகள்களை நீக்கி, நேர்த்தியாக நம்மைச் செதுக்கிக்கொண்டால், சாதனைச் சிலையாகலாம் என்ற கருத்தை மையமாக வைத்து, வெற்றி இலக்கினை அடைய வழிகாட்டுகிறார் கீதா தெய்வசிகாமணி.

பிரபஞ்சத்தில் ஒரு துளி - முகிலன், வம்சி புக்ஸ், 84, மத்தலாங்குளத் தெரு, திருவண்ணாமலை. விலை ரூ.50

சமூக நிகழ்வுகளை மட்டுமின்றி இயற்கையையும் அழகிய ஹைக்கூ கவிதைகளாக அள்ளித் தந்திருக்கிறார் முகிலன். பொருத்தமான புகைப்படங்கள் நூலுக்குக் கூடுதல் சிறப்பு.

– மித்ரா



குருபெயர்ச்சி

தஞ்சை பரத்வாஜ்

தனுசு

தனுசு ராசி நேயர்களாகிய உங்களுக்கு, இதுநாள் வரை குரு பகவான் ராசிக்கு 12ம் இடத்தில் சஞ்சாரம் செய்தார். 16.11.2007 முதல் ஜென்ம ராசியில் சஞ்சாரம் செய்திருக்கிறார். ஜென்ம ராசியில் குரு என்றவுடன் கவலைப் படாதீர்கள். அது குருவுடைய சொந்த இடம் ஆகும். இதில் குரு பகவான் ஆட்சி பெற்று ராசிக்கு 5ம் இடம், 7ம் இடம், 9ம் இடத்தைப் பார்வையிடுகிறார். அதனால் கடந்த காலத்தில் ஏற்பட்ட விரயங்கள் இனிமேல் இருக்காது. சிலருக்கு வெளியூர்ப் பிரயாணத்தை ஏற்படுத்தி மனக் குழப்பத்தைப் போக்குவார். உடல் ஆரோக்கியம் சீராகும். எண்ணங்கள் யாவும் ஈடேறும். உறவினர்களிடத்தில் நல்ல மதிப்பு மரியாதை கிட்டும். நீண்ட காலம் வராத நிலுவைகள் வந்து சேரும். வழக்கு வெற்றி அளிக்கும். பணக் கஷ்டம் இருக்காது. பூமி /வீடு வாங்க யோகத்தை அளிப்பார். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். தடை விலகித் திருமணம் கைகூடும். கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த இடைவெளி சரியாகும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். புதிய தொழில் துவங்க ஏற்ற தருணம். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். தந்தை வழி சொத்துகள் கிட்டும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். மனைவி வழியில் நன்மை உண்டு. மனைவியின் உடல்நிலை சீராகும். பூர்வீக வழியில் இருந்து வந்த பிரச்னைகள் தீர்ந்து, சொத்து பாகப்பிரிவினை ஆகும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். கல்வியில் அதிக மதிப்பெண்கள் கிடைத்து, அதற்கு ஏற்ற கல்வியைப் பயிலக்கூடிய வாய்ப்பு கிட்டும். குடும்பப் பெண்களுக்கு நல்ல மதிப்பும், பாராட்டும் கிட்டும். சமூக சேவகர்களுக்கு மன தைரியம் ஏற்படும். அரசியல் தலைவர்களுக்கு நல்ல எதிர் காலம் சாத்தியமாகும். கலைஞர்கள் ஏற்றம் பெறுவார்கள். அச்சுத் துறை, எழுத்துத்

துறையில் உள்ளவர்கள் பாராட்டுகளைப் பெறுவார்கள். விவசாயத் தொழில் செய்து வருபவர்களுக்கு நன்மை உண்டாகும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். ரியல் எஸ்டேட், கட்டடத் தொழில் ஏற்றம் பெறும். வியாழன்தோறும் ராகவேந்திரர் சுவாமியை வழிபட்டு வரவும்.

மகரம்

மகர ராசி நேயர்களுக்கு இது நாள் வரை குரு பகவான் ராசிக்கு 11ல் சஞ்சாரம் செய்தார். தற்பொழுது 16.11.2007 முதல் ராசிக்கு 12ம் இடம் என்கிற விரய ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்து வருகிறார். விரய ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிற குரு பகவான், தம் சொந்த இல்லத்தில் இருப்பதால் அது சுப விரயம் உண்டாகும். சிலருக்குப் பத்திரிகைகளால் நல்ல பெயர் உண்டாகும். குழந்தைகள் வழியில் சுபச் செலவுகள் உண்டாகும். பூமி / வீடு வாங்கும் யோகம் உண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். சிலருக்கு எதிர்பாராத தன ஆதாயம் கிட்டும். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தாயின் ஆரோக்கியம் சீராகும். வழக்கு வெற்றி அளிக்கும். சிலருக்குப் புதிய வீடு வாங்க நேரிடும். சத்ரு தொல்லை நீங்கும். பணக்கஷ்டம் தீரும். வராத கடன்கள் வசூலாகும். வியாபாரிகளுக்குத் தொழில் துறையில் இருந்து வந்த மந்த நிலை மாறி வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் இருந்து வந்த பளு நீங்கும். பிரிந்து வாழ்ந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து வாழ்வார்கள். ஏற்றுமதி-இறக்குமதித் தொழில் செய்பவர்கள் நல்ல பலனை அடைவார்கள். கலைஞர்களுக்கு நல்ல காலம். சமூக சேவகர்களுக்கு நல்ல பாராட்டுக் கிட்டும். அரசியல்வாதிகளுக்கு போட்டி, சூழ்ச்சி, பொறாமை போன்றவை இருக்கும். ஆதலால் ஜாக்கிரதையாக செயல்படவும். இயந்திர உற்பத்தித் தொழிலில் சற்று மந்த நிலை நீடிக்கும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும். குரு சயன ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதால் மனக் கவலை தீரும். வியாழக்கிழமைதோறும் குரு பகவானுக்குத் தீபம் ஏற்றி வரவும். சனி, செவ்வாய், வியாழக்கிழமைகளில் நவகிரக வழிபாடு செய்து வரவும்.



பலன்கள்!

...தொடர்ச்சி **15.11.2007 முதல் 30.11.2008 வரை...**

கும்பம்

கும்ப ராசி நேயர்களுக்கு குரு பகவான் இதுநாள் வரை பத்தாம் இடத்தில் சஞ்சாரம் செய்தார். தற்பொழுது 16.11.2007 முதல் ராசியில் 11ம் இடத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கிறார். 11ம் இடம் என்பது லாபஸ்தானம், மூத்த சகோதர சகோதரிகளைக் குறிக்கும் இடம் ஆகும். ராசிக்குத் தன லாபாதிபதியாகக் குரு பகவான் விளங்குவதால், பொருளாதார மேன்மையை அளிப்பார். தொழில் துறையில்

ஏன் அகத்தியன்?

மறுபடி வந்துவிட்டார் அகத்தியன். இந்த முறையும் இனிமையானதொரு காதல் கதையோடுதான் வந்திருக்கிறார். "நெஞ்சத்தைக் கிள்ளாதே - இதுதான் படத்தோட தலைப்பு. மகேந்திரன் சார் மேல எனக்கு மகத்தான மதிப்பு உண்டு. அதுதான் அவர் பண்ணின படத் தலைப்பையே என் படத்துக்கும் வச்சிட்டேன். அடிதடி, அதிரடி இல்ல என் பாணி. காதலும் காதல் சார்ந்த வாழ்க்கையும்தான் என் சினிமாக்கள். இதுலயும் நான் வேறுபடல. காதலே மென்மையான ஒரு விஷயம். அதை இன்னும் மென்மையா கையாண்டிருக்கேன். காதல் படங்கள் தமிழில் அதிகம். ஆனா காதலுக்கான படங்கள் குறைவு. என் படம் காதலுக்குப் பிரத்யேகமானதா இருக்கும்ங்கறதை உறுதியா சொல்லிக்குறேன்" என்று கூறும் அகத்தியன், ரசிகர்களின் நெஞ்சைத்தைக் கிள்ள புதுமுகங்களைத்தான் நாடியிருக்கிறார். ஏன் சென்னை - 28 நாயகியும் தம் மகளுமான விஜயலக்ஷ்மி அவர் கண்களுக்கு அகப்படவில்லை?



அதிக லாபத்தை அளிப்பார். புதிய தொழில் துவங்க கால வாய்ப்பு வந்து சேரும். மனத்தில் தைரியம், தன்னம்பிக்கை மிகுந்து காணப்படும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படலாம். சுபகாரியம் கைகூடும். சிலருக்குத் திருமணம் கைகூடும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். பூர்வீகச் சொத்துகள் கைக்கு வந்து சேரும். சிலருக்கு வீடு / மனை வாங்கும் யோகம் கிட்டும். மனைவி வழியில் நல்ல உதவி வந்து சேரும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு, வேலை மாற்றம் உண்டாகும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிட்டும். உடல் ஆரோக்கிய பாதிப்பு இருக்காது. மனக் குழப்பம் தீரும். எழுத்தாளர்களுக்கு நல்ல மதிப்பு, மரியாதை கிட்டும். சிலருக்குப் பட்டம், பதவி தேடி வரும். சமூக சேவகர்களுக்குப் பாராட்டும் மதிப்பும் கிட்டும். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் பெருமானை வழிபட்டு வந்தால் நலம் உண்டாகும்.

மீனம்

மீன ராசிக்காரர்களாகிய உங்களுக்கு குருபகவான் இதுநாள் வரை ராசிக்கு 9ம் இடத்தில் சஞ்சாரம் செய்தார். 16.11.2007 முதல் ராசிக்கு 10ம் இடத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கிறார். பத்தாமிடம் என்று சொன்னவுடன் பயப்படத் தேவையில்லை. பத்தில் குருபகவான் ராசிக்கு 10ல் சஞ்சாரம் செய்து காஜகேசரி யோகம் ஆகும். ஆதலால், சிலருக்குப் பொறுப்பான பதவி யோகம் கிட்டும். சிலர் செய்யும் வேலை விட்டுப் புதிய வேலைக்குப் போக நேரிடும். குருபகவான் சொந்த ராசியில் சஞ்சாரம் செய்வதால் நற்பலனை அளிக்கும். குரு பகவான் தன ஸ்தானத்தில் பார்வையாளருக்குப் பணப் பற்றாக் குறையைப் போக்குவார். குடும்ப வளம் நன்றாக இருக்கும். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். தாயின் உடல்நிலை சீராகும். வழக்கு முடிவுக்கு வரும். கடன் உதவி கிட்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்கும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். அரசியல் வாதிகளுக்கு நல்ல பதவி கிட்டும். சிலருக்குப் பதவி போய் மறு பதவி வந்து சேரும். காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு விருதுகள் கிட்டும். சிலருக்கு எதிர்பாராத பாராட்டும் வந்து சேரும். வியாழக்கிழமைதோறும் குரு பகவானுக்குத் தீபம் ஏற்றி 9 முறை வலம் வந்து குரு மந்திரம் படித்து வர, நற்பலன் உண்டாகும். வியாழன்தோறும் தட்சிணாமூர்த்தி சுவாமியை வழிபட்டு ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய, மன நிம்மதி ஏற்படும். ●



அடுத்த நரேன் ரெடி!

கார் ரேஸ் போட்டிகளில் தமிழர்களின் பங்களிப்பு நாளுக்கு நாள் கூடிக்கொண்டு வருகிறது. நரேன் கார்த்திகேயனுக்குப் பிறகு தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தரத் தயாராக இருக்கிறார் கருண் சண்ட் ஹோக். அடுத்த வருடம் நடக்கவுள்ள ஃபார்முலா ஒன் (எஃப் 1) ரேஸில் கலந்து கொள்ள இவருக்கு ஓர் அருமையான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எஃப் 1 என்பது கார் ரேஸின் உயர் ரக போட்டியைக் குறிப்பதாகும். எஃப் என்றால் ஃபார்முலா. அதாவது இந்தப் போட்டிக்கான விதிமுறைகளுக்குக் கட்டுப் பட்டுத் தேர்ந்தெடுக்கும் அணிகளை எஃப் 1 அணிகள் என்று கூறுவார்கள். இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் 1946 முதல் ஃபார்முலா 1 போட்டிகள் நடத்தப்படு கின்றன. கிரிக்கெட்டுக்கு மட்டுமே முக்கி யத்துவம் உள்ள நம் நாட்டில், கார் ரேஸ் என்பது யாருக்கும் பழக்கமில்லாத ஒரு விளையாட்டு. ஆனால், இதர நாடுகளில் இந்த விளையாட்டுக்கு ஏராளமான மவுசு உண்டு. எஃப் 1 போட்டிகளில் பத்துக்கும் மேற்பட்ட அணிகள் கலந்துகொள்ளும். அதில், ரெட் புல்ஸ் அணியின் சார்பாக உலகச் சாம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்துகொள்ள கருணுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

2000-ம் வருடம் 7 முறை தேசிய சாம்பியன் ஆனார் கருண். அதன்பிறகு அவர் கடல் தாண்டி சாதிக்கக் கிளம்பிவிட்டார். ஃபார் முலா ரேஸ்களில் இந்தியாவின் அடையாளமாக இருக்கும் நரேன் கார்த்திகேயனின் நட்பு, கருணின் சாதனைகளுக்கு மேலும் ஊக்கம் கொடுத்தது. 'நரேனின் பதின்மூன்று வருட அனுபவங்கள் எனக்கு மிகவும் உதவிகர மாக இருந்தன. நம் ஊரைச் சேர்ந்தவரிடம் சென்று உதவிகள் கேட்பது, எனக்குச் சௌகரியமாக இருந்தது' என்கிறார் கருண்.

ரேஸ் கார்களின் கொள்ளளவு அதிக பட்சமாக எழுபத்தைந்து கிலோதான். அதனால் 72 கிலோவுக்கு மேல் எடை உள்ளவர்களை ரேஸில் பங்குபெற அனு மதிக்கவே மாட்டார்கள். கருணும் தொடர்ந்து எழுபதுக்குக் கீழே தன் எடை யைப் பராமரித்து வருகிறார்.

ஓட்டுவது கார் என்றாலும் சைக்கிளிங் செய்வது ரேஸ் வீரர்கள் மேற்கொள்ளும் அடிப்படைப் பயிற்சியாகும். 'தினமும் ஐம்பது கிலோமீட்டர் சைக்கிள் ஓட்டி பயிற்சி பெறுவேன்' என்கிறார் கருண். வெளிநாடு சென்றால் இந்தியர்கள் படும் பொதுவான பிரச்னை சாப்பாடு. தமிழ் நாட்டுச் சாப்பாட்டுக்காக கருண் ஏங்கிய போது நரேன் கார்த்திகேயனின் மனைவி உதவிக்கு வந்திருக்கிறார். 'வெளிநாட்டில் உட்கார்ந்துகொண்டு சாம்பார், ரசம் சாதம் சாப்பிடுவது அலாதியானது. சாப்பாட்டுப் பிரச்னை தீர்ந்துவிட்டால், எளிதில் ரேஸில் கவனம் செலுத்தலாம்' என்று சொல்லிச் சிரிக்கிறார் கருண். விஸ்வநாதன் ஆனந்துக் குப் பிறகு நமக்குக் கிடைக்கப் போகும் இன்னொரு உலக சாம்பியன்! ●

வேதனையில் யுவராஜ்!

ச.ந. கண்ணன்

உலகின் எந்த ஒரு கிரிக்கெட் அணியிலும் இப்படியொரு அநியாயம் நடப்பதில்லை. ஒரு நாள் போட்டியில் சுமாராக ஆடும் அத்தனை பேருக்கும் டெஸ்ட் போட்டியிலும் இடமளிக்கப்படும் என்பது எழுதப்படாத விதி. 20 - 20 உலகக் கோப்பையில் அருமையாக ஆடியதற்காக மிஸ்புல்லா ஹக்குக்கு பாகிஸ்தான் டெஸ்ட் அணியில் உடனே இடம் கிடைத்தது. ஆனால், இந்திய டெஸ்ட் அணியில் இடம் கிடைக்க வேண்டி பல ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கிறார் யுவராஜ்சிங்.

19 வயதில் இந்திய அணிக்குள் நுழைந்தார் யுவராஜ். ஒருநாள் போட்டியில் இனியும் சாதிக்க வேண்டியது எதுவுமில்லை. டெஸ்ட் போட்டியிலும் இரண்டு செஞ்சுரிகள் அடித்துவிட்டார். ஆனால், அவருக்கு டெஸ்ட் அணியில் இடம் கிடைப்பது என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. இந்திய அணியில் இடம்பிடித்து மூன்று வருடங்கள் கழித்த பிறகு, யுவராஜ்சிங்குக்கு முதல் டெஸ்ட் வாய்ப்பு கிடைத்தது. இறுதியாக மேற்கு இந்தியத் தீவு அணிகளுடன் 2006-ல் ஆடினார். மூன்று நாட்களில் முடிந்த அந்த ஆட்டத்தில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 42 ரன்கள் மட்டுமே எடுத்தார். அதன் பிறகு, கங்குலியும் லஷ்மணும் பொறுப்பாக விளையாடி யுவராஜ்சிங்குக்கு வழிவிடாமல் பார்த்துக்கொண்டார்கள்.

'எனக்கு வெறுப்பாக இருக்கிறது. நான் டெஸ்ட் மேட்சில் ஆட வேண்டும்' - சமீபகாலமாக, இதுபோல எல்லா பேட்டிகளிலும் வேதனையில் புலம்ப ஆரம்பித்துவிட்டார் யுவராஜ்சிங். கடந்த இரண்டு வருடங்களாக ஒருநாள் போட்டிகளில் சச்சினை ஓரங்கட்டி ஐந்து முறை மேன் ஆஃப் தி மேட்ச் பட்டம் வென்றிருக்கிறார். 20 - 20 உலகக் கோப்பை மற்றும் பாகிஸ்தான் தொடர் இரண்டிலும் யுவராஜின் பங்களிப்பு மிக மிக அதிகம். இதற்கு மேலும் இப்படிப்பட்ட வீரரை காக்க வைக்கக்கூடாது என்று எல்லா முன்னாள் கேப்டன்களும் யுவராஜுக்கு வக்காலத்து வாங்குகிறார்கள்.

ஒருவேளை யுவராஜுக்கு இடம் அளிக்கப்படும்போது யாருக்குப் பதிலாக அவர் அணியில் இடம் பிடிப்பார்? லஷ்மணை டெஸ்ட் மேட்சிலிருந்து எடுத்தால் அது மகா பாவம். அடுத்து ஆஸ்திரேலியா தொடர் வருகிற பட்சத்தில், அவர் கட்டாயம் பாகிஸ்தானுடனான டெஸ்ட் போட்டியில் ஆடியே ஆகவேண்டும். கங்குலி மீது தான் எல்லோரும் வருத்தத்தில் உள்ளனர். அணிக்காக விளையாடாமல் சொந்த நலனுக்காக ஆடுகிறார் என்கிற கூக்குரல் ஓயாது ஒலிக்கத் தொடங்கிவிட்டது. யுவராஜ்சிங்கை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அற்புதமான தருணம் இது. கும்ப்ளே என்ன செய்வார் என்று பார்ப்போம்.



* விவாதங்களில் அப்பாவுக்கு நம்பிக்கை உண்டு



70 முதல் 7 வரை...

'கல்கி'யின் சிரசாசனம்:

கல்கி குடும்பத்தின் நலனில் அக்கறை உடைய நெருங்கிய நண்பர் ஒருவர், சென்ற இதழில் வெளியான கட்டுரையைப் படித்து விட்டு (நாவல் பிறந்த கதை) போன் செய்தார்.

''கல்கி சக எழுத்தாளர் ஒருவரின் நாவலைக் குறைவாக மதிப்பிட்டு அலட்சியமாகப் பேசியதாக எழுதியிருக்கிறாய். உன் சகோதரி ஆனந்தி, பதிலுக்கு, கல்கி அவர்களின் சிவகாமியின் சபதத்தையே குறைத்து மதிப்பிட்டது போலவும் எழுதியிருக்கிறாய். இதெல்லாம் எனக்கு ஒப்புதலாய் இல்லை'' என்று கருத்து தெரிவித்தார்.

சொன்னவர், கல்கி அவர்களை நன்கு அறிந்தவர். எனவே என் எழுத்தில்தான் ஏதோ குறை இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. அவரைப் போலவே வேறு பலரும் நினைக்கக்கூடும். 'இதனால் அறியப்படுவது யாதெனில்' என்று உணர்த்துவதுபோல எழுதுவதில் எனக்கு ஆர்வம் இல்லை. இருந்தாலும் சில சமயம் அது அவசியமாகிறது என்று உணர்கிறேன்.

கல்கி அவர்கள் சக எழுத்தாளரை மதிக்காமலில்லை. அப்படி இருந்தால் அவருடைய நாவலைப் படித்தே இருக்க மாட்டார். சிலரது எழுத்தை மதிக்காவிட்டாலும் எழுதியவரை மதிப்பவர் கல்கி. ஆனந்தியிடம் அவர் பேசியது ஒரு வாதத்தைக் கிளறுவதற்காகத்தானே தவிர, சக எழுத்தாளரைக் குறைத்து மதிப்பிடுவதற்காக அல்ல. அதேபோல சகோதரி அவருக்குப் பதிலளித்தது, எங்களுக்கு அப்பா அளித்திருந்த சுதந்திரத்தின் வெளிப்பாடுதானே தவிர, அவளுடைய அதிகப் பிரசங்கித்தனம் அல்ல. சிவகாமியின் சபதத்துக்கு சிறப்பாயிரம் எழுதக் கூடியவள் ஆனந்தி.

விஷயம் என்னவென்றால், கல்கி அவர்களுக்கு விவாதங்களில் நம்பிக்கை உண்டு. கலந்துரையாடலும் அதில் இடம் பெறக்கூடிய வாதப் பிரதிவாதங்களும், தயிரைக் கடைந்தால் வெண்ணெய் திரள்வதுபோலத் தெளிவை உண்டாக்கும் என்பதை உணர்ந்தவர். ராஜாஜியுடன் அரசியலை விவாதிப்பார்; டி.கே.சி.யுடன் இலக்கியக் கருத்துப் பரிமாற்றங்கள் நடக்கும். ஒரு பொருளாதார விஷயம் பற்றி எழுத வேண்டுமென்றால் அது குறித்த விஷயஞானமுள்ளவரிடம் பேசுவார்; விவாதிப்பார். தொடர்கதை எழுதுமுன்னர்

என்னிடமும் சகோதரியிடமும் கதை சொல்லுவார். எங்கள் முக பாவங்களை உற்று நோக்குவார். அதன் மூலமே கதையின் சுவாரஸ்யத்தை எடை போடுவார்.

சிறு வயதிலேயே கதாகாலட்சேபங்கள் பலவற்றைக் கேட்டுக் கேட்டு, கிராமத்தில், வீட்டுத் திண்ணையில் நின்று, ஊர் மக்களுக்குக் கதை சொல்லி மகிழ்வித்தவர் கல்கி. ஆனந்தியும் நானும் குழந்தைகளாக இருந்தபோது, ஊஞ்சலில் அவருக்கு இருபுறமும் அமர்ந்து ராமாயணம், மகாபாரதம் உள்பட பல கதைகள் கேட்போம். கொஞ்சம் எங்களுக்கு வயதான பிறகு, அவர் எழுதப்போகும் தொடர்கதைகளையே பல்வேறு உணர்ச்சிகள் தொனிக்கச் சொல்வார். கேள்விகளை வரவேற்பார். கதை மேலே தொடரும்.

சேந்தன் அமுதனுக்கு சிம்மாசனம்!

சில சமயம் ஒரு கேள்வியின் விளைவாக கதையில் ஒரு புதிய சிந்தனை தோன்றும்; திருப்பம் ஏற்படும்.

பொன்னியின் செல்வன் ஐந்தாம் பாகம் எழுதி வருகையில், ஒரு நாள் கல்கி சிரசாசன நிலையில் இருந்தார். நேரம் பார்ப்பது என் வேலை. பாடப் புத்தகமும் கடிகாரமுமாக நான் பக்கத்தில் அமர்ந்திருந்தேன். ஐந்து நிமிஷங்களுக்குப் பதில் மூன்றாவது நிமிஷம் இறங்கிவிட்டார். நான் கவலை அடைந்து, 'என்ன? என்ன?' என்று சற்று பதற்றத்துடன் அவரை நெருங்கினேன்.

''ஏண்டா! சேந்தன் அமுதனை சோழ சக்கரவர்த்தியாக்கிவிட்டால் என்ன?'' என்று என்னைக் கேட்டார். சிரசாசன நிலையிலும் அவர் மனம் பொன்னியின் செல்வனில்தான் இருந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட நான், ''லாஜிக் சரியாக அமையுமானால் செய்யலாம்'' என்று சொன்னேன். ''ஒரு surprise twist இருக்கும்.''

அடுத்து, சவாசன நிலையிலும் அவர் உள்ளம் சேந்தன் அமுதனிடம்தான் இருந்தது. பின்னால் அந்தப் புதிய திருப்பத்தை அவர் விவரித்தபோது கவனமாகக் கேட்டு, கேள்விகளையும் எழுப்பினேன். பதில் கூறும்போதே பிசிறுகளை நீக்கி கதையோட்டத்தைக் கச்சிதப்படுத்தினார் (tying up loose ends).

என்னைவிடவும் என் சகோதரிக்கு கொஞ்சம் சலுகையும் அதிகம்; துணிவும் மிகுதி. சிவகாமியின் சபதத்தை உள்ளடக்கிய அவளுடைய ஓர் எதிர்வாதத்துக்காக கல்கி



கல்கி. பொன்னியின் செல்வனில் முடிசூட்டு விழா காட்சி. ஓவியம் : மணியம்



★ சேந்தன் அமுதனை ராஜாவாக்குவதற்காக பிரிவுகளை நீக்கி, கதையோட்டத்தைக் கச்சிதப்படுத்தினார்

ஆயிரம் டூமாக்கள் வந்தாலும் நெருங்க முடியாத அளவுக்கு பொன்னியின் செல்வன் தன்னிகரற்ற இலக்கியச் செல்வமாகத் தமிழனுக்குக் கிடைத்தது

கோபமடையவில்லை என்பதுதான் முக்கியம். மாறாக, ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டார். சாதாரணமாக எல்லா நாவல்களிலுமே கதாநாயகன், கதாநாயகி, வில்லன் அல்லது வில்லி என்று கதாபாத்திரங்கள் அமையும். இதை eternal triangle என்று ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. கல்கி இந்த முக்கோணத்தை உடைத்தெறிந்தார் தமது அலை ஓசை நாவலில் (எப்படி என்பதை சென்ற வாரமே விளக்கியிருக்கிறேன்). இதை அவர் சாதிப்பதற்கு, 'ராமாயணத்தின் சாயல் சிவகாமியின் சபதத்தில் படிந்திருக்கிறது' என்று ஆனந்தி கூறியது ஒரு தூண்டுகோலாக அமைந்தது.

ஆனந்தி அவர் எழுத்தில் குறை கண்டு critical-ஆக விமர்சித்த வேறு தருணங்களும் உண்டு. வந்தியத்தேவன், பல்லக்கில் செல்லும் நந்தினியை முதன் முதலாகச் சந்திக்கும் காட்சி, அலெக்ஸாண்டர் டூமா எழுதிய திரீ மஸ்கிடீர்ஸ் (Three Musketeers) நாவலில் வரும் ஒரு காட்சி போலவே அமைந்திருப்பதாக அவள் சொன்னதை கல்கி ஒரு தார்மிகத் துணிவுடன் ஏற்றுக்கொண்டார். ''சில சமயம் இப்படித்தான் தவிர்க்க முடியாதபடி பாதிப்பு ஏற்படும்; தொடர்ந்து படித்து வா, அப்புறம் சொல்லு'' என்றார். ஆயிரம் டூமாக்கள் வந்தாலும் நெருங்க முடியாத அளவுக்கு பொன்னியின் செல்வன் தன்னிகரற்ற ஓர் இலக்கியச் செல்வமாகத் தமிழனுக்குக் கிடைத்தது.

1954 தீபாவளி சமயம், உடல் பரிசோதனைகளுக்காக கல்கி, ஜி.ஹெச்.சில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனையில் இருந்தபடியே தீபாவளி மலருக்காக 'மயில் விழி மான்' என்ற கதையை எழுதினார். அதைப் படித்த ஆனந்தி, ''கதையெல்லாம் பிரமாதம்தான்; ஆனால், இது என்ன மயில் விழி மான் என்று ஒரு தலைப்பு? நீங்கள் தரக்கூடிய தலைப்பாகவே இல்லை. பகீரதன்தான், 'தேன்மொழியாள்', 'குயில் குரலாள்' என்றெல்லாம் தலைப்பு தருவார்'' என்றாள்.

கல்கி 'இடிஇடி' என்று சிரித்துவிட்டு ''அப்படியா! பகீரதன் என்னிடமிருந்து கற்றுக்கொள்வதற்குப் பதில் அவனிடமிருந்து நான் கற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டேன் போலிருக்கு!'' என்று கூறி, உடல் உபாதைகளையும் மறந்து மேலும் சிரித்தார்!

(பேசுவோம்)

தனிமையில் ஏங்கும் பெண்!

லலித் கலா அகாடமியில் நடைபெற்ற அந்த ஓவியக் கண்காட்சியை மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்குக் கூட அந்த வேறுபாடு தெரிந்துவிடும். ஐந்து வகையான ஓவியங்கள். நுண்கலைக் கல்லூரி மாணவ நண்பர்கள் ஐவரின் அழகான கைவண்ணங்கள்.

"கல்லூரியில் நாங்கள் சேர்ந்த உடனேயே இப்படி ஒரே கலைக்கூடத்தில், ஒரே சமயத்தில் கண்காட்சி நடத்த வேண்டும் என்று நினைத்தோம். இப்போதுதான் வேளை வந்தது'' என்கிறார்கள் ஒரே குரலில்.

சில கட்டடங்களின் ஒரு பகுதியை உயிரோட்டத்துடன் வரைந்திருந்தார் ஜனார்த்தனன். ''பழைமைகளை என் ஓவியத்தில் பதிவு செய்யணும்ங்கறதுதான் என் ஆசை. இதோ இது எங்கள் கல்லூரிதான். இதை வரைய மூணு மாசம் பிடித்தது. குறிப்பிட்ட பகுதியில் வரையத் தொடங்கும்போது இருந்த அதே லைட்டிங், மீண்டும் வரும்போது வரைந்தால்தான் அதே தன்மை ஓவியத்தில் வரும்'' என்றவரிடம், ''முன்பு புகைப்படக் கலை கிடையாது. எனவே கட்டடங்களை ஓவியத்தில் வரைந்தார்கள். இனி அதற்கான தேவை என்ன?'' என்று கேட்டோம். ''புகைப்படம் என்பது ஒரு பதிவு. ஆனால், அதை ஓவியமாக்கும்போது பலவித நுட்பங்களை வெளிப்படுத்த முடியும். நம் ரசனைக்கேற்ப அதில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க முடியும்'' என்றார்.

ஒரு காட்சியை பொதுவாக இப்படித்தான் பார்ப்பார்கள் என்றிருக்க, அதை இப்படியும் பார்க்க முடியுமே என்பதுபோல் கலர்ஃபுல்லாக வரைந்திருக்கிறார் கிரண். இயற்கைக் காட்சிகளை, அப்ஸ்ட்ராக்ட்டாக வரைவதே இவருக்குப் பிடித்திருக்கிறது. ''எதையும் ஸ்கெட்ச் எடுத்துக் கொள்வதில்லை.








நினைவிலிருந்துதான் வரைவேன். நினைவில் தங்கும் அளவுக்குப் பிடிக்கும் காட்சிகள் தான் ஓவியத்தில் அழகாக வரும்'' என்றவர், வான் கோக் என்ற பிரபல ஓவியரின் தன்னோவியத்தை (SELF PORTRAIT) மிகவும் பாராட்டுகிறார்.

''என் ஓவியங்களினால் உலகத்துக்கு ஏதாவது மெஸேஜ் கொடுக்க ஆசை'' என்கிற கோவிந்தனின் ஆதர்ச ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோ. ''இயல்பான நிறங்



களைக் கொண்டு வந்தே தீர வேண்டும் என்பதைவிட, பார்ப்பதற்கு இனிமையாக இருக்க வேண்டும் என்பதில்தான் அதிக கவனம் செலுத்துவேன்'' என்கிறார். இவரது ஓர் ஓவியத்தில் மலைவாசிப் பெண் நல்ல கலராகத் தோற்றமளிப்பதற்கு இதுதான் காரணமாக இருக்க வேண்டும்.

மலர்களை பலவிதமாக வர்ணித்து இருப்பார்கள். ஆனால், பூக்களின் உட்புறங்களை மட்டும் வரைவதில் கவனம் செலுத்தும் வினோத்குமாரின் வர்ணனை வித்தியாசமாக இருக்கிறது. ''இதோ ஒரு பெண் தனிமையில் ஏங்குகிறாள். அந்தப் பூவின் உட்பகுதியில் பாருங்கள், ஒரு குடும்பம் தெரியவில்லை? டைனிங் டேபிள், அதைச்சுற்றி நாலுபேர்'' என்று அவர் கூறும்போது 'அட ஆமாம்' என்று வியக்கத் தோன்றுகிறது. மலர்களைக் களனாகக் கொண்டதால் அழுத்தமான வண்ணங்கள், நம்மை வண்டுகளாக்குகின்றன.

புள்ளிகளைக் கொண்டு மட்டுமே மயக்கும் ஓவிங்களைத் தீட்டியிருக்கிறார் சுஜித். ''ஒருமுறை நம் உடலின் ஒரு செல்லை நுண்நோக்கியில் பெரிதுபடுத்தியதைப் பார்த்தேன். அப்போதிலிருந்தே எந்தப் பொருளைப் பார்த்தாலும் அதில் உள்ள புள்ளிகளில் என் கவனம் பதிந்தது. ஆஸ்திரேலியாவில் உள்ள ஆதிவாசிகள் இப்படி ஒரு முயற்சியில் ஈடுபட்டார்களாம். இந்தக் கலையை 'பாயின்டலிஸம்' என்பதுண்டு. ஆனால், அதிலிருந்து சில விதங்களில் என்னுடைய நுட்பம் வேறுபட்டது. கண்காட்சிக்கு வந்த ஒரு சிறுவன், 'மொசைக் தரையைப் பார்க்கும்போது உங்கள் ஓவியத்தைப் போலவே இருக்கிறது' என்றான். என் ஓவியங்கள் புரிந்துகொள்ளப்படுமா என்ற சின்ன சந்தேகம் அதோடு நீங்கிவிட்டது'' என்றார்.

நோக்கமும் பாணியும் ஐந்து பேருக்குமே வெவ்வேறாக இருந்தாலும் 'ஓவிய நேர்த்தி' எனும் அடிப்படையில் ஐந்து பேருமே நம் கவனத்தில் பதிகிறார்கள். ஓவியத் துறையில் இவர்களின் வருங்காலம் வளமாக இருக்கும் என்கிற நம்பிக்கை பிறக்கிறது.

– ஜி.எஸ்.எஸ்.





நம்பர் ஒன்னில் நம்பிக்கை இல்லை!

யதார்த்தமாகப் பேசுகிறார் நயன்தாரா. ''நாளை பத்தி நான் கவலைப்படறதில்ல. நேற்றுங்கறது, முடிஞ்சு போன ஒரு விஷயம். இன்னைக்கு, இந்த நிமிஷம்தான் எனக்கு முக்கியம். இந்த நொடி சந்தோஷம் முழுமையா கிடைக்க என்ன பண்ணணுமோ அதை நோக்கியே இருக்கு என் எண்ணங்களும் சிந்தனைகளும்.''

'எப்போதிலிருந்து இந்த ஞானம்?' என்றால், ''அனுபவம்தான் சிறந்த ஆசான். அது தர்ற பாடத்தை அம்மா கூட தர்றதில்ல'' என்கிறார் ஞானப்பால் குடித்த மாதிரி.

''சினிமால வந்ததுக்குப் பிறகு சிலது புரிஞ்சிருக்கு. சிலது புரியாமலே போயிருக்கு. ஆனா, தினமும் ஏதாவது ஒரு விஷயத்தை நான் கத்துக்கறேன். தெரியாத, புரியாத, கிடைக்காதவைகளுக்காக கவலைப்பட்டு மனசைக் குழப்பிக்கிறதில்ல. என் தேவை என்ன? அதை மட்டும்தான் நான் முக்கியமா பார்க்கறேன்.''

'ஒரு படம் தேர்ந்தெடுக்க எது உங்களின் கொள்கையாக இருக்கிறது?'

''கதையில என் ரோல், டைரக்டர் - ஹீரோ யார், என்ன பேனர்னு பல விஷயங்களைப் பார்ப்பேன். சும்மா கிடைச்சா போதும்னு எதுலயும் கவிழ்ந்துட மாட்டேன்.

ஒரு படத்துல நடிச்சு முடிக்கிறதோடு ஹீரோயின் களோட வேலை முடிஞ்சுடுறதா சொல்லப்படுறதையும் நான் மறுக்கிறேன். ஒரு படத்தோட வெற்றி, தோல்வி எங்களையும் பாதிக்கத்தான் செய்யுது. ஒவ்வொரு படமும் நல்லா போகணும்னு நெனைச்சித்தான் எல்லாரும் பண்றோம்.

என்னோட இடம் பற்றியும் எனக்குக் கவலையில்லை. எந்த இடத்துல இருக்கேன்னு எனக்குத் தெரியாது. தெரிஞ்சுக்க வேண்டிய அவசியமும் இல்ல. நம்பர் ஒன்னில் எனக்கு நம்பிக்கையில்லை. கொடுக்கற வேலையை சின்சியரா செஞ்சா போதும்னு நினைக்கறேன்.''

'இந்திக்குப் போகிற எண்ணமுண்டா?'

''நிச்சயமா இல்லை. தமிழ், தெலுங்குல மட்டும் கவனம் செலுத்தினா போதும். 'பில்லா' படத்துல ரிஸ்க் எடுத்து நிறைய காட்சிகள்ல நடிச்சிருக்கேன்னு சொல்றதைவிட, ஒரு ஆர்ட்டிஸ்டுங்கற முறையில தேவைப்பட்டதைத்தான் செஞ்சேன். 'பில்லா'ல என் கேரக்டர் ரொம்ப ஸ்டைலிஷா இருக்கும். இது வேற மாதிரியான படம்.

விஷாலோடு நடிக்கிற 'சத்யம்', எனக்கு ஹ்யூமர் ஹீரோயின் பட்டத்தை வாங்கித் தரப்போறது உறுதி. தனுஷோட பண்ற 'யாரடி நீ மோகினி', தெலுங்கில் செல்வராகவன் சார் டைரக்‌ஷன்ல ஹிட்டான படம். ஆக, இப்பவே வெற்றி உறுதியாகிப் போச்சு'' என்று சிரிக்கிறார் நயன்தாரா.

– சுந்தரி





“டாக்டர் இந்த ஆபரேஷனுக்கு ஃபீஸ் எவ்வளவு?”

“ரொம்பப் பெரிய ஆபரேஷன். முப்பதாயிரம் ரூபாய் ஆகும்.”

“என்னங்க... ஒரு டூவீலர் வாங்குற காசைக் கேட்கறீங்க?”

“நீங்க சொல்றது சரிதான். நானும் டூவீலர்தான் வாங்கப் போறேன்.”

- எம்.ஏ.கண்ணன்

“கடனைத் திருப்பித் தரலேன்னு உங்ககிட்டே அப்பா கோபமா பேசிட்டாராம். அதை மறந்திடச் சொன்னாரு!”

“எதை, கடனையா?”

- வெ.சீதாராமன்



“அதோ போறாரே... அவர் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன்!”

“அப்படியா?”

“ஆமா! குருவை விட்டுட்டு எல்லாரும் ஓடிட்டாங்க. இவர் ஒருத்தர்தான் மிச்சம்!”

- தேனி எஸ்.மாரியப்பன்



கிடைத்தாலும்

“என் வீட்ல மூணு ரேஷன் கார்டு இருக்குன்னு எப்படிக் கண்டு பிடிச்சீங்க?”

“வீட்ல மூணு அறைலயும் மூணு இலவச டி.வி.க்கள் இருக்கே!”

- கு.அருணாசலம்

கஷ்டம்!



"உங்க கட்சியின் 'பொற்காலம்'னு எதைச் சொல்வீங்க?"

"தலைவர் கோமாவுல இருந்த அந்த ஆறு மாசத்தைதான்!"

- அனன்யா





"ஊரெல்லாம் தேடிப் பார்த்தாச்சு. இனி எங்கம்மா கிடைக்கிறது கஷ்டம்தான்!"

"கிடைச்சாலும் கஷ்டம்தாங்க!"

- லீலாஜி

"கண்டக்டரோட என்ன சண்டை?"

"இப்பத்தான் ஜாமீன்ல வெளியே வர்றோம். 'உள்ளே போங்க... உள்ளே போங்க'ன்னு உயிரை வாங்குறாரு."

- அ.சா.குருசாமி



மச்சக்காரன்

அதிர்ஷ்டமே இல்லாத ஒருத்தனுக்கு, அதிர்ஷ்டமே வாழ்க்கையா அமைஞ்ச பொண்ணு ஒருத்தி கிடைச்சா எப்படி இருக்கும்ங்கறதுதான் கதை. இடைவேளை வரை திரைக்கதைல விளையாடுற இயக்குநருக்கு அப்புறம் என்னமோ ஆயிடுது.

ஜீவன்தான் ஹீரோ. இவர் எதைத் தொட்டாலும் அது தொலங்கவே மாட்டேங்குது. சோகமா முகத்தை வெச்சுக்கிட்டு, நண்பர்கள்கிட்ட வெறுப்பை உமிழ்ஞ்சிக்கிட்டு மச்சமில்லாத கேரக்டரை அழகா பண்ணியிருக்காரு. ஹோட்டல்ல இவர் முகத்தைப் பார்த்து குழந்தைக்குப் பூச்சாண்டி காட்ற பெண்ணை வறுத்தெடுக்கறது சூப்பர். காதல் காட்சிகள்ல ஜீவன் குறைஞ்சிருந்தாலும், சண்டைக் காட்சிகள்ல தூள் பரத்துறார். நாயகி காம்னா, காமா சோமான்னு இல்லாம கொஞ்சம் நடிக்கவும் செஞ்சிருக்காங்க. ஜீவன்கூட இவங்க காதல் மலர்ற விதம் ஹைக்கூவா சொல்லப்பட்டிருக்கு. வில்லனா வர்ற ஜி.எம்.குமார், சரியான கண்ணி வெடி. தனக்குள்ள புதைஞ்சிருக்கிற விஷயங்களை மறைச்சுட்டு, ஆஜானுபாகுவா நடமாடி பொண்ணையே ஏமாத்துறது நச். இன்ஸ்பெக்டரா வர்ற அவர் பையன், அடி உதைக்கு மட்டும் உபயோகப் படுறார். காமெடி போர்ஷன் படு வீக். ஒரு பாட்டுக்கு மட்டும் ஆடிட்டு ஒதுங்கிடுறாங்க மாளவிகா.

யுவனோட இசையில திருவிழா பாட்டு களை கட்டுது. பின்னணில பின்னிடுறார். வெங்கடேஷின் ஒளிப்பதிவு கண்ணுக்கும் மனசுக்கும் அழகான ஒத்தடம். தமிழ்வாணன், டைரக்ஷன். முன்பாதில இருந்த கதை நேர்த்தி, பின்னாடி காணாமப் போயிடுது. காதலியக் கூட்டிக்கிட்டு மாமனார் மானத்தை எடுக்க, ஜீவன் சொந்தக்காரங்க வீட்டுக்கெல்லாம் போறது நல்ல ஐடியா. ஆனா, அதை சுவாரஸ்யமா சொல்லியிருக்க வேண்டாமா? க்ளைமேக்ஸ் திடுக்தான். ஆனா, ஜி.எம்.குமார் உடனே திருந்திடுறது நம்பும்படியா இல்ல. திருப்பங்களை யூகிக்காத அளவுக்குப் பண்ணியிருந்தா படம் வேறொரு பரிமாணத்தை எட்டியிருக்கும். ஆனா, டைரக்டர் போராடியிருக்கார். முடியாததுதான் சோகம்.



விவஸ்தை கெட்ட மனசு!

• கதிர்பாரதி



விதைக்க வாங்கியது
வீடு கட்ட வட்டிக்கு
வாங்கியது
மாமன் முறை செய்ய
பொய் சொல்லி
மானியத்தில் வாங்கியது
இவையெல்லாம்
மானத்தை வாங்குவதற்குள்

குடும்பக் கஷ்டம்
என்னக்கி வெலகுமென
தன்னை விடுவிக்கத்
தகுதியில்லா
கூண்டுக் கிளியிடம்
குறிகேட்டுக் குத்திட்டு நிற்கும்
விவஸ்தை கெட்ட மனசு

உருவிய கோவணம்தான்
திரும்ப வருகிறதென
தெரியாது
இடிபட்டுச் சாவோம்
எல்லோரும்
இலவச வேட்டி சேலைக்கு

பிடரியில் நீரொழுக
பிரகாரம் சுற்றி
முன் நெற்றியில்
மண்ணொட்ட
விழுந்து சேவித்து
கணக்காய்க் கண்ணிலொற்றி

உடைத்துச் சிதைத்த
தேங்காய்த் துணுக்குகளைப்
பொறுக்கிய சிறுவனை
விரட்டியடித்த
உன் பக்தி நினைக்கையில்
சிரிப்புதான்
வருகிறதெனக்கு

அமரர் கல்கி

பார்த்திபன் கனவு

முன்கதை :

பார்த்திப சோழ மகாராஜா, காஞ்சி நரசிம்மச் சக்கரவர்த்திக்குக் கப்பம் செலுத்த மறுத்து, வெண்ணாற்றங் கரைப் போர்க்களத்தில் வீர சுவர்க்கம் அடைகிறார். ரண களத்தில் அவருடைய உயிர் நீங்கப்போகும் தருவாயில் தரிசனம் தந்த சிவனடியாரிடம், தம்முடைய மகன் விக்கிரமனை வீர புருஷனாக வளர்க்க வேண்டுமென்று வரம் வாங்கிக்கொண்டு உயிர்விடுகிறார்.

பார்த்திப சோழரின் பத்தினி அருள்மொழி ராணி, தன் மகன் விக்கிரமனுடன், உறையூருக்குக் கிழக்கே கொஞ்ச தூரத்தில் இருந்த காவேரி நதித் தீவில், வஸந்த மாளிகையில் வசித்து வருகிறாள். அங்கு சிவனடியார் அடிக்கடி வந்து விக்கிரமனுக்கு வீர சுதந்திர உணர்ச்சியை ஊட்டி வருகிறார்.

விக்கிரமன் பதினெட்டாம் பிராயத்தைக் கடந்தபோது, சிராப்பள்ளி மலையில் புலிக்கொடியை உயர்த்தி சோழ நாட்டின் சுதந்திரத்தை ஸ்தாபிக்கத் தீர்மானிக்கிறான். பார்த்திப மகாராஜாவின் மாற்றாந்தாய் மகனான மாரப்ப பூபதி, பல்லவ சேனாதிபதியிடம் விக்கிரமனுடைய உத்தேசத்தை வெளிப்படுத்தி விடுகிறான். இதன் பயனாக, விக்கிரமனுடைய முயற்சி தோல்வியடைகிறது.

காஞ்சி நகரின் வீதியில் சங்கிலிகளால் பிணைப்புண்டு குதிரை மேல் சென்ற விக்கிரமனை, நரசிம்மவர்மரின் மகள் குந்தவிதேவி சந்திக்கிறாள். விக்கிரமனைத் தண்டனையிலிருந்து தப்புவிக்க அவள் செய்த முயற்சி பலிக்காமற்போகிறது. விக்கிரமன் தேசப் பிரஷ்ட தண்டனைக்கு உள்ளாகிறான்.

மாமல்லபுரத்துக் கடற்கரையில் விக்கிரமன் கப்பலில் ஏற்றப்படுகிறான். கப்பல் புறப்படும் சமயத்தில் கரையில் நின்ற சிவனடியார், தமது கரங்களைத் தூக்கி அவனை ஆசீர்வதிக்கிறார். இதைப் பார்த்த குந்தவிதேவி, இந்த சிவனடியார்தான் விக்கிரமனுடைய துரதிர்ஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்று எண்ணி, அவர் யார் என்று கண்டுபிடிக்கத் தீர்மானிக்கிறாள்.

விக்கிரமனை ஏற்றிச் சென்ற கப்பல் செண்பகத் தீவின் அருகில் அவனை இறக்கிவிட்டுச் செல்கிறது. விக்கிரமன் செண்பகத் தீவின் பிரஜைகளால் அரசனாக முடிசூட்டப்படுகிறான்.

விக்கிரமனுக்கு வயது வந்த பின்

கொடுக்க வேண்டுமென்று பார்த்திப மகாராஜா சொல்லியிருந்த சோழ வம்சத்து வீர வாளையும் திருக்குறளையும் உறையூர் அரண்மனையிலிருந்து கொண்டு வரும்படி படகோட்டி பொன்னனிடம் அருள்மொழி ராணி சொல்கிறாள்.

இந்த முயற்சியின் போது மாரப்பனிடம் அகப்பட்டுக்கொள்ள இருந்த படகோட்டி பொன்னனை சிவனடியார் தப்புவிக்கிறார்.

அருள்மொழி ராணி, தன்னைக் காண்பதற்கு வந்த சிறுத்தொண்டருடனும் அவருடைய பத்தினியுடனும் ஸ்தல யாத்திரை செல்கிறாள்.

வீரவாளும் திருக்குறளும் அடங்கிய பெட்டி படகோட்டியிடம் இருக்கிறது.

மூன்றாம் பாகம்

1. இரத்தின வியாபாரி


அமைதியான நீலக்கடலில் அழகிய அன்னப் பறவைபோல் வெள்ளைப் பாய் விரித்த கப்பல் மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. சூரியன் உதயமாகும் நேரம். அவனுடைய தேஜோமயமான வரவை எதிர் பார்த்துக் கீழ்வான முகட்டில் இயற்கை தேவி வர்ணக் கோலங்கள் போட்டுக் கொண்டிருந்தாள்.

கப்பலில் இருந்தவர்களிடையே பரபரப்பு அதிகமாய்க் காணப்பட்டது. அவர்கள் பெரும்பாலும் வர்த்தகர்களாகக் காணப்பட்டார்கள். எல்லாரும் அவரவர்களுடைய மூட்டைகளை எடுத்து வைத்து, கப்பலிலிருந்து இறங்குவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். சிலர் கப்பல் மேல் தளத்தின் ஓரமாக வந்து, மேற்குத் திசையை ஆவலுடன் நோக்கினார்கள்.

இப்படி மேற்குத் திக்கை நோக்கி நின்றவர்களில் வாலிப வர்த்தகன் ஒருவன் காணப்பட்டான். பிராயம் இருபது, இருபத்தொன்று இருக்கலாம். அவனுடைய இளம் முகத்தில் களை சொட்டிற்று. அவனுடைய உடையிலிருந்தும் அவன் பக்கத்தில் கிடந்த மூட்டையிலிருந்தும்தான் அவனை வியாபாரி என்று சொல்லலாமே தவிர, மற்றபடி தோற்றத்தை மட்டும் கவனித்தால் அவன் இராஜ குலத்தைச்

கப்பலிலிருந்த மற்றவர்கள், அடிக்கடி அந்த இளம் வர்த்தகன் நிற்கும் இடத்தை நோக்கினார்கள். அப்போது அவர்களுடைய கண்களில் பயபக்தி காணப்பட்டது; சிறிது கவலையும் தோன்றியது!

கனவு






சேர்ந்தவன் என்று சொல்லும்படியிருந்தது. அவன் வியாபாரியாயிருக்கும் பட்சத்தில், சாதாரண வியாபாரியாயிருக்க முடியாது; பெருஞ்செல்வனான இரத்தின வியாபாரியாகத்தான் இருக்க வேண்டும்.

கப்பலிலிருந்த மற்றவர்கள், அடிக்கடி அந்த இளம் வர்த்தகன் நிற்கும் இடத்தை நோக்கினார்கள். அப்போது அவர்களுடைய கண்களில் பயபக்தி காணப்பட்டது; சிறிது கவலையும் தோன்றியது.

அந்த வாலிப வர்த்தகனோ மற்றவர்களையெல்லாம் சிறிதும் கவனிக்கவில்லை. கண்கொட்டாமல் மேற்குத் திக்கையே நோக்கிக் கொண்டு நின்றான். அவனுடைய முகத்திலேதான் எத்தனை ஆவல்? எவ்வளவு கிளர்ச்சி? அவ்வளவு ஆவலுக்கும் கிளர்ச்சிக்கும் என்னதான் காரணமாயிருக்கும்? நீண்ட காலம் அன்னிய நாட்டில் இருந்துவிட்டுத் தாய் நாட்டுக்குத் திரும்பி வருகிறானோ இந்த வாலிபன்? ஜன்ம பூமியின் தோற்றம் எப்போது கண்ணுக்குப் புலனாகும் என்றுதான்



இவ்வளவு ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறானோ?

ஆமாம்; அதுதான் உண்மையாயிருக்க வேண்டும். ஏனென்றால், அதோ கொஞ்ச தூரத்தில் கருநிறமாக வரப்புபோல் காணப் படும் பூமியைக் கண்டதும் அவனுடைய முகம் மலர்வதைக் காண்கிறோம். சூரியனைக் கண்ட தாமரை இப்படித்தான் மலரும் போலும்!

சற்று நேரம் அப்படியே அசைவின்றி நிற்கிறான் அந்த வாலிப வியாபாரி. ஆரம்பத்தில் வெறும் வரப்பாக மட்டும் தோன்றிய காட்சியானது வரவர மரங்கள், குன்றுகள், கோயில் கோபுரங்களாக மாறி வரும்போது, அவனுடைய உள்ளத்தில் ஆனந்தம் பொங்குவதை முகம் காட்டு கிறது. இதற்கிடையில் கிழக்கே சூரியனும் ஜகஜ்ஜோதியாக உதயமாகித் தன் யாத்திரையைத் தொடங்கினான்.

கரையையே பார்த்துக்கொண்டிருந்த வாலிபன், சட்டென்று திரும்பி நோக்கி

ளான். கப்பலிலிருந்தவர்களில் பெரும்பாலோர் அச்சமயம் அவனையே கவனித்துக் கொண்டிருந்தார்களாதலால், அவன் சமிக்ஞை செய்ததும் உடனே நெருங்கி அவனருகில் வந்து பயபக்தியுடன் நின்றார்கள்.

''நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கிறதா?'' என்று வாலிபன் கேட்டான்.

''இருக்கிறது மகா...!'' என்று சொல்லத் தொடங்கிய ஒருவன், சட்டென்று வாயைப்



பொத்திக்கொண்டான்.

''பார்த்தீர்களா? இதுதானா நீங்கள் என் கட்டளையை நிறைவேற்றுகிற லட்சணம்?'' என்று வாலிபன் கோபமாய்க் கேட்டான்.

''மன்னிக்க வேண்டும், சுவாமி!''

''என்னுடைய கட்டளையைச் சத்தியமாய் நிறைவேற்றுவீர்களா?''

''நிறைவேற்றுவோம், சுவாமி!''

''தாய்நாட்டில் இருக்கும்போது என்னை நீங்கள் சந்திக்க முயலவே கூடாது. தெரியுமா?''

''தெரியும் சுவாமி!''

''ஒருவேளை தற்செயலாய்ச் சந்தித்தால் என்னைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளக் கூடாது.''

''சித்தப்படி நடக்கிறோம்.''

''அடுத்த அமாவாசையன்று எல்லாரும் இந்தத் துறைமுகத்துக்கு வந்துவிட வேண்டும்.''

''வந்துவிடுகிறோம்!''

''அன்று நான் எக்காரணத்தினாலாவது கப்பலுக்கு வந்து சேராவிட்டால் என்னைப் பற்றி எவ்விதம் விசாரிப்பீர்கள்?''

''இரத்தின வியாபாரி தேவசேனர் என்று விசாரிக்கிறோம்.''

''இதிலெல்லாம் கொஞ்சங்கூடத் தவறக்கூடாது.''

''இல்லை. சுவாமி!''

மேற்படி வாலிப இரத்தின வியாபாரி உண்மையில் யார் என்பதை நேயர்கள் இதற்குள்ளாக ஊகித்துக் கொண்டிருக்கலாம். ஆம்; பார்த்திப சோழ மகாராஜாவின் புதல்வனும், தற்போது செண்பகத் தீவின் அரசனுமான விக்கிரமன்தான் அவன்.

சென்ற அத்தியாயத்தில் கூறிய சம்பவங்கள் நடந்து ஏறக்குறைய மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. இந்த மூன்று வருஷத்தில் விக்கிரமனுடைய ஆட்சியில் செண்பகத் தீவு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து பெரும் புகழும் அடைந்து வந்தது. விக்கிரமனுடைய வரவுக்குப் பிறகு ஒரே ஒரு தடவை செண்பகத் தீவின் மீது பகைவர் படையெடுத்து வந்தார்கள். அவர்களுக்கு நேர்ந்த கதியை அறிந்த பிறகு செண்பகத் தீவின் மீது படையெடுக்க யாரும் துணியவில்லை. அதற்கு மாறாக, விக்கிரமனுடைய தலைமையில் செண்பகத் தீவின் படை வீரர்கள் வேறு தீவுகளின் மேல் படையெடுத்துச் சென்று, அந்தத் தீவுகளிலெல்லாம் புலிக் கொடியை நாட்டிவிட்டுத் திரும்பினார்கள்.

விக்கிரமனுடைய வீரப் பிரதாபங்களையும் மேதா விலாசத்தையும் மற்ற உயர் குணங்களையும் பற்றிய கீர்த்தியானது தூர தூரத்திலேயுள்ள தீவாந்திரங்களிலெல்லாம் பரவத் தொடங்கியது. பல தீவுகளிலுள்ள ஜனங்கள் நல்லாட்சியையும் பாதுகாப்பையும் விரும்பித் தாங்களே விக்கிரமனுடைய ஆட்சிக்குள் வந்துகொண்டிருந்தார்கள்.

இந்த மூன்று வருஷ காலத்தில் விக்கிரமன் தன்னுடைய தாயாரையாவது, தாய் நாட்டையாவது மறந்துவிடவில்லை. மற்றும், பல்லவ சாம்ராஜ்யத் தலைநகரின் வீதியில் அவன் கண்ட இளநங்கையின் சந்திரவதனத்தையும் அவனால் மறக்க முடியவில்லை. செண்பகத் தீவின் பிரஜைகள் தங்களுடைய பாக்கியவசத்தினால் கிடைத்த புதிய அரசனின் வம்சம் நீடூழி விளங்க வேண்டுமென்னும் ஆசையுடன், விக்கிரமனுடைய விவாகத்தைக் குறித்துச் சிலமுறை விக்ஞாபனம் செய்துகொண்டார்கள். மகாராஜா விடை கொடுத்தால், தாய்நாட்டுக்குச் சென்று சிறந்த அரசர் குலத்துப் பெண்ணை மணம் பேசி வருவதாகவும் சொன்னார்கள். அப்போதெல்லாம் விக்கிரமன் அவர்களுடைய விக்ஞாபனத்தை மறுதலித்து, விவாகத்தைப் பற்றித் தன்னுடைய பரிபூரண வெறுப்பையும் தெரிவித்தான். இதற்கு அடிப்படையான காரணம், அந்த காஞ்சி நகர்ப் பெண்ணினுடைய கருவிழிகளின் ஞாபகந்தானோ, என்னவோ, யாருக்குத் தெரியும்?

நாளாக ஆக, விக்கிரமன் செண்பகத் தீவில் தன்னுடைய தனிமையை அதிகமாய் உணரத் தொடங்கினான். எவ்வளவோ ஜனக் கூட்டத்துக்கு நடுவில் இருந்தும் தான் துணையின்றித் தனித்திருப்பதை அவன் கண்டான். வெற்றியும் புகழும் செல்வாக்கும் திரளான மக்களின் போற்றுதலும் இருந்தும் அவனுடைய இதயத்தில் நிறைவு ஏற்படவில்லை. அதில் ஒரு மூலை சூன்யமாக இருந்தது. அந்தச் சூன்ய மூலையானது நாளுக்கு நாள் பெரிதாகிக்கொண்டு வந்தது. 'நீண்ட நயனங்களையுடைய அந்தப் பெண் மட்டும் இங்கே என் அருகில் இருந்தால்?' என்ற எண்ணம் அடிக்கடி உண்டாயிற்று. அந்த வேதனை தரும் எண்ணத்தை அவனால் மறக்க முடியாமலிருந்ததோடு, அந்த வேதனையின் நடுவிலேயே ஒருவித இன்பமும் இருப்பதை அவன் உணர்ந்தான். தன்னை அறியாமல் அடிக்கடி அவன் பெருமூச்சு விட்டான். சில சமயம் அவனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பெண்ணின் முகம் அவன் மனக் கண்ணின் முன்னால் தோன்றும்போது, அவனுடைய இருதயமானது விரிந்து பொங்கி மேல்

விக்கிரமன் செண்பகத் தீவில் தன்னுடைய தனிமையை அதிகமாய் உணரத் தொடங்கினான். எவ்வளவோ ஜனக் கூட்டத்துக்கு நடுவில் இருந்தும் தான் துணையின்றித் தனித்திருப்பதை அவன் கண்டான்!

நோக்கி எழுந்து நெஞ்சை அடைத்து விடுவதுபோல் உணர்ச்சி உண்டாகும்.

வேதனையுடன் இன்பமும் கலந்து உண்டாக்கிய இந்த ஞாபகத்தை அவன் ஓரளவு மறப்பதற்கு உதவியான ஒரு சம்பவம் இரண்டு மாதத்துக்கு முன்பு நேர்ந்தது.

ஒரு நாள் இரவு விக்கிரமனுடைய கனவில் அருள்மொழி ராணி தோன்றினாள். மகாராணிக்குரிய ஆடை ஆபரணங்கள் ஒன்றுமில்லாமல், தூய வெள்ளைக் கலையுடுத்தி விபூதி, ருத்திராட்சமணிந்து அவள் சிவபக்தியில் கனிந்த சிவவிரதையாகக் காட்சி தந்தாள்! முன் எப்போதையும்விட அவளுடைய முகத்தில் தேஜஸ்

அதிகமாக ஜொலித்தது. நாவில் நமசிவாய மந்திரத்தை ஜபித்துக்கொண்டு வந்த அருள்மொழி தேவி, விக்கிரமனைக் கனிவு ததும்ப நோக்கி, "குழந்தாய்! எனக்கு விடை கொடு!" என்றாள். விக்கிரமன் ஒன்றும் புரியாமல் திகைத்து, "அம்மா! இத்தனை நாள் கழித்து இப்போதுதானே உன்னைப் பார்த்தேன்? அதற்குள் போக விடை கேட்கிறாயே? எங்கே போகப் போகிறாய்?" என்றான். அருள் மொழி ராணி அதற்கு விடை கூறாமல், "அப்பா குழந்தாய்! நான் ஒரு வாக்குறுதி கொடுத்து விட்டேன். அதை நீ நிறைவேற்றித் தர வேண்டும். முக்கியமாக அதன் பொருட்டே உன்னைப் பார்க்க வந்தேன்" என்றாள்.

"என்ன வாக்குறுதி, அம்மா? யாருக்குக் கொடுத் தாய்?"

"சக்கரவர்த்தியின் மகள் குந்தவியை நீ கல்யா ணம் செய்துகொள்ள வேண்டும்!"

விக்கிரமன் திடுக்கிட்டு, "என்ன அம்மா சொல் கிறாய்? சக்கரவர்த்தி மகளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? யாருக்கு இம்மாதிரி வாக்குக் கொடுத் தாய்?" என்று கேட்டான்.

"சிவனடியாருக்கு வாக்குக் கொடுத்தேன் குழந் தாய்! இராமபிரான் தகப்பனாரின் வாக்கை நிறை வேற்றியது போல் நீ என்னுடைய வாக்கைக் காப் பாற்ற வேண்டும்."

இவ்விதம் சொல்லிவிட்டு, அருள்மொழி தேவி விக்கிரமனுடைய அருகில் நெருங்கி அவனுடைய சிரஸின் மீது கையை வைத்து ஆசீர்வதித் தாள். உடனே விக்கிரமன் கண் விழித்து எழுந்தான். "நல்ல வேளை! இதெல்லாம் கனவாய்ப் போயிற்று!" என்று சந்தோஷப் பட்டான்.

கனவில் கண்டதெல்லாம் வெறும் சித்தப் பிரமை என்பதில் ஐயமில்லை. பழைய பேச்சுக் களும் நினைவுகளும் குழம்பி இப்படிக் கனவாகத் தோன்றி யிருக்க வேண்டும். இல்லாவிடில் இத்தனையும் நடந்த பிறகு, "சக்கரவர்த்தி மகளைக் கல்யா ணம் செய்துகொள்" என்று தாய் தனக்குக் கட்டளையிடுவாளா? இதைப் பற்றிச் சிவனடியாருக்கு அவள் ஏன் வாக்குக் கொடுக்க வேண்டும்?

ஆனாலும் இந்தக் கனவுதான் விக்கிரமன் காஞ்சி நகர்ப் பெண்ணின் நினைவை ஒருவாறு மறப்பதற்கு உதவி செய்தது. கனவு கண்டது முதல், அவனுக் குத் தன் அன்னையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை மிகுந்தது. அவள் எங்கே இருக்கிறாளோ? தன்னைக் காணாமல் எவ்விதம் பரிதவிக்கிறாளோ?

அன்று முதல், தாய்நாட்டுக் குத் திரும்பிப் போக வேண்டு மென்ற ஆர்வம் விக்கிரமனு டைய உள்ளத்தில் பொங்கத் தொடங்கிற்று. போய், அன் னையை இங்கே அழைத்துக் கொண்டு வந்துவிடலாம்; தந்தை கொடுத்துவிட்டுப் போன சோழர் குலத்து வீர வாளையும் திருக் குறளையும் எடுத்துக்கொண்டு வரலாம் - இவ்விதம் தீர்மானித் துக்கொண்டு மந்திரி பிரதானிகளி டமும் மற்றுமுள்ள முக்கியப் பிரஜைகளிடமும் தன் தீர்மானத்

"மனித உள்ளத்தின் அந்தரங்க மர்மம் அனைத்தையும் அறிந்துவிட்டதாக யார் தான் சொல்ல முடியும்?"

தைத் தெரிவித்தான். அவர்கள் எவ்வளவோ ஆட்சேபித்தும் விக்கிரமனுடைய உறுதியை மாற்ற முடியவில்லை. ''ஒரு வேளை திரும்பி வரும்போது உங்களுக்கு ஒரு மகாராணியை அழைத்துக்கொண்டு வந்தாலும் வருவேன்'' என்று விக்கிரமன் விளையாட்டாகச் சொன்னது அவர்களுக்கு ஒருவாறு திருப்தி அளித்தது. ஆகவே, தாய்நாட்டுக்குப் போக, சகல வசதிகளுடன் வர்த்தகக் கப்பல் ஒன்று சித்தமாயிற்று. அந்தக் கப்பலில் இரத்தின வியாபாரியாக வேஷம் பூண்டு விக்கிரமன் பிரயாண மானான். வர்த்தக வேஷம் தரித்த மெய்க் காவலர் சிலரும் செண்பகத் தீவின் நிஜ வியாபாரிகள் சிலரும் அவனுடன் கப் பலில் புறப்பட்டார்கள்.

தாய்நாட்டில் எந்தத் துறைமுகத்தில் இறங்குவது என்பது பற்றிக் கொஞ்சம் சர்ச்சை நடந்தது. விக்கிரமன் முக்கியமாகப் போக விரும்பிய இடம் உறையூராதலால், நாகப்பட்டினம் துறைமுகத்தில் இறங்க லாம் என்று மற்றவர்கள் சொன்னார்கள். ஆனால், விக்கிரமனோ மாமல்லபுரத்துக்கே போக வேண்டும் என்றான். அவன் குழந் தையாயிருந்த காலத்திலிருந்து மாமல்ல புரத்துச் சிற்ப வேலைகளைப் பற்றிக் கேட்டிருந்தான். அவற்றைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவனுக்கு நெடு நாளாக உண்டு. பல்லவ வீரர்கள் அவனைச் சிறைப்படுத்திக் கொண்டுவந்து மாமல்ல புரத்துக் கடற்கரையில் கப்பலேற்றிய போதே, ''ஐயோ! இவ்வூரின் சிறந்த சிற்பங் களைப் பார்க்காமல் போகிறோமே?'' என்று வருந்தினான். இப்போது அங்கே இறங்கினால் அந்த ஆசை நிறைவேறு மல்லவா?

இதுவன்றி, இன்னொரு முக்கிய நோக்கமும் இருந்தது. தாய்நாட்டி லிருந்து சிறந்த சிற்பிகளையும் சித்திரக் காரர்களையும் செண்பகத் தீவுக்கு அழைத்துப் போக அவன் விரும்பி னான். நாளடைவில் செண்பகத் தீவை ஓர் அற்புத சிற்பக் கூடமாகவே செய்துவிட வேண்டுமென்பது அவன் கொண்டிருந்த மனோரதம். அத்தகைய சிற்பங்களையும் சித்திரக்காரர்களையும் மாமல்ல புரத்திலல்லாமல் வேறு எங்கே கண்டுபிடிக்க முடியும்? சோழ நாடுதான் இப்போது பழைய பெருமையெல்லாம் போய்ப் பாழடைந்து கிடக்கிறதே!

இதையெல்லாம் தவிர, ஒருவேளை விக்கிரமன் மாமல்லபுரத்தில் இறங்க விரும்பியதற்கு இன்னொரு காரணமும் இருந்திருக்கலாம். காஞ்சி நகர் வீதியிலும் பின்னர் மாமல்லபுரத்துக் கடற்கரையிலும் அவன் பார்த்த இளநங்கையை மீண்டும் ஒருநாள் பார்க்கக்கூடுமோ என்ற ஆசை அவன் உள்ளத்தின் அடிவாரத்தில் கிடந்தி ருக்கக்கூடும். இது விக்கிரமனுக்குக் கூடத் தெரியாமலும் இருக்கலாம். மனித உள்ளத்தின் அந்தரங்க மர்மம் அனைத் தையும் அறிந்துவிட்டதாக யார்தான் சொல்ல முடியும்?

(தொடரும்)



தேசமே திரண்டு

உள்ளும் புறமும்

‘அம்மா நான் கிளம்பறேன்’ என்று விடிகாலை ஐந்து மணிக்கே டாட்டா காட்டிவிட்டு பத்து மணி ஆபீஸுக்குப் புறப்படும் பெண். ஒரு மணி நேரம் நடந்தே பள்ளிக்கூடத்துக்குப் போகும் டீச்சர். சைக்கிளை மிதி மிதி என்று மிதித்தபடி மீட்டிங்குக்குப் போகும் மேனேஜர்.

என்ன ஆச்சு பிரான்ஸுக்கு? சர்ரென்று சீறிப்பாயும் பேருந்துகளும் வழுக்கிக் கொண்டு ஓடும் ரயில்களும் எங்கே போய்விட்டன? ஏன் இந்தத் திடீர் நடைப்பயணம்? ஏன் இந்த சைக்கிள் காதல்? சுற்றுச்சூழலில் ஆர்வமா? காற்று மாசடையக் கூடாது என்னும் சமூக அக்கறையா? இரண்டும் இல்லை. அங்கே ஸ்ட்ரைக் நடந்துகொண்டிருக்கிறது.

பின்னணியில், நிக்கோலஸ் சர்கோஸி. பிரான்ஸ் தேசத்து அதிபர். பதவியில் அமர்ந்து அரை ஆண்டு காலம் கூடப் பூர்த்தியாகவில்லை. அதற்குள் தேசம் முழுவதும் கொந்தளிக்கும் வகையில் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார். குறிப்பாக, ரயில்வே ஊழியர்களுக்கும் மின்துறை ஊழியர்களுக்கும். ‘கூடிய விரைவில் உங்கள் சம்பள விவகாரத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவர விரும்புகிறேன். பெரிதாக ஒன்றுமில்லை; உங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் ஓய்வூதியம் கட்!’

ஏன்? இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், ரயில்வே துறையிலும் மின்சாரத் துறையிலும் பணிபுரிய ஒருவரும் முன்வரவில்லை. நகரத்துக்கு நகரம், வீதிக்கு வீதி மைக் செட் வைத்து அழைத்துப் பார்த்தார்கள். பலனில்லை. காரணம், பயம். ரயிலில் கரி அள்ளிக் கொட்டும்போது கையைச் சுட்டுக் கொண்டுவிட்டால்? பராக்குப் பார்க்கத் தலையை வெளியில் நீட்டும்போது அடிபட்டுவிட்டால்? சடன் பிரேக் போடும்போது கீழே விழுந்துவிட்டால்? ஏதோ கோளாறு என்று ரயில் கவிழ்ந்துவிட்டால்? மின்துறை ஊழியர்களுக்கும் இதே பயம்தான். ‘மின்சார உற்பத்தியா? வேண்டவே வேண்டாம். நாங்கள் கூலி வேலை செய்தாவது பிழைத்துக் கொள்கிறோம். உயிருக்கு உலை வைக்கும் பொழைப்பு வேண்டாம்.’



வந்தாலும்...



* சர்கோஸி

ஆகவே, சில புளிப்பு மிட்டாய்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருந் தது. நல்ல சம்பளம்; பலமான பாதுகாப்பு வளையம். தவிரவும், ஐம்பது வயதில் ஓய்வு. அதாவது சம்பளத்துடன். உங்கள் பணிக் காலத்தைச் செவ்வனே முடித்து விட்டால், பென்ஷன் உங்கள் வீடு தேடி வரும். கால் ஆட்டிக்கொண்டே, காஃபி குடித்துக்கொண்டே பொழுதை ரம்மிய மாகக் கழிக்கலாம்.

மிட்டாய் வேலை செய்தது. 'சரி, போய்தான் பார்ப்போமே' என்று ஆட்கள் எட்டிப் பார்க்க ஆரம்பித்தனர். அப்படி ஒன்றும் உயிர் போகும் வேலை இல்லை என்று தெரிந்தது. ஒன்றுவிட்ட சித்தப்பா பையன், பெரியப்பாவின் தூரத்துச் சித்தப்பா பையன் என்று அறிந்தவர், தெரிந்தவர்களை எல்லாம் அழைத்து வந்து வேலையில் அமர்த்தினார்கள். மின்துறை, ரயில்வே துறை இரண்டும் ரொம்பி வழிய ஆரம்பித்தது.

இந்தப் பூர்வ கதையைச் சொல்லி சர் கோஸி முன் வைக்கும் வாதம் இதுதான். 'அப்போதைக்குப் புளிப்பு மிட்டாய் தேவையாக இருந்தது; கொடுத்தார்கள். இப்போது குழந்தைகள் பெரியவர்களாகி விட்டார்கள். இனியும் அவர்களுக்குப் புளிப்பு மிட்டாய் அவசியமா?'

சர்கோஸிக்கு முன்னரே ஒரு சிலர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். 1995-ல் மிட்டாய் கொடுக்கும் கையை இலேசாகப் பின்னுக்கு இழுத்துப் பார்த் தது அரசாங்கம். அவ்வளவுதான். ஊழி யர்கள் சுவிட்சை அணைத்துவிட்டுத் தெருவில் இறங்கிவிட்டார்கள்.

இப்போது மீண்டும் ஒரு போராட்டம். சர்கோஸி எந்த அளவுக்குத் தீவிரமாக இருக்கிறாரோ அதே தீவிரத் துடன் இருக்கிறார்கள் போராட் டக்காரர்கள். 'காது மந்தம்; கத்திப் பேசினால்தான் கேட்கும் என்னும் நிலையில் நீங்கள் என்ன செய்வீர் கள்? உரக்கக் கத்து வீர்கள்தானே? அதைத்தான் நாங் களும் செய்து கொண்டிருக்கிறோம். அதைவிடுங்கள், சர்கோஸி தன்னுடைய சம்பளத்தை 140 சதவீதம் உயர்த்திக் கொண்டிருக்கிறார் தெரியுமா? உண்மையிலேயே தேச நலன்தான் பிரதானமெனில் ஏன் அவர் தன் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடாது?'


சர்கோஸிக்கு ஆதரவளிப்பவர்கள் முன் வைக்கும் வாதம் இது. 'இது என்ன ஸார் அநியாயமா இருக்கு? அரசாங்க ஊழியர்கள் ஒரு வாரத்துக்கு 35 மணி நேரங்களுக்கு மட்டுமே வேலை செய்கிறார்கள். அதாவது ஒரு நாளைக்கு 5 மணி நேரம். இதுபோக, ஒரு வருடத்துக்கு ஐந்து வாரங்கள் சம் பளத்துடன் கூடிய விடுமுறை. ஐம்பது வயதாகும்போது மேஜை டிராயரை இழுத்துச் சாத்திவிட்டு, சந்தன மாலை யும் ரோஜா மாலையும் கமகமக்க ஓய்வு பெற்றுவிடலாம். பிரைவேட் கம்பெனி யில் இதெல்லாம் சாத்தியமா? இத் தனை காலம் இந்தச் சுகத்தை அனுபவித்தது போதாதா? தொடர்ந்து புளிப்பு மிட்டாயே சுவைத்துக் கொண் டிருக்க முடியுமா?

எதிர்வாதங்களை காது கொடுத்துக் கேட்கும் மனநிலையில் சர்கோஸி இல்லை. 'தேசமே திரண்டு வந்தாலும் என் முடிவைச் செயல்படுத்து வேன்' என்று முஷ்டியை உயர்த்திப் பேட்டியளித்துக் கொண்டிருக்கிறார் அவர். ●

மருதன்

வந்துவிட்டால் போதும்!

பணத்துக்காக பகவானை பிரார்த்தனை பண்ணுவது தப்புதான். கஷ்டம் போகணும், வியாதி தீரணும் என்று பிரார்த்தனை பண்ணுவதுகூட அவிவேகம் தான். பகவானுக்காகவே பகவான் என்ற பிரேமையோடு செய்கிற பக்திதான் நிஜமான பக்தி. ஆனால் பகவானோ, இப்படிப் பணத்துக்காகவும் கஷ்ட நிவர்த்திக்காகவும் பிரார்த்திக்கிறவர்களைக் கூட உயர்ந்தவர்கள் என்கிறார். ஏன் அப்படிச் சொல்கிறாரென்றால், பிரார்த்தனை செய்வது, எதுவோ ஒன்றுக்காக பகவான் என்று ஒருத்தனை நினைப்பது, நம்மால் முடியாத ஒன்றைச் செய்கிற மஹா சக்தன் அவன் என்பதால் அவனிடம் வேண்டிக்கொள்வது (இதிலேயே நம் வேண்டுதலை நிறைவேற்றி வைக்கும் அருள் மனசு அவனுக்கு உண்டு என்ற நம்பிக்கையும் இருக்கிறது) - இப்படி அநேக நல்ல விஷயங்கள் பணத்துக்காகவும், கஷ்ட நிவர்த்திக்காகவும் பிரார்த்திப்பதில்கூட இருக்கத்தானே செய்கின்றன? அதனால்தான் இப்படி பிரார்த்திப்பவர்களையும் உயர்ந்தவர்களாகச் சொன்னார். 'ஏதோ ஒரு தினுசில் என்னிடம் வந்துவிட்டால் போதும். அப்புறம் சரியான தினுசில் வரும்படியான பக்குவத்தை அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தந்துவிடலாம்' என்று நினைத்துத்தான் அப்படிச் சொன்னார்.



அன்போடு அவரை நினைக்கணுமென்பதுகூட இல்லை, கம்சன் மாதிரி பயத்தோடு, சிசுபாலன் மாதிரி குரோதத்தோடு நினைத்தால்கூட சரி, அவர்களும் நினைத்தார்களோ இல்லையோ, அதனால் அவர்களுக்கும் உயர்கதி கொடுப்பது என்று எதிலும் நல்லதைப் பார்த்தவர் அவர். அநேகக் கெட்டதில் துளி நல்லது இருந்தாலும் நல்லதை 'என்கரேஜ்' பண்ணிக்கொண்டே போய் அப்புறம் நல்லது கெட்டது இரண்டையும் விட்டுவிடும்படிப் பண்ணுவார். இதுதான் நம் வேத தர்மத்தின் வழி.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அருள்வாக்கு


December 2007 Rs.10/- 80 Pages
GOKULAM
THE Magazine for Children
Christmas Special!
Recipes
Craft
Puzzles
Stories
and
Potter Mania
too!

மின்னல் கதைகள்!

சிறிய டவுன். மாலை நேரம். பள்ளிகளில் இருந்து வெளியேறிய மாணவ, மாணவிகள் வீட்டை நோக்கிச் செல்ல, சிலர் அப்பகுதியில் இருந்த பங்க் கடைகளில், இருக்கும் காசுக்குத் தக்கப்படி இஷ்டப்பட்டதை வாங்கிக் கொண்டும் தின்றுகொண்டும் நடக்க...

கடையில் சாக்லேட் வாங்கிய பாலகணேசனிடம், "டேய், எனக்கு ஒரு ரூபா கடனா கொடுடா... நாளைக்கு எங்கம்மாகிட்ட கேட்டு வாங்கியாந்து தந்துடுறேன்" என்றான் பிரபு.

"காசு இல்லடா..." சொன்னவனிடம், திரும்பத் திரும்பக் கேட்க...

"இந்தா... இன்னைக்கு வாங்கிக்க. நாளைக்கு கண்டிப்பா கொடுத்துடணும்" என்று சொல்லிக் கொடுத்தான்.

காசை வாங்கி, கடையில் புதுசா வந்த கேக்கை வாங்கிக்கொண்டு திரும்பிய பிரபு, கடைக்காரனிடம் கையேந்தி நின்ற மனிதரைப் பார்த்ததும், அவனிடம் இருந்த கேக்கைக் கொடுக்க, வாங்கியவர் முகத்தில் ஒரு புன்னகை.

"ஆளே லூசாட்டம் இருக்கான். அவனுக்குக் கொடுக்கவா என்கிட்ட கடன் வாங்கினே? எதுக்குடா அவனுக்குக் கொடுத்த?" எரிச்சலுடன் பாலகணேசன் கூற, "ஏதோ தோணுச்சு. கொடுத்தேன்..." என்று சொன்னான் பிரபு.

'உங்க அப்பாவுக்கு திடீர்னு ஒரு நாள் பைத்தியம் பிடிச்சுட்டுது. கட்டிப் போட்டு வைத்தியம் பார்த்தோம். தப்பிச்சுப் போயிட்டார். எங்க இருக்காரோ... எப்படி இருக்காரோ... தெரியல!' என்று அடிக்கடி அவன் அம்மா அவனிடம் சொல்லிப் புலம்புவதை மட்டும் நண்பனிடம் அவன் சொல்லவில்லை!

– இரா.செயபாலன்

அப்பா!



உறவு!



"கொஞ்ச நேரம், கொஞ்ச நேரம்... கொஞ்சிப் பேசக் கூடாதா?"

"நோ... நோ... டியர் கணவா... பொன்னம்மா வர்ற நேரம்?"

"பொன்னம்மா என்ன மாமியாரா, இல்ல எம்.டி.யா?"

"பொன்னம்மா வீட்டு வேலைக்காரிதாங்க. ஆனா, அவளும் என்னைப் போல புதுப் பொண்டாட்டிதான்! கல்யாணமாகிப் போன இடத்தில், பேசினதைவிட ஒரு பவுன் நகை குறைஞ்சி போச்சுன்னு அம்மா வீட்டுக்கு விரட்டிட்டாங்க! ஒரு பவுன் நகைக்காக, பணம் சம்பாதிக்க தினமும் நாலு வீட்டுல வேலை செய்யுற அவளோட நேர்மையான உள்ளத்தை நான் மதிக்கறேங்க... காசு கொடுத்து வேலையை வாங்கலாம். மனசை வாங்க முடியாதுங்க. உணர்வுகளைப் புரிஞ்சுக்கிட்டா உறவு மலருங்க." புதுப் பொண்டாட்டியை பெருமை பொங்க ரசித்தான் ரவி!

– ந. லெட்சுமி

"மஞ்சள் மகிமை ஷூட்டிங் போக வசதியாகத்தான் கோலங்கள்ல என்னை கோமாவுல படுக்க வச்சாங்களா!" - தேவயானி ஆச்சர்யத்துடன் நம்மையே திருப்பிக் கேட்க, "நீங்கதான் பதில் சொல்லணும்" என்றோம்.

"அப்படியெல்லாம் இல்லீங்க. அதுக்கு அவசியமும் இல்ல. இது ஒரு திசைன்னா, அது வேற திசை. எதுக்கு அநாவசியமா ஒண்ணோடு ஒண்ண போட்டுக் குழப்புறீங்க?" என்றவர், "இனியா பத்திப் பேசலாமா?" என்று குஷியாகத் தன் குழந்தை பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டார்...

"அவதாங்க இப்ப எங்க உலகம். அவ வந்தப் புறம்தான் எங்க வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் கிடைச்சிருக்கு. அவ பண்ற சேட்டைகள என்னன்னு சொல்றது? ரொம்பச் சுட்டி. வீட்டையே அதகளம் பண்ணிடுவா. அப்பா, அம்மா ரெண்டு பேரையுமே அவளுக்குப் பிடிக்கும். அழகான மனசு அவளுக்கு. ரொம்பப் பெரிய ஆளா வரப் போறா பாருங்க."

"இப்போல்லாம் சினிமால அதிகமா பார்க்க முடிய



மனம் விரும்பும் விஷயங்கள்!

-தேவயானி

லையே'' என்றால்,

''நானேதான் தவிர்த்துட்டு வர்றேன். எனக்கேத்த கேரக்டர்களைத் தராம எது எதையோ தந்தா எப்படி நடிக்கறது? இப்பவும் நான் ஹீரோயினா நடிக்கத் தகுதியானவதான். இதை இயக்குநர்கள் புரிஞ்சுக்கணும்னு நினைக்கறேன்.

மறுபடியும் படம் தயாரிக்கிற ஐடியா கூட இருக்கு. நிச்சயமா என் கணவர் ராஜகுமாரன்தான் இயக்குநர். இவர் மாதிரி ஒரு கணவர் கிடைக்க நான் கொடுத்து வெச்சிருக்கணும். என்னோட எல்லா செயலுக்கும் பின்புலமா இருக்கற மகத்தான மனிதர். ரொம்ப சந்தோஷமா எங்க குடும்ப வாழ்க்கை போயிட்டிருக்கு. பல ஆண்களோட வெற்றிக்குப் பின்னால ஒரு பெண் இருக்கறதா சொல்ற மாதிரி, என் வெற்றிக்குப் பின்னால, முன்னால, எல்லாத்துலயும் என் கணவர்தான் இருக்கார்.''

இனிமையாகப் பேசிக் கொண்டிருந்தவர் திடீரென்று டென்ஷனாகிவிட்டார். காரணம், நாம் கேட்ட கேள்வி:

''அபத்தமா எடுக்கப்படுற சீரியல்கள்ல எப்படி உங்களால நடிக்க முடியுது? மனம் ஒப்பித்தான் பண்றீங்களா?''

''பெண்கள்தான் சீரியல்களோட டார்கெட். அவங்க என்ன எதிர்பார்க்குறாங்களோ அதைத் தெளிவா தந்து பொழைப்பை ஓட்டிக்கிட்டிருக்கோம். அபத்தமோ, தகிடுதத்தமோ... எல்லாம் பெண்களால ரசிக்கப்படுறதுனாலதான் எடுக்கப்படுது. அவங்க விரும்பலைன்னா, இவ்ளோ சீரியல் இன்னைக்குப் போயிட்டிருக்குமா? தன்னம்பிக்கை, தைரியம், சமூகத்துல ஒரு பெண் தனியாளா நின்னு சாதிக்க முடியும்ங்கற விழிப்புணர்வையெல்லாம் கூடத்தான் தொடர்கள் மூலமாப் பதிவு பண்றோம். இதெல்லாம் உங்க கண்ணுக்குத் தெரியலையா? முக்கியமா, வேலைன்னு வந்துட்ட பிறகு, தேவயானி எதையுமே மனசு விரும்பித்தான் செய்வா, இதை முதல்ல புரிஞ்சுக்கங்க.''

''சரி, புதுசா தொழில் ஏதோ தொடங்கப் போறீங்கன்னு கேள்விப்பட்டோமே...'' என்றோம் பேச்சை மாற்ற விரும்பி.

''அதுக்குள்ள தகவல் கசிஞ்சிடுச்சா! ரிக்கார்டிங் தியேட்டர் ஒண்ணு கட்டிட்டு வர்றோம். மிக விரைவுல திறப்பு விழா நடக்கப் போகுது. தமிழகம் என்னை வாழ வெச்சது. நான் தமிழகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டாமா? அதான் சினிமாவுலயே முதலீடு பண்றேன்.''

''ஆமா, ஒரு டைம்ல 'கோலங்கள் அபி'யா கவுன்செலிங்லாம் தந்தீங்களே... இப்ப எப்படி?''

''அது அப்பவே முடிஞ்சிடுச்சு. 'கோலங்கள்' அபிய, இன்னைக்கு தமிழ்நாட்ல எல்லாரும் ரோல் மாடலா பார்க்குறாங்க. அவங்களோட பிரச்னையை என்கிட்ட ஷேர் பண்ணித் தீர்வு கேக்குறாங்க. இப்பக்கூட, அப்பப்ப இது மாதிரி என்னை நாடி வர்றவங்களுக்கு என்னால முடிஞ்ச தீர்வைச் சொல்லித்தான் அனுப்பறேன்'' என்றவரிடம், மறுபடியும் ஆரம்பித்தோம்.

''ஏன் ஜவ்வு மாதிரி இழுக்கப்படுற தொடர்கள்ல நடிக்கிறீங்க... நீங்க டைரக்டர்கிட்ட சொல்ல மாட்டீங்களா...?''

''ஜவ்வுன்றதை நான் ஒப்புக்க மாட்டேன். மக்கள் ரசிக்காமலா கோலங்கள் ஆயிரமாவது எபிசோடை நெருங்கியிருக்கு! என்னை சொல்லச் சொல்றீங்களே, ஒரு டைரக்டருக்குத் தெரியாதா எது எதை, எப்படிப் பண்ணணும்னு! இழுத்தாலும் வரவேற்பு இருந்தாத்தான் இழுப்பாங்க. இல்லேன்னா கெட் அவுட்தான்.''



''ரொம்பக் கோபப்படுறீங்க... நோ கேள்விகள், நீங்களே பேசிடுங்களேன்...''

''இது ரொம்ப நல்லாருக்கே!'' என்றவர், உற்சாகமாகப் பேசினார்.

''என் நடிப்பைப் பத்தி

பல்வேறு விதமான விமர்சனங்கள் வருது. எல்லாத்தையும் ஏத்துட்டு உபயோகமானதைச் செயல்படுத்துவேன். என் கணவரும் ஒரு டைரக்டருங்கறதால என்னை கரெக்டா விமர்சிப்பார்.

சினிமாவுல ஹீரோக்கள் ராஜ்யம்னா, சீரியல்கள்ல ஹீரோயின்கள் ராஜ்யம். அந்த உலகம் வேற; இந்த உலகம் வேற. ஆனா உழைப்பு ஒண்ணுதான். கஷ்டம் ஒண்ணுதான். ஆனா, கிடைக்கிற புகழ்தான் வித்தியாசமானது.

என்கிட்ட பலபேர் சொல்ற விஷயம், என் டிரெஸ் சென்ஸ். சீரியல்ல என் கேரக்டர் எதுவோ அதுக்குத் தகுந்த மாதிரிதான் காஸ்ட்யூம்ஸ் செலக்ட் பண்றேன். பந்தா இல்லாம எல்லோருக்குமான உடையைத்தான் விரும்பி அணியறேன். இதுதான் பலரையும் கவர்ந்திருக்கு.

என்னோட குடும்பப் பிரச்னை எல்லாம் இப்ப சரியாயிடுச்சு. எந்த சர்ச்சைக்கும் எங்க குடும்பத்துல இடம் இல்லை!

என்னோட குடும்பப் பிரச்னை எல்லாம் இப்ப சரியாயிடுச்சு. எந்த சர்ச்சைக்கும் எங்க குடும்பத்துல இடமில்ல. எல்லோரையும் அரவணைக்கு அன்பான மருமகளா, நல்ல மனைவியா, தேர்ந்த குடும்பத் தலைவியா இருக்கறேன். என் குடும்பம், என் தொழில் ரெண்டையும் உயிரா மதிக்கறேன். எல்லாம் சேர்ந்து எனக்கு மகிழ்ச்சியைத் தினம் தினம் புதுப்புது விதத்துல தந்துக்கிட்டே இருக்கு'' என்ற தேவயானியிடம், 'உங்களுக்கு கோலம் போடத் தெரியுமா?' என்றோம்.

''நாலு புள்ளிக் கோலம் மட்டும் போடுவேன்'' என்றார் வெட்கப்பட்டுக் கொண்டே!

- மதுமிதா

அட்டை மற்றும் படங்கள்: **ஸ்ரீஹரி**

காணாமல்

படுதலம் சுகுமாரன்

கல்யாண மண்டபம் களை கட்டியிருந்தது. மின் விளக்கு அலங்காரம், மாவிலைத் தோரணம், வாழை மர வளைவு, உற்சாகப் பாடல்கள் வழியும் சவுண்ட் பாக்ஸ், ஓடிப்பிடித்து விளையாடும் குழந்தைகள், அதனால் வழிந்த கூச்சல்... உறவு ஜனங்களின் சங்கமம்... விருந்து கலேபரம். எல்லாமே மங்களகரமாக இருக்க, ஒரு ஜீவன் மட்டும்தான் உற்சாகமில்லாமல் இருந்தது.

வேறு யாருமல்ல... மணமகள் உமாதான்.

தனி அறையில் பட்டும், நகையும், பூச்சரங்களும் சுமந்துகொண்டு அமர்ந்திருந்த உமாவின் மனம் மட்டும் சோகத்தைச் சுமந்துகொண்டிருந்தது. மன உலைச்சலில் தலை வலித்தது. பார்த்த சிலர்,

"என்ன... பொண்ணு 'உம்'முனு இருக்காள். ஏதும் பிரச்னையா?" என்று விசாரித்ததில், அம்மா கல்யாணி ஆடிப் போனாள்.

மகளிடம் வந்து,

"உமா... கொஞ்சம் சிரிச்ச மாதிரி இரு. பார்க்கறவங்களுக்குச் சந்தேகம் வர்றது போல நடக்காதே..."

"என்னால சிரிக்க முடியாதும்மா. என் விருப்பத்துக்கு மாறா நடக்கற கல்யாணம். கல்யாணமில்லை. என்னை பலி கொடுக்க நடக்கற சடங்கு."

"நிறுத்து. இந்த நினைப்போடு கல்யாணம் நடந்தால், உனக்கு நல்லதுகூட கெட்டதாத்தான் தெரியும். பெத்தவங்க அக்கறை இல்லாம, முன்பின் யோசனை இல்லாம எதுவும் செய்ய மாட்டோம்... எல்லாம் போகப் போகச் சரியாயிடும்..."

"அம்மா, ப்ளீஸ்..."

"இத பார்... விவாதம் பண்ண இது நேரமில்லை. நீ முரண்டு பிடிக்கறதும் சரியில்லை. அப்பா கேள்விப்பட்டால் கோபப்படுவார். கோபம் வந்துட்டா அவர் மனுஷனா இருக்க மாட்டார்... தெரியும்தானே...! சமர்த்தா நடந்துக்க..." என்று சொல்லிவிட்டுப் போக,

உமா, வேதனையோடு சுவற்றில் சாய்ந்தாள்.

விடிகாலையில், மணப்பெண் அறையில் தீப்பிடித்ததுபோல் பரபரப்பு.

வெளிறிய முகத்தோடு, கல்யாணி பரபரப்பாக, கணவன் புருஷோத்தமனிடம் விரைந்தாள்.

அவன் காதில் கிசுகிசுத்தாள்.

இரவு தூக்கமில்லாமல், கல்யாணம் நல்லபடி நடக்க வேண்டுமே என்கிற சிந்தனையுடன், செலவுக் கணக்குகளைக் கூட்டிப் பார்த்துக்கொண்டிருந்த புருஷோத்தமன் அதிர்ந்தான்.

"என்னடி... சொல்ற..."

அடிக் குரலில் அழுத்தமாகக் கேட்டான்.

"உமாவைக் காணங்க..."

"எங்கயும் போயிருக்க மாட்டாள். இங்கதான் எங்காவது இருக்கணும்."

"பின் கதவு திறந்திருக்கு. பெட்டி மேல இந்தச் சீட்டு..."

நடுங்கும் விரலில் சிக்கி நடுங்கிய அந்தத் துண்டுச் சீட்டைப் பிடுங்கிப் பார்த்தான்.

'எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை. மன்னிக்கவும்' இரண்டே வரி.

பளீரென்று கல்யாணியின் கன்னத்தில் அறைந்தான்.

"நாயே... பொண்ணை வளர்த்த லட்சணமா இது? சொல்லு... யாரவன்..."

"எ... என்ன கேட்கறீங்க?"

"ஓடுகாலிப் பொண்ணு எவனோடு ஓடினாள்னு கேட்கறேன்..."

"அய்யய்யோ. அப்படியெல்லாம் இல்லீங்க."

"வேறெப்படி... குடும்ப மானம், அப்ப

னோட கௌரவம் எல்லாத்தையும் ஒரு நொடில மறந்து, கடைசி நேரத்துல ஒரு பொண்ணு கழுத்தறுக்கத் துணிஞ்சான்னா அதுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கணும்... யார் கொடுத்த தைரியம். அவளே ஓடினாளா... நீ வழியனுப் புனியா... சொல்லு...''

போனவள்!

"குடும்ப மானம். அப்பனோட கௌரவம் எல்லாத்தையும் ஒரு நொடில மறந்து. கடைசி நேரத்துல ஒரு பொண்ணு கழுத்தறுக்கத் துணிஞ்சான்னா அதுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கணும்..."



விழிப்புணர்வுக் கதை -4

"கடவுளே...! சத்தியமா எனக்கொன்னும் தெரியாதுங்க. இப்ப கல்யாணம் வேணாம்னுதான் சொல்லிக்கிட்டிருந்தாளே தவிர, யாரையும் விரும்பறேன்னு சொன்னதில்லைங்க."

"எப்படிச் சொல்லுவாள்... நீதானே கவனிச்சிருக்கணும். வெளியில யாரோடு போறா, வீட்டுக்கு யாரெல்லாம் தேடி வர்றாங்கன்னு நீதானே கண்காணிச்சிருக்கணும்... கோட்டை விட்டுட்டியேடி பாவி.... உன்னை..."

ஆவேசமாகக் கை ஓங்க, அவள் அலற... 'என்ன, என்ன' என்று எழுந்தனர் உறங்கிக் கொண்டிருந்தவர்கள்.

சங்கதி வெளிச்சம் போல் பரவியது.

கூச்சல் குழப்பம், தேடல்...

மாப்பிள்ளை முத்துராஜ் முகம் இறுகினான்.

"அலங்காரம் பண்ணி மூக்கறுத்த கதையாய் இருக்கு. என்னை இப்படி அவமானப்படுத்தணும்னு எத்தனை நாள் கங்கணம் கட்டித் திரிஞ்சீங்க..."

"மாப்ள..."

"நான் மண்டபத்துக்குத் தாலிக் கயிறோடு மட்டுமில்ல, வீச்சரிவாளோடும்தான் வந்திருக்கேன். பழைய குடும்பப் பகையை மறந்து, மரியாதை கொடுத்து வந்திருக்கேன். என்னைச் சீண்டி, கொலைகாரனாக்கிப் புடாதீங்க."

"ஆவேசப்படாதப்பா. சத்தியமா நாங்க ஒரு பாவமும் அறியாதவங்க. அவளை நாலெழுத்து படிக்க அனுப்பினதுதான் நாங்க செஞ்ச முட்டாள்தனம். அதுக்கான தண்டனையைக் கொடுத்துட்டாள். அரிவாளை என் கைல கொடு... எங்கிருந்தாலும் தேடிப் பிடிச்சு, நானே பொலி போட்டுர்றேன்." உணர்ச்சி வேகத்தில் கத்தினான் புருஷோத்தமன்.

முத்துராஜின் அப்பா வந்து, "இன்னும் என்னடா பேச்சு...நட! மத்தத அப்புறம் பார்த்துக்குவோம்" என்று இழுத்த நேரம்,

கல்யாண மண்டபத்தின் முன், அந்த பைக் வந்து நின்றது.

பைக்கில் இருந்தவரைப் பார்த்து, எல்லோரும் புருவம் உயர்த்தினர்.

பைக்கில் இருந்து இறங்கிய போலீஸ்காரர், மண்டபத்தின் பெயரைச் சரி பார்த்துக் கொண்டு உள்ளே நுழைந்து, அங்கிருந்தவர்களைப் பார்த்து..

"இதுல உமாங்கற பொண்ணோட பேரண்ட்ஸ் யாரு?..." என்று தோரணையாக கேட்க,

புருஷோத்தமனும் கல்யாணியும் வேகமாக முன்னால் வந்து நின்றனர்.

"நீங்கதானா...?"

"ஆமாங்க..."

"ஸ்டேஷனுக்கு வாங்க..."

"அய்யோ... எம் பொண்ணுக்கு என்னங்க ஆச்சு..." என்று கல்யாணி பதற...

"சார்.... அவ தனியா வந்திருக்காளா... எவனோடவாவது ஜோடியா வந்திருக்காளா...!" என்று கறுவினான் முத்துராஜ்.

"நீ யாரு...?"

"தாலி கட்ட இருந்த ஏமாளி..."

"மாப்பிள்ளையா... நீயும், உன் பேரண்ட்சும்கூட வாங்க" என்று சொல்லிவிட்டுப் போக, ஒரு கூட்டமே ஸ்டேஷன் நோக்கிப் படை எடுத்தது.

மர பெஞ்சில் ஓரமாகத் தலை கவிழ்ந்து உட்கார்ந்து தேம்பிக்கொண்டிருந்தாள் உமா.

அவள் மட்டும்தான் இருந்தாள்.

பார்த்தவுடனே ஆவேசப்பட்ட புருஷோத்தமனை, போலீஸ்காரர் அதட்டினார். அதற்குள் கல்யாணி வேகமாய்ப் போய்,

"இப்படிப் பண்ணித் தொலைச்சிட்டியேடி பாவி..." என்று உமாவைப் போட்டு உலுக்கினாள்.

எஸ்.ஐ. தடிமனான குரலில்,

"இந்தாம்மா... தப்ப நீங்க பண்ணிட்டு,

தூறல் கவிதை

விடுமுறை நாளொன்றில்
குழந்தைகளற்ற
தனிமையில்
உடைந்தழுகிறது
வகுப்பறை!



திருமயம் பெ.பாண்டியன்

✱ சுவாமிநாதன்



மூன்றிலும் முத்திரை!

கடந்த 2005ஆம் ஆண்டில் நாற்பது தியேட்டர்களோடு கணக்கைத் துவக்கிய பிரமிட் சாய்மிரா தியேட்டர் நிறுவனம், இந்த ஆண்டு தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகம், மும்பை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா என்று 703 திரையரங்குகளாக வளர்ந்திருக்கிறது. "2010ஆம் ஆண்டில் இந்திய சினிமா வர்த்தகம் 5 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டிப் பிடித்து விடும். இத்துறை படங்கள் தயாரிப்பு, விநியோகம் மற்றும் திரையிடுதல் ஆகிய மூன்று துணைத் துறைகளோடு இயங்குகிறது. இந்த மூன்றிலும் முத்திரை பதித்திருப்பதே பிரமிட்டின் சிறப்பு. இத்துறை வருவாய்க்கு முக்கிய ஆதாரமாகத் திரையிடுதல் இருப்பதால், இந்திய சினிமா தியேட்டர்களின் தரத்தை சர்வதேச அளவுக்கு உயர்த்தும் முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம்" என்கிறார் பிரமிட் சாய்மிராவின் நிர்வாக இயக்குநர் சுவாமிநாதன்.

அந்தப் பெண்ணை அடிக்கப் போறீங்களே... முறைப்படி உங்களைக் கைது பண்ணிக் கூட்டி வந்திருக்கணும். அந்தப் பெண் வேண்டிக் கிட்டதால கௌரவமா வரவழைச்சேன்... அப்பா யாரு... நீங்கதானா? படிச்சிருக்கீங்களா...''

''அக்கௌண்ட்ஸ் ஆபீஸ்ல ஹெட்க்ளார்க்'' என்றான் புருஷோத்தமன். ''படிச்ச ஆளா இருக்கீங்க. நீங்களே தப்பு பண்ணலாமா? மேஜராகாத பொண்ணைக் கட்டாயப்படுத்திக் கல்யாணம் பண்றது சட்டப்படி குற்றம். தெரியாதா உங்களுக்கு?'' என்று அதட்டினார்.

''இல்ல சார், பொண்ணு மேஜர்தான்.''

''பொய். டேட் ஆஃப் பர்த் பிரகாரம் பொண்ணுக்குப் பதினேழே முடியல. ப்ளஸ்டூ படிச்சிட்டு ரிசல்ட்டுக்கு காத்துக்கிட்டிருக்காள். மேல் படிப்பு படிக்கணும், வேலைக்குப் போகணும், வாழ்க்கைல நிறைய சாதிக்கணும்னு நிறைய கனவுகளோடு இருக்குறாள். அந்தக் கனவைக் கலைச்சு, வாழ்க்கையை நசுக்கறது தப்பில்லையா! உங்களைப் பார்த்தால் வசதியா தெரியறீங்க. படிக்க வைக்கறதுல சிரமம் இருக்கும்னு தோணல. அப்புறம் ஏன்...! பொண்ணு நிறையப் படிச்சா அதுக்கேத்த மாப்பிள்ளை தேடணும், செலவு நிறைய ஆகும்னு பயமா... இப்பெல்லாம் பொண்ணுங்க அவங்களே சம்பாதிச்சு கல்யாணம் பண்ணிக்க ஆரம்பிச்சுட்டாங்க தெரியுமா...''

கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

பிறகு, ''படிக்க வைக்கறதுல சிரமமில்லீங்க. ஆனால், காலங்கெட்டுக் கிடக்குங்க. சின்ன பொண்ணுங்கல்லாம் 'லவ்' பண்ணிக்கிட்டு ஓடிப் போகுதுங்க. தப்பு நடந்து போகுது. இவகூட படிச்ச ஒரு பெண் அப்படித்தான் ஓடிப் போச்சு. அதுலருந்து ஒரு பயம். அதான் சொந்தத்துலயே மாப்பிள்ளை பார்த்து, கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணோம். கல்யாணத்துக்குப் பிறகு படிக்கறதானால் தாராளமா படிக்கட்டும்...'' என்றாள் கல்யாணி.

''நான் படிச்சுட்டு, அப்புறம் கல்யாணம் பண்ணிக்கறேன்...'' என்றாள் உமா, சட்டென்று.

''உன் க்ளாஸ்மேட் மாதிரி நீயும் செஞ்சிடுவேன்னு பெத்தவங்க பயப்படறாங்களே...'' - எஸ்.ஐ. கேட்க,

''என்னைக்கிருந்தாலும் முத்துராஜ் மாமாவைத்தான் கட்டுவேன்'' என்று உமா அழுத்தம்திருத்தமாகச் சொல்ல, முத்துராஜுக்குக் கோபம் போன இடம் தெரியவில்லை. சட்டென்று, ''அதான் சொல்லிருச்சில்ல, உமா படிக்கட்டும். நானும் காத்துக்கிட்டிருக்கேன்'' என்றான்.

போலீஸிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு வெளியில் வந்தனர். சாதித்துவிட்ட பெருமிதத்தோடு அவர்களுள் ஒருத்தியாக நடைபோட்டாள் உமா. ●

நிறம்

டை போட்டுக் கொள்பவர்களுக்குத் தலையில் தோல் அலர்ஜி தவிர, தலைவலி போன்ற பாதிப்புகள் எதுவும் ஏற்படாது!

வயதானவர்களுக்கு மட்டுமே என்றிருந்த தலைமுடிச் சாயம் (டை), இன்றைக்கு இளைய தலைமுறையின் விருப்பமான விஷயமாகவும் ஆகிவிட்டது. சரி, தலைக்கு டை அடிக்கும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்னென்ன?

★ நீங்கள் முதன் முதலாகத் தலைக்கு டை அடிப்பவராக இருந்தால், பார்லருக்குச் சென்று செய்துகொள்ளுங்கள். காரணம், முதல் முறை நீங்களே முயன்று பார்க்கும்போது உங்களுக்குத் திருப்தி கிடைக்காது.

★ வெள்ளையைக் கறுப்பாக்கவோ, தலை முடி நிறத்தை மாற்றவோ கிடைக்கும் எல்லா டைகளும் இரசாயனக் கலவைகள்தான். 'இயற்கையான டை எங்களுடையது' என்று உங்கள் தலையில் யாராவது 'டை' கட்டினால் ஏமாறாதீர்கள்!

★ டை அடிப்பவர்களுக்கு முதலில் தேவை நேரமும் பொறுமையும்தான். சரியாக ஒருமணி நேரம் உங்கள் கைவசம் இல்லாவிட்டால், இந்தக் கலையில் இறங்க வேண்டாம். அவசரப்படுவது உங்கள் தலையை அசிங்கப்படுத்துவதில்தான் போய் முடியும்.

★ டை போட்டுக்கொள்ளும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் அலர்ஜி. உங்கள் தலையில் அரிப்பும், சிறு சிறு சிவப்புப் புள்ளிகளும் ஏற்படுகிறது என்றால், உடனடியாக டை போடுவதை விட்டுவிடுங்கள். டை நமக்கு அலர்ஜி என்று எப்படிக் கண்டுபிடிப்பது? டையைக் காது குடையும் பட்ஸில் கொஞ்சம் தொட்டுக்கொள்ளுங்கள். காதுக்குப் பின்புறம் பட்ஸால் டையைப் புள்ளியாய் வையுங்கள். அது காயக் காய, மீண்டும் மீண்டும் டை புள்ளியை வைத்துக்கொண்டே வாருங்கள். இருபத்து நான்கு மணி நேரக் காலகட்டத்தில் டை வைத்த இடத்தில் அரிப்போ, சிவப்பு நிற மாறுதலோ ஏற்படவில்லையென்றால், டை அலர்ஜி இல்லை எனத் தெரிந்துகொள்ளலாம்.





★ எப்போதும் 'டை' அடிக்க அதற்கென்று உள்ள ப்ரஷ்ஷையே பயன்படுத்த வேண்டும். டை கலவைக்கு மெட்டல் கிண்ணங்களை வைத்துக்கொள்ள வேண்டாம். கண்டிப்பாகக் கைகளில் உறை போட்டுக் கொள்ளவும்.

★ சரியான முறையில் 'டை' அடிப்பதும் ஒரு கலையே. ப்ரஷ்ஷால் கலவையைத் தொட்டெடுத்து (கீழே சொட்டும் அளவில் கலவை இருக்கக் கூடாது), முடிகளைக் கற்றைக் கற்றையாகப் பிடித்து வேரிலிருந்து ப்ரஷ்ஷால் டையைத் தடவுங்கள். பிறகு, அந்தக் கற்றைகளிலிருந்து மற்ற இடங்களுக்கு மிக நளினமாக டை கலவையைப் பரப்புங்கள். தலையின் உச்சிக்கு எல்லா முடியையும் கொண்டு வந்து கலவையைத் தடவுங்கள். கவனம், மேலோட்டமாகத் தடவக்கூடாது.

★ நரைத்த முடிக்காக 'டை' அடிப்போர் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தலை முழுவதும் பரவலாகவும் கச்சிதமாகவும் டை அடித்த பின், நாற்பது நிமிடங்கள் நன்றாகக் காயவிட வேண்டும். பின்னர் தலையில் கொஞ்சம் நீரை விட்டு ஒரு நிமிடம் தடவி விடுங்கள். பிறகு வெதுவெதுப்பான தண்ணீரால் தலையை அலசவும்.

★ டை அடிக்கும் முன்போ அல்லது டை அடித்தவுடனோ 48 மணி நேரத்துக்கு ஷாம்பூ உபயோகிக்க வேண்டாம்.

★ நரைக்கு, ஃபேஷனுக்கு என்று தொடரும் 'டை' ஒரு பக்கம் இருக்க, நெற்றியிலிருந்து நான்கு அங்குலத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் தகதகவென கலர் மாற்றிக்கொள்ளும் நாகரிகமும் வந்துவிட்டது. இப்படித் தங்கமயமாக்கிக் கொள்ள கலர் டைகள் மார்க்கெட்டுக்கு வந்துவிட்டாலும், இதைச் செய்துகொள்ள அழகு நிலையங்கள்தான் பெஸ்ட் சாய்ஸ்.

★ நீங்களே வீட்டில் இயற்கை டையைத் தயாரித்துக் கொள்ளலாம். மருதாணியை அரைத்துப் பவுடராக்கி, அதனுடன் முட்டையின் வெள்ளைக் கரு, தேநீர் டிகாஷனைக் கலந்து டை தயாரிக்கலாம். ஆனால், இந்தக் கலவை உங்கள் வெண் நரைகளைக் கருப்பாக்காது. அதே சமயம் பொன்னிறமாகவும் மாற்றாது. வெள்ளைக்கும், பொன் நிறத்துக்கும் இடையில் மருதாணி சிவப்பு கலந்து ஒரு வித்தியாசமான நிறத்தைக் கொடுக்கும். ஃபேஷனுக்கு உபயோகப்படும்.

★ வீட்டிலேயே டை போட்டுக்கொள்ளும் வழக்கமுடையவர்கள் இன்னொருவர் மூலம் போட்டுக்கொள்வது நல்லது. அப்போதுதான் தலையை முழுமையாகக் கவனித்துப் போட முடியும்.

★ டை போட்டுக் கொள்பவர்களுக்குத் தலையில் தோல் அலர்ஜி தவிர, தலைவலி போன்ற பாதிப்புகள் எதுவும் ஏற்படாது என்பது மருத்துவ நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது.

– கௌசி



மாறும் தலைகள்!

காதலுக்கு நேர் திசையில்...



* பாலாஜி சக்திவேல்

'காதல்' தந்த இயக்குநர் பாலாஜி சக்திவேல், அடுத்து 'கல்லூரி'க்கு உயிர் கொடுத்திருக்கிறார். இந்தப் படத்தையும் இயக்குநர் ஷங்கரே தயாரிக்கிறார். 'தமன்னா'வைத் தவிர, கதாநாயகன் அகிலில் தொடங்கி படத்தில் நடிக்கும் பெரும்பாலானவர்களுக்கு இது முதல் படம். தமன்னாவே ஒரு கட்டத்தில் 'எனக்கும் இது முதல் படமாக இருந்திருக்கக் கூடாதா' என்று ஏங்கியிருக்கிறார். டெக்னீஷியன் சைடிலும் ஒளிப்பதிவாளர் செழியன், கலை இயக்குநர் மயில் கிருஷ்ணமூர்த்தி என்று அறிமுகம் தொடர்கிறது.

● யதார்த்தத்தைத் தன் ஆயுதமாகக் கொண்டிருக்கும் பாலாஜி சக்திவேல், 'கல்லூரி'யிலும் நடைமுறை வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். சிவகங்கையில் படப்பிடிப்பு நடந்தபோது, அங்கிருக்கும் மக்கள் தங்கள் பகுதியில் ஷூட்டிங் நடக்கிறது என்று முதலில் நம்பவே இல்லையாம். காரணம், அவர்கள் அதுவரை பார்த்திருந்த சினிமா ஷூட்டிங் வேறு. ஆனால், 'கல்லூரி'யின் படப்பிடிப்பு மக்களோடு மக்களாக எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி யதார்த்தமாக, மிக எளிமையாக நடந்திருக்கிறது.

● காதல் மூலம் ரசிகர்களின் மனத்தில் பதிவான பாலாஜி சக்திவேல், 'கல்லூரி'யைக் 'காதலுக்கு நேர் எதிர் திசையில் இயக்கியுள்ளார். எல்லோரையும் போல் நானும் இந்தப் படத்துக்காக ஆவலோடு காத்திருக்கிறேன்' என்று கூறும் டைரக்டர் ஷங்கர், ''என்னால் யதார்த்த சினிமாவைத் தர முடியாது. காரணம், என்னிடம் ரசிகர்கள் எதிர்பார்ப்பது வேறு. பிரமாண்டம், பிரமிப்பு என்று தொடரும் எனக்குள்ளும் தோள் மீது கை போட்டுப் பேசும் சினிமா தர வேண்டுமென்கிற ஆசை இருக்கிறது. அதன் வெளிப்பாடாகத்தான் நல்ல கதைகளைத் தயாரிக்கிறேன்'' என்கிறார்.

● ஜோஷ்வா ஸ்ரீதர் இசையில் 'கல்லூரி' பாடல்கள் பட்டையைக் கிளப்பி வருகின்றன. 'எஸ்' மியூசிக் என்னும் ஆடியோ நிறுவனம் தொடங்கி, அதன் மூலமே 'கல்லூரி' ஆடியோவை வெளியிட்டிருக்கிறார் ஷங்கர்.

● ''கல்லூரியை எப்போதுமே மிகைப்படுத்திக் காட்டுவதுதான் தமிழ் சினிமா. ஆனால், கல்லூரி வாழ்க்கையை முடித்துவிட்டு எங்கெங்கோ கலைந்து போனவர்களின் உணர்வுகளையும், இந்நாளில் படித்துக்கொண்டிருக்கும் மாணவ-மாணவியர்களின் மனநிலைகளையும் ஒன்று சேர பிரதிபலிக்கும் விதமாக இப்படம் இருக்கும்'' என்கிறார் இயக்குநர் பாலாஜி சக்திவேல்.



ஹீரோ இளையராஜா!

'கண்களும் கவிபாடுதே' - கவித்துவமான தலைப்பு வைப்பதில் தமிழ் இயக்குநர்களை யாரும் அடித்துக்கொள்ள முடியாது.

''அது உண்மைதான். இளைய தலைமுறையைக் கவரத்தான் இந்த டைட்டிலை வைத்தேன்'' என்கிறார் டைரக்டர் கே.சந்தர்நாத். யார் இவர்? பி.வாசுவிடம் முப்பது படங்களுக்கு மேல் இணை இயக்குநராகப் பணியாற்றியவர். இது இவரின் முதல் படம்.

''சென்னையில் ஹாஸ்டலில் தங்கிப் படித்துக்கொண்டிருக்கும் மூன்று இளைஞர்கள், தங்கள் நண்பனின் தங்கை திருமணத்துக்காக கிராமத்துக்குச் செல்கிறார்கள். அங்கே மூன்று பெண்கள் அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடுகிறார்கள். இந்தப் பின்னணியைச் சுற்றிப் பின்னப்பட்ட கதைதான் 'கண்களும் கவிபாடுதே' '' என்கிறார் சந்தர்நாத்.

இந்தப் படத்திலும் மூன்று புதுமுகங்கள் கதாநாயகர்களாக அறிமுகமாகிறார்கள். ஜோடியாக மூன்று நாயகிகளும்.

''படத்தின் க்ளைமேக்ஸ் பேசப்படக்கூடிய விதத்தில் இருக்கும். முதலில் க்ளைமேக்ஸ்தான் எனக்குத் தோன்றியது. அதன் பிறகுதான் கதையையே யோசித்தேன்'' என்கிறார் சந்தர்நாத்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு இளையராஜா இசையமைக்கிறார். கண்ணதாசனின் மகள் விசாலி மனோகரன் பாடல்களை எழுதியிருக்கிறார்.

''மூன்று ஹீரோக்கள் இருந்தாலும் படத்தின் நிஜமான ஹீரோ இளையராஜாதான். இந்த ஆண்டின் அற்புதமான இசையை அவர் வழங்கியதில் எனக்கு மிகப் பெருமை'' என்கிறார் சந்தர்நாத்.

- ரேவதி



எடுத்த குறிக்கோளை அடைய எல்லோருமே உண்மையாக முயற்சி செய்தோமானால், மற்ற விஷயங்களில் வளைந்து கொடுப்பதில் தவறில்லை!



வளைந்து கொடு!

அது ஒரு ரம்ஜான் மாதத்து மாலை. காந்திஜியைச் சந்திக்க, 'எல்லை காந்தி' கான் அப்துல் காபர்கான், காந்தி ஆசிரமத்துக்கு வந்திருந்தார். கூடவே, தம் பேரனையும் அழைத்து வந்திருந்தார். அந்தச் சிறுவனுக்கு நாட்டு நடப்பு, காந்திஜி பற்றிய விவரங்கள் தெரிய நியாயம் இல்லை. ஆனால், ஏதோ ரம்ஜான் மாத மாலை நேரப் பயணம் என்ற எண்ணத்தில் வந்துவிட்டான். எனவே, காந்திஜியும் எல்லை காந்தியும் தேசிய விஷயங்கள் பேசிக்கொண்டிருந்தபோது, அவன் கண்கள் தேடியதெல்லாம் பிரியாணி பொட்டலத்தைத்தான். அனைவரையும் கூர்ந்து கவனிக்கும் காந்திஜி, சிறுவன் எதையோ எதிர்பார்த்து ஏமாந்துகொண்டு இருக்கிறான் என்பதையும் புரிந்துகொண்டார். ''என்ன தேடுகிறாய்? என்ன வேண்டும்?'' என்று அவர் கேட்க, ''எனக்குப் பிரியாணி வேண்டும்'' என்று அந்தச் சிறுவன் சொன்னான். எல்லை காந்தி அவனைக் கடிந்துகொண்டார். காந்திஜி, உடனே ஒருவரை அழைத்து, பிரியாணி வாங்கி வரச் சொல்லி, தம் கையாலேயே அந்தச் சிறுவனுக்குக் கொடுத்தார். காந்தி ஆசிரமத்தில் அசைவ உணவு உண்ட ஒரே ஆள், 'எல்லை காந்தி'யின் பேரன்தான்! ஓட்டு வங்கியைக் கொள்ளையிட ரம்ஜான் கஞ்சி குடிப்பதுபோல் போட்டோவுக்கு போஸ் கொடுக்கும் விவகாரம் அல்ல இது. ஓட்டுரிமையே இல்லாத ஒரு சிறுவன் கேட்டுக்கொண்டதற்காக, ஒரு தேசப்பிதா வளைந்து கொடுத்த சரித்திரம்.

காந்திஜி மேல்படிப்புப் படிக்க வெளிநாடு செல்லும் முன் தம் தாயிடம் கொடுத்த மூன்று வாக்குறுதிகளில் ஒன்று 'புலால் உண்ணாமை'. அதனால் அவர் லண்டனில் பல அவஸ்தைகளுக்கு உள்ளாகி, சாப்பிடக் கூட எதுவும் கிடைக்காமல் தவித்த காலம் உண்டு. தேடிக்

வையத் தலைமை கொள் 4





கண்டுபிடித்து சைவ உணவு ஹோட்டல்களுக்குச் சென்று சாப்பிட்டதும் உண்டு. 'வெஜிடேரியன் காங்கிரஸ்' என்ற அமைப்பில் சேர்ந்து பணியாற்றிய காந்திஜி, பின்னர் தம் ஆசிரம வாசிகளுக்குப் 'புலால் உண்ணாமை'யை ஒரு கட்டளையாகவே பிறப்பித்து இருந்தார்.

காந்திஜி தம் வாழ்நாள் முழுவதும் - கடைசி மூச்சுவரை ராமநாமம் சொல்லிக்கொண்டு இருந்தவர்; தீவிரமான ஆத்திகர். தினம் தினம் பிரார்த்தனைக்காக நேரம் ஒதுக்குபவர். ஆனால், தம் அரசியல் வாரிசாக, நாத்திகரான ஜவஹர்லால் நேருவைத்தான் தேர்ந்தெடுத்தார். அவர் பல விஷயங்களில் காந்திஜியுடன் மாறுபட்டவர். ஆத்திகம் ஆகட்டும், கிராமக் கைத்தொழில் ஆகட்டும்... இதிலெல்லாம் அதிக நம்பிக்கை இல்லாத மனிதர் அவர்.

ஆனால், அன்றைய நிலையில் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொள்ளும் தலைவராக இருந்தவர் அவர். காந்திஜி தம் கருத்து எதையும் நேரு மீது திணிக்காமல், அந்த வேறுபாடுகளை அப்படியே ஏற்றுக்கொண்டு தம் அரசியல் வாரிசு என்றும் அறிவித்தார்.

கணினிப் புரட்சிக்குச் சற்று முன்னால்கூட இந்தியாவை 'பாம்பாட்டிகள் தேசம்' என்றுதான் மேலைநாடுகள் கருதி இருந்தன. நான் என் பணி நிமித்தம் இருபது ஆண்டுகளுக்கு முன் வெளிநாடு சென்றபோதுகூட, என்னிடம் அதிகம் கேட்கப்பட்ட கேள்விகள் பாம்பைப் பற்றித்தான்! நம் நாட்டுச் சுற்றுலா வளர்ச்சியைப் பற்றி பேச வந்த இந்திய அதிகாரியும், அந்த நாட்டுத் தொலைக்காட்சியில், கழுத்தில் ஒரு பாம்பை அணிந்துகொண்டு பேட்டி அளித்தார்! உலகம் இந்தியாவைப் பரதேசிகளின் பிரதேசமாகக் கருதிய காலகட்டத்தில், ஒரு மேல்நாட்டுப் பெண்மணி, தம் நாடு, உறவு அனைத்தையும் உதறிவிட்டு சகோதரி நிவேதிதையாக நம் நாட்டுக்கு வந்து, விவேகானந்தர் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்தார். விவேகானந்தர் சென்ற இடமெல்லாம் தாமும் சென்று, அவர் பேசிய பேச்சுக்களைப் பதிவு செய்தவர். இந்தியா மீது இருந்து வந்த 'பாம்பாட்டி' இமேஜ், சுவாமிஜியைப் பார்த்த தருணத்திலேயே மாறியது. நம்மீது காழ்ப்புணர்வும், நம்மை ஆண்டு அதிகாரம் செய்ய வேண்

'சேவாலயா' முரளிதரன்

டும் என்ற எண்ணமும் கொண்டிருந்த மேலை நாடுகளிலிருந்து தம் சீடர்களாய்ப் பலரை வரவழைக்க விவேகானந்தரால் முடிந்தது.

'ஓடி விளையாடு பாப்பா' என்று சொன்ன பாரதி, அடுத்த வரியிலேயே 'கூடி விளையாடு பாப்பா' என்று கூறினார். அத்துடன் நிற்கவில்லை. 'குழந்தையை வையவும் கூடாது' என்று அறிவுறுத்துகிறார். மாற்றுக் கருத்து உள்ளவர்களுட னும் சேர்ந்திருந்து, அவர்களையும் அரவணைத்து, யாரை யும் குறை கூறாமல் நாம் எடுத்த பணிக்காக ஒரு டீம் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் குழந்தைப் பருவத்திலேயே விதைக்க நினைத்தார் பாரதி. 'ஒற் றுமை இன்றேல் அனைவருக்கும் தாழ்வு' என்ற எண்ணம் ஆரம்பத்திலேயே உருவாகுதல் நன்று என்ற எண்ணத்தையும் விதைத்தார்.

ஆலமரத்தின் கீழ் புல் முளைப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால், விழுதுவிட்டுப் பல ஆல மரங்களாக பெரிய ஆலங் காடு உண்டானதையும் பார்த்து இருக்கிறோம். காந்தி, பாரதி, விவே கானந்தர் இவர் களெல்லாம் இரண்டாம் நிலைத் தலை வர்களை உரு வாக்க வில்லை. இவர் களிடம் உருவான வர்கள் எல் லோருமே முதல் நிலைத் தலைவர்கள் தான். இவர்கள் வாழ்ந்த காலத்தி லும் சரி, அதன் பின் னரும் சரி, பல ஆல மரங்களை உருவாக் கிய பெருமை இவர் களைச் சேரும். நேரு, ராஜாஜி, படேல், நிவே திதா, ராமகிருஷ்ணானந்தா, அளசிங்கப் பெருமாள், பாரதி தாசன் யாருமே சாதாரண மனிதர்கள் கிடையாது!

ஆலமரத்தின் கீழ் புல் முளைப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால், விழுதுவிட்டுப் பல ஆலமரங்களாக பெரிய ஆலங்காடு உண்டானதையும் பார்த்து இருக்கிறோம்!



எந்த ஒரு செயலையும் விட அதனைச் செய்யப் போகிற டீம்தான் மிக முக்கியம். தொழில் பண்ணப் பெருநிதியும் வேண்டும். அதில் பலர் துணை புரிதல் வேண்டும். இரண்டு பேர் செய்கிற வேலை என்றாலே மூன்று வகை கருத்துகள் இருப்பது வாஸ்தவம்தான். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களில், கருத்து வேறுபாடுகள் எல்லாம் இருக்கும் தான். இது எதுவுமே இல்லையென்றால் அது டீம் இல்லை. வெறும் ஜால்ரா கூட்டம்தான். எனவே, எடுத்த குறிக்கோளை அடைய எல்லோருமே உண்மையாக முயற்சி செய்தோமானால், மற்ற விஷயங்களில் வளைந்து கொடுப்பதில் தவறில்லை. அப்போதுதான் 'கூடித் தொழில் செய்தல்' சாத்தியமாகும்.

(சுவாசிப்போம்)

தராசு

நீங்கள் கேட்டவை

● ஜோ.பன்னீர்செல்வம், சென்னை -12

? பிரதமரின் ரஷ்ய பயணம் வெற்றியா? தோல்வியா?

! ரஷ்யா நேரடியாக அணு சக்தி உற்பத்திக்கு உதவ மறுத்தது தோல்வி. ஆனால், அமெரிக்கா விதித்த அதே நிபந்தனையை விதித்ததன் மூலம், அந்த நிபந்தனைகளை கம்யூனிஸ்ட்டுகள் ஏற்கிற நிலைமை உருவாகியிருப்பது மறைமுகமாக பெரிய வெற்றிதான்!

● எஸ்.காயத்ரி, சென்னை - 24

? தனிநபர் விஷயத்தில் 'சந்தர்ப்பவாதம்' என்று கூறப்படுகிற காரியம், அரசியல்வாதி விஷயத்தில் ராஜதந்திரமாகிவிடுகிறதே?

! தேவேகௌடா போன்ற சுயநல அரசியல்வாதிகள் தங்கள் சந்தர்ப்பவாதத்தை ராஜதந்திரம் என்று நினைத்துக்கொள்ளலாம். ஆனால், பொதுநலன் கருதியும் தேச நலன் கருதியும் நிகழும் சமரசங்களையும் சாகசங்களையும்தான் வரலாறு ராஜதந்திரம் என்று குறிப்பிடும்.

● சி.மகேஷ், திருச்சி - 17


? ''தமிழர் நலனில் ஜெயலலிதாவுக்கு அக்கறை இல்லை. ஈழத் தமிழர்களுக்குக் கடமையாற்ற கருணாநிதி தயக்கம் காட்டுகிறார்'' என்கிற நெடுமாறனின் குற்றச்சாட்



✱ பந்தும் பெருமையும்



✱ முதலும் முடிவும்!



✱ கறுப்பும் காரணமும்!

கறுப்புப் பணமின்றி தமிழ்ப் படம் வராதாமே?

டுக்கு உமது பதில்?

! ஈழத் தமிழர் நலனில் தமிழகத்திலுள்ள யாருக்குத்தான் அக்கறை இல்லை? ஆனால், நெடுமாறன், வைகோ போன்றோர் புலிகளின் கரங்களை பலப்படுத்துவதுதான் ஈழத் தமிழர் நலன் என்று கருதுகிறார்கள். அதுதான் தவறு. புலிகள் வன்முறையையும் தனித் தமிழ் ஈழ கோரிக்கையையும் கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்தில் கலந்தால், ஈழத் தமிழர் நலனுக்கு அமைதிப் போராட்டம் நடத்தும் தார்மிக உரிமையை ஒவ்வொரு தமிழனும் இங்கே பெறுவான்.

● ரம்யா சங்கரநாராயணன், பெங்களூரு

? இருபதாயிரம் கோடி லாபம் ஈட்டும் இந்திய ரயில்வே, தினந்தோறும் கோடிக்கணக்கான லிட்டர் மனிதக் கழிவுகளை வெளியேற்றி மாசு ஏற்படுத்திக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்த வேண்டாமா?

! நிச்சயமாக! உலக அதிசயமாக இந்திய ரயில்வேயின் வெற்றியை மட்டும் ஹார்வார்டு மாணவர்கள் முதல் பல அயல்நாட்டவருக்குப் பிரகடனப்படுத்தி பெருமையடித்துக்கொண்டு, இந்த உலக மகா அவலத்தைத் தொடர அனுமதிக்கலாகாது.

● ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

? நான்கு கைகள், நான்கு கால்களுடன் பிறந்த சிறுமி லட்சுமிக்கு பெங்களூரு ஸ்பர்ஷ் மருத்துவமனை டாக்டர்கள் 36 பேர், 27 மணி நேரம் ஆபரேஷன் செய்து வெற்றி பெற்றிருப்பது பற்றி...?

! தேவையற்ற கை, கால்களை நீக்கி அந்தக் குழந்தையின் வாழ்வுக்குக் கை கொடுத்த மருத்துவர்களுக்கு நாமும் கை கொடுப்போம் - வலிக்க வலிக்கக் குலுக்குவதற்காக!

● வி.லீலா, கும்பகோணம்

? அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களை இடிப்பதைத் தடை செய்யும் தமிழக அரசின் அவசரச் சட்டம் செல்லாது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளதே?

! ஏதோ உள்நோக்கத்துடன் தமிழக அரசு தெரிந்து செய்த தப்புக்கு, நொறுங்க விழுந்துள்ள குட்டு.

● ச.நாகரத்தினம், திருப்பூர் ❒

? ஹிரோஷிமா நகர் மீது அணுகுண்டு போட்ட விமானி பாப் டிப்பேட்ஸ், 'அணுகுண்டு வீசியது பற்றி நான் கவலைப்படவில்லை. இரவில் நன்றாகத் தூங்குகிறேன்' என்கிறாரே...!

! ராணுவத்தினர், மேலிடத்துக் கட்டளைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள். 'எஸ் ஸார்!' மட்டுமே அவர்கள் பதில். அந்த வகையில் தமது கடமையைச் செய்த உணர்வில் அவர் பேசுகிறார். ஆனால், அணு ஆயுதங்கள் நமது பகைவர்களை மட்டும் அழிப்பதில்லை. பல்லாயிரக்கணக்கில் மக்களையும் பல தலைமுறைகளுக்கு அவர்களுடைய சந்ததிகளையும் பாதித்து முடக்கிப் போடுகிறது. இது எவ்வகையிலும் தர்மமில்லை. அதனால்தான் அணு ஆயுதங்களைக் கடுமையாக எதிர்க்கும் உலக சிந்தனை இன்று ஓங்கி வளர்ந்திருக்கிறது.



✱ சட்டமும் சவாலும்



✱ நினைப்பும் நிஜமும்




✱ புலிகளும் பிரச்னையும்

● எச். ஆண்டனி
தமிழரசன்,
மும்பை - 17

? நந்திகிராமம் பற்றி நாடாளுமன்றத்தில் பேச அனுமதிக்க மாட்டோம் என்று இடதுசாரிகள் அறிவித்தது சரியா?

! மாநில அரசு தொடர்பான பிரச்னைகளை நாடாளுமன்றத்தில் விவாதிக்க விதிமுறைகள் அனுமதிக்கவில்லை என்றாலும், அதன் இரண்டு இடுக்குகளில் புகுந்து, ஒரு சமரச திட்டத்தின் அடிப்படையில் விவாதம் நிகழ பவார் வழி வகுத்திருக்கிறார். கண்ணியமாக நிகழ்ந்தால் சரி.



✱ தமிழும்...



✱ ...முன்னேற்றமும்

● பாலா சரவணன்,
சென்னை

? உலக பணக்காரர்கள் வரிசையில் முதல் நான்கு இடங்களுக்குள் இருக்கிற அம்பானி சகோதரர்களைப் பெற்றுள்ள இந்தியாவை, இன்னமும் ஏழை நாடு என்று கூறுவது ஏற்புடையதா?

! உலக ஏழைகள் வரிசையில் எழுபத்தைந்து கோடிக்கு மேற்பட்ட மக்கள் இங்கே இருக்கிறார்களே!

● பா.அச்சுதன், வயலூர்

? 'கறுப்புப் பணம் இல்லாவிட்டால் தமிழ்ப் படங்களே வெளிவராது' என்று திரைப்பட இயக்குநர் தங்கர்பச்சான் கூறியுள்ளாரே...?

! கறுப்புப் பணத்தை ஒழித்துக்கட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த இன்னொரு வலுவான காரணம் கிடைத்திருக்கிறது!

● அ.சுஹைல் ரஹ்மான்,
திருச்சி - 21

? 'டெண்டுல்கர் மறுத்ததால் எனக்கு கேப்டன் பதவி கிடைத்தது' என்று கும்ப்ளே கூறுகிறாரே?

! உண்மைதான். ஆனால், அவரிடத்தில் இவர் என்பதே மிகப் பெரிய பெருமை தானே! சச்சின் பேட்டிங்கில் புரிந்த சாதனைகளுக்கு இணையான சாதனையை, பௌலிங்கில் செய்து காட்டியவர் அல்லவா கும்ப்ளே! அதைத் தாமே சொல்லாமல் அடக்கம் காக்கிறார். நாம் கூறி மகிழ்வோம்; வாழ்த்துவோம்.

● எஸ்.சரஸ்வதி சம்பத்,
வேலப்பாடி

? ஆங்கில நூல்களுக்கு இணையாக தமிழில் சிறந்த சுய முன்னேற்றப் புத்தகம் எதுவும் தற்பொழுது வரவில்லை என்கிறாள் என் தோழி... உண்மையா தராசு..?

! ஏன் இல்லை? அன்றைய டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தியின் நூல்கள் முதல் இன்றைய கல்கியில்


❐ ரூ.100/- பரிசு பெறுபவர் :
ச.நாகரத்தினம், திருப்பூர்
✱ ரூ.50/- பரிசு பெறுபவர் :
விஜயலட்சுமி சிவா, சென்னை -4

சேவாலயா முரளிதரன் எழுதும் தொடர் வரையில் ஏராளமான எழுச்சியூட்டும் எழுத்துகள் உண்டு.

● விஜயலட்சுமி சிவா,
சென்னை - 4 ★

? சமீபத்தில் நடந்த தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வின்போது, ஊனமுற்றோருக்குத் தேர்வு எழுத இரண்டாவது மாடியை ஏற்பாடு செய்த அதிகாரிகளை என்ன செய்வது?

! பதினாறு நாட்களுக்கு, எல்.ஐ.சி.யின் பதினாலு மாடிகளையும் பதினாலு தடவை படி வழியே ஏறி இறங்கச் செய்யவேண்டும்! ●


ஸ்ரீ பவழக்கொடி அம்மன்,
கீழ் சூரியமூலை.

வசி என்பதைத் திருப்பிப் போட்டால் சிவா - அதே மாதிரி, 'சிம்ஹம்' என்பதை மாற்றி, திருப்பிப் போட்டால் 'ஹிம்சம்' என்று வரும். ஆகவே மூன்றாவது திருநாமத்தின் படி சிம்ஹாஸனேசுவரியாக இருக்கக் கூடியவள் ஹிம்சானேசுவரியாகவும் இருக் கிறாள். ஹிம்சம் என்றால் என்ன...? சம் ஹாரம் செய்தல், வதைத்தல், நீக்குதல் - சம்ஸ்கிருதத்தில் இப்படிச் சில சொற் களைத் திருப்பிப் போட்டுப் பொருள் கொள்ள வேண்டும். அப்படி வந்த திருநாமம் இது.

ஸ்ரீ மாதாவாக இருக்கக்கூடியவள், ஸ்ரீ மஹாராக்ஞியாக இருக்கக்கூடியவள், நாம் ஏற்கெனவே பார்த்தோம். அந்த மஹேசுவர சிவரூபமாக இருக்கக் கூடியவள் ஈசுவரி.

சதாசிவன் அருளல் தொழிலுக்கு அதிபதி. அந்த சதாசிவ ஸ்வரூபமாகவும் அம்பாளே இருப்பதால் **சதாசிவ அனுக்ரஹதா** என்கிற திருநாமம் அடுத்து அமைந்தது. ஐந்து தொழில்களுக்கும் அதிபர் யார் என்று சொல்கிறோமோ - அந்த சிவ வடிவமாக இருக்கக் கூடியவள் அம்பாள்தான். இந்த ஐந்தையும் நடத்தி வைக்கக் கூடியவள் **பஞ்ச க்ருத்ய பராயணா**- இவற்றைத் தனித்தனியாகவும் சேர்த்தும் இயக்கக்கூடியவள்.

ஆயிரம் கண்ணுடையாள்!

அவளேதான் ஹிம்ஸானேசுவரியாக சம்ஹாரரூபிணியாகவும் இருக்கிறாள். இதைத்தான் பின்னர் வரும் திருநாமங் களான **சிருஷ்டிகர்த்ரி, கோப்த்ரி, சம்ஹாரிணி, ருத்ரரூபா** என்கிற திருநாமங் கள் உணர்த்துகின்றன.

பஞ்சக்ருத்யங்கள் நிகழ்த்துபவள்

சரி, இந்த மூன்று தொழில்களைச் செய்யக் கூடியவள் வேறு எப்படி இருக் கிறாள்?

திரோதானத்துக்கு அதிபதியா கவும் அவள்தான் இருக்கிறாள். ஈசுவரியாக இருக்கக்கூடியவள் - **திரோதானகரி, ஈசுவரி** - இவை இரண்டு திருநாமங்கள்.

திரோதானத்துக்கு (மறைத்தல்) அதிபதியானவர் மஹேசுவரன் என்பதை

பஞ்சகிருத்யங்களை நடத்தக்கூடிய அம்பாள்தான் **சஹஸ்ராக்ஷி**யாகவும் இருக் கிறாள். சஹஸ்ர அக்ஷி - ஆயிரம் கண்களை உடையவள் என்று சொல்லலாம். நேராக மொழி பெயர்த்தால் 'ஆயிரம் கண்ணுடை யாள்'. அந்தப் பெயருடன் ஓர் அம்பாள் நாட்டரசன்கோட்டையில் இருக்கிறாள்.

ஆனால் ஆயிரம் கண்ணுடையாள், சஹஸ்ராக்ஷி என்றால் வெறும் ஆயிரம் கண்ணுடையாள் என்று பொருள் இல்லை; சஹஸ்ரம் என்பது சரியாக ஆயிரம் என்று குறிக்காது. எத்தனையோ கோடி கண்களை உடையவள். அவை எல்லாவற்றினாலும் பார்க்கக் கூடியவள். அம்பாளுடைய கண்ணுக்கு நிறைய விசேஷம் உண்டு. அந்தக் கண்களை வைத்துத் தான் அவளுக்குப் பல திருநாமங்கள்

- காமாக்ஷி, மீனாக்ஷி, விசாலாக்ஷி - விசாலமான திருநேத்திரங்களை உடையவள். - இந்த மூன்றுமே அவளுடைய திருக்கண்களை வைத்து வரக்கூடிய பெயர்கள். அம்பாளுடைய கண்களுக்கு அப்படி என்ன விசேஷம்?

மீனாக்ஷி என்றால் என்ன



அர்த்தம்? விசாலாக்ஷி என்றால் விசாலமான கண்களைக் கொண்டவள். விசாலமான பார்வையை உடையவள். சரி.

காமாக்ஷி என்றால் என்ன அர்த்தம்? ப்ரியத்தைத் தரக்கூடிய கண்கள். நம்முடைய விருப்பத்தை நிறைவேற்றக் கூடிய கடாக்ஷத்தைக் கொண்டவள் - காமாக்ஷி. காமேச்வரருக்கு விருப்பத்தைத் தரக்கூடிய கண்களைப் படைத்தவள். இதை எப்படி வேண்டுமானாலும் பிரித்துப் பொருள் கொள்ளலாம்.

மீன் விழியாள்

மீனாக்ஷி என்பதற்கு என்ன பொருள் மதுரையில் இருக்கக்கூடியவள் மீனாக்ஷி. மீன் போன்ற கண்களைக் கொண்டவள். 'அப்படியானால் அதற்கு என்ன அர்த்தம்?' என்கிற கேள்வி வருகிறது.

படம் போடுகிறபோது, கண்ணை வரைய வேண்டுமானால் மீன் மாதிரி வரைவது உண்டு. அதனால்தான் கெண்டைக் கண்கள் என்று உதாரணம் சொல்வது வழக்கம். மீனில் விதவிதமான மீன்கள் உண்டு. சில மீன்கள் பார்க்க அழகாகவே இருக்க மாட்டா. அந்த மாதிரி கண் இருந்தால், சரியாகவே இருக்காது. சில மீன்கள் மிக நீளமாக இருக்கும். காதோரம் நீண்ட விழிகள் என்று சாமுத்திரிகா இலட்சணம் சொல்வார்களே, அந்த மாதிரி! அம்பாளுடைய விழிகள் செவிவரை நீண்டிருக்கும். அதே சமயத்தில் விசாலமாகவும் இருக்கக் கூடிய விழிகள். ஆனாலும், 'மீன் மாதிரி கண்கள்' என்கிறபோது, மீனின் உருவத்தை ஒத்த கண்கள் என்பதுதான் அதற்கு அர்த்தமா? யோசிக்க வேண்டும்.

வடிவமும் குணமும்

மான் போன்ற விழிகள் என்றும் சொல்வது உண்டு இல்லையா? அப்படியானால், அந்த மான் வடிவத்துக்கும் கண்ணுக்கும் ஒப்புமை இராது. மானின் வடிவமும் கண்ணின் வடிவமும் வெவ்வேறு.

அப்படியானால், மான் விழியாள் என்பதற்கு என்ன அர்த்தம்?...

மானினுடைய கண்களைப் பார்க்கிறபோது ஒரு மருட்சி தெரியும். எந்த நேரத்தில் பார்த்தாலும் சரி, எந்த இடத்தில் பார்த்தாலும் சரி, அந்த மருட்சி காணப்படும். ஒன்றும் இல்லை, சென்னை ராஜ்பவனிலிருந்து தப்பி வேளச்சேரிக்குள்ளே ஒரு மான் ஓடி வந்திருந்தால்கூட பார்க்கலாம் - அதன் கண்களில் மருட்சி இருக்கும். 'மான் விழி' என்கிறபோது, அந்த மாதிரி, பெண்களின் கண்களில் மருட்சி இருக்கும் என்று அர்த்தம்.

'வாள் விழி' என்று சொல்வதுண்டு. வாளுடைய வடிவத்தில் கண் இருந்தா

னால் சரியாக இராது! பார்க்க அழகாக இராது. ஆனால் கம்பர் பாடுவார்,

'வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்'

என்று!

இதுதான் பின்னால் ஒரு சினிமா பாட்டிலே வந்து நின்றது - ''உன் விழியும் என் வாளும் சந்தித்தால்...'' என்று.

இதற்கு என்ன அர்த்தம்? வாள் போன்ற விழி என்றால், பார்வை அவ்வளவு கூர்மை என்று அர்த்தம். ஆக, இது குணத்தை வைத்துக்கொண்டு சொல்கிற உவமான - உவமேயமே தவிர, வடிவத்தை வைத்துக் கொண்டு சொல்கிற உவமான உவமேயம் இல்லை.

ஆகவே, மீன் போன்ற விழிகள் என்று சொல்கிறபோது, அது வடிவத்தைக் காட்டிலும் குணத்தைக் குறித்தே அமைந்த உவமை.

இதற்கு முன்னால் ஒரு திருநாமம் அம்பாளுக்கு வந்ததே - **சலன்மீனாபலோசனா** என்று... மீன் மாதிரி இருக்கக் கூடிய அவள் கண்கள், அந்த மீன்களைப் போலவே அசைந்துகொண்டே இருக்கின்றனவாம். மீன் ஓரிடத்தில் நிலையாக இருக்காது. மீன் தொட்டியில் இருந்த மீனாக இருந்தாலும் சரி, எங்கு இருக்கக்கூடிய மீனாக இருந்தாலும் சரி, அசைந்து கொண்டேதான் இருக்கும். அம்பாளுடைய கண்களுக்கு, சலன்மீனாபலோசனா என்கிற திருநாமத்துக்கேற்ப அசைந்துகொண்டே இருக்கின்றன - அதனால்தான் அவளுக்கு மீனாக்ஷி என்று பெயர். அப்படி ஏன் அசைந்துகொண்டே இருக்கின்றன என்றால், சிருஷ்டியில் உள்ள அனைத்தையும் தனது பார்வையில் உள்ளடக்குவதற்காக - தன்னுடைய பக்தர்கள் எங்கே இருக்கிறார்கள்? குழந்தைகள் எங்கே இருக்கிறார்கள் என்கிற ஒரு தாயினுடைய பார்வை அது.

அம்மாவின் கண்கள்

ஓர் அம்மாவுடைய கண்களை நினைத்துப் பாருங்கள். சராசரி லௌகிக வாழ்க்கையில் இருக்கக்கூடிய ஒரு தாய். குழந்தையை அழைத்து வந்திருந்தாளானால், அம்மா எங்கே உட்கார்ந்திருந்தாலும் சரி, அது எவ்வளவு பெரிய கல்யாண வீடாக இருந்தாலும் சரி, எந்த இடமாக இருந்தாலும் சரி, அந்தத் தாயாருடைய கண் பார்த்துக்கொண்டே இருக்கும். சாதாரண ஒரு தாய்க்கே தன் குழந்தை எங்கே என்று பார்க்கக்கூடிய தன்மை இருக்குமானால், அம்பாள் இத்தனை குழந்தைகளுக்கும் தாயாக, லோக ஜனனியாக இருக்கிறாள். தன் குழந்தைகள் 'எங்கே எங்கே' என்று பார்த்துக்கொண்டேயிருக்கக்கூடியவள் **சலன்மீனாபலோசனா** என்றால், ஆயிரம் கோடி கண்களின் பார்வை சக்தியைக் கொண்டு, தன் குழந்தைகளாகிற ஜீவன்கள் நன்றாக இருக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டே இருப்பவள் **ஸஹஸ்ராக்ஷி.**

எப்போதும் இந்த ஜீவன்களைக் குறித்து கவலைப்பட்டுக்கொண்டே இருக்கக்கூடியவள் என்பதற்காகத்தான், அம்பாளின் அந்த குணத்தைக் குறிக்கும் இன்னொரு திருநாமம் அமைந்திருக்கிறது: 285ஆவது திருநாமம்...

> **இது குணத்தை வைத்துக்கொண்டு சொல்கிற உவமான- உவமேயமே தவிர, வழிவத்தை வைத்துக்கொண்டு சொல்கிற உவமான உவமேயம் இல்லை.**

(வளரும்)

அடமானம்

இ.வில்சன்

தேவகியும், அவள் கணவன் பாஸ்கரும் அந்தப் பிரபலமான உணவு விடுதிக்குச் சென்றனர். வேண்டியதை வரவழைத்து ருசித்துச் சாப்பிட்டனர். கை கழுவி காஃபி குடித்த பிறகு பில் வந்தது. கையைத் துடைத்துக்கொண்டே பேண்ட் பாக்கெட்டில் பர்ஸைத் தேடிய பாஸ்கர் அதிர்ந்தான். பர்ஸ் இல்லை. வீட்டில் மறந்து வைத்துவிட்டு வந்தாகிவிட்டது. சட்டைப் பையில் துழாவினான். அங்கும் பணமில்லை. தேவகிக்குப் பணம் வைத்துக்கொள்ளும் பழக்கமுமில்லை. என்ன செய்வது என்று யோசித்தான். இதுவரை இப்படி நேர்ந்ததே இல்லை. எழுந்தான், முதலாளியிடம் சென்றான்.

''சார், பேண்ட்டை மாத்திப் போட்டுட்டு வந்துட்டேன்... பணம் வீட்ல இருக்கு!'' என்றான்.

''அய்யய்ய?'' என்று முகம் சுளித்தார். முதலாளி.

''தேவகி இங்க வா, இங்கேயே நில்லு. நான் பத்தே நிமிஷத்துல வீட்டுக்குப் போய் பணத்தை எடுத்துட்டு வந்திடுறேன்!'' என்று சொல்லி, பேருந்துக்கும் பத்து ரூபாய் கடை முதலாளியிடம் வாங்கிக்கொண்டு போனான். தேவகி விக்கித்துப் போய் நின்றாள். கடைக்காரர் உட்காரச் சொன்னது கூட அவள் காதில் விழவில்லை. எங்கோ பல யுகங்களுக்குப் பின்னால் போய் வேறொரு உலகில் நின்றது அவள் எண்ணம். திரௌபதி, சந்திரமதி வரிசையில் தானும் சேர்ந்துவிட்டதாய் நினைத்தாள். வெலவெலத்து மயக்கம் வருவதுபோல் இருந்தது. பிரம்மை பிடித்தவள்போல் நின்றுகொண்டிருந்தாள். அரை மணி நேரத்தில் அவள் கணவன் பணத்துடன் வந்தான். பில் தொகையையும், கைமாற்றையும் கொடுத்துவிட்டு தேவகியை அழைத்துச் சென்றான். சிறை மீட்சி பெற்றதுபோல் இருந்தது தேவகிக்கு. ''என்ன தேவகி ஒண்ணுமே சொல்லாம வர்ற? ஏன் என்ன ஆச்சு?''

''தர்மன், அரிச்சந்திரன் போல என் புருஷனும்..!'' என்றாள் தேவகி.

''என்ன சொல்ற?''

''அன்னிலேர்ந்து இன்னைக்கு வரைக்கும் நம்பி வந்த பெண்ணை அடமானம் வைக்கிறதும், அடிமைப்படுத்துறதும் ஆம்பளைங்க ரத்தத்துல ஊறின குணம் போலிருக்கு. அந்த வகையில் இப்ப என் முறை போலிருக்கு!'' என்று விம்மினாள்.

''என்ன இப்படிச் சொல்ற, அரைமணி நேரம் பாதுகாப்பான இடத்தில் நின்னதுக்கா இப்படிப் பெரிய பெரிய வார்த்தை பேசுற?''

''ஏன், நீங்க வெயிட் பண்ணிட்டு என்னை அனுப்பி இருக்கலாமே? நான் போய் பணத்தை எடுத்து வந்திருக்க மாட்டேனா?''

பதில் சொல்ல முடியாமல் அதிர்ந்துபோய் நின்றான் பாஸ்கர்! ●



முழு திருப்தி!

கல்கி தீபாவளி மலர் இவ்வாண்டும் மகிழ்வூட்டியது. 'வேதா' ஓவியத்தில் மகாவிஷ்ணு - இலட்சுமிதேவி இருவரும் வீற்றிருக்கும் அட்டைப் படம் நீண்ட நேரம் ரசிக்க வைத்தது. ஒரு ராஜபுஷ்பத்துக்கு சுகி.சிவம் தந்திருந்த விளக்கம், அட்டைப் படத்துக்கு இன்னமும் சிறப்பூட்டியுள்ளது.

- டி.ஜி.நாராயணராவ், சென்னை

கல்கி தீபாவளி மலர் வாங்கியவர்களின் மனம் முழு திருப்தி அடையும் வகையில் தயாரித்து வெளியிட்டதற்கு, அமரர் கல்கி ரசிகர்களின் சார்பில் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஏ.என்.எஸ்.மணியன், சென்னை

தாராளம் மலருக் குள்ளே
தழைத்திடச் செய்து விட்டீர்;
ஏரான உழைப்புக் குள்ளே
இம்மலர் கொண்டு வந்தீர்;
பாராட்டிப் போற்று கின்றேன்
பாட்டாலே கவிஞன் யானே;
பாராட்டும் மலர்கள் இன்னும்
படைத்திங்கு வாழி நீவிர்!

- பண்ருட்டி பரமசிவன்





கண்ணாமூச்சி ஏனடா!



ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்களில் ஆண் சமையல் கலைஞர்களின் வித விதமான உணவுகளைச் சாப்பிட்டாலும் சிறிய அறைகளில் நடத்தப்படும் 'மெஸ்' சுவை தனித்துத் தெரியுமல்லவா? அப்படி ஒரு பெண் இயக்குநரின் படம் என்பது தனித்த அழகியலுடன் தெரிகிறது.

தனியாக காமெடி நடிகர் இல்லை; ஆனால், படம் முழுவதும் புன்னகைக்க வைக்கும் காட்சிகள் நிறைய! ஹீரோயிஸம் இல்லை; அதற்காகப் பெண் கதாபாத்திரங்களைத் தியாகிகளாக்கவில்லை! திடீர் திருப்பங்கள், துரத்தல்கள் இல்லை; ஆனால், எந்த இடத்திலும் தொய்வில்லாமல் தொடங்கியது முதல் முடியும்வரை சீராகச் செல்கிறது. இடையிடையே வருகிற பாடல்கள்தான் கொட்டாவியை வரவழைக்கின்றன.

மலேசியாவில் படிக்க வரும் சந்தியா, அங்கே பிருத்விராஜைக் காதலிக்கிறார். அப்பா சத்யராஜுக்கு இது பிடிக்கவில்லை. ஆயினும், மகளுக்காக பிருத்விராஜை வரவழைத்து 'நோஸ்கட்' கொடுத்து வெளியே துரத்துகிறார். இதற்கிடையே மனைவி ராதிகாவிடம் கருத்து வேறுபாடு. ராதிகா கோபித்துக் கொண்டு வெளியே செல்ல, பிருத்விராஜ் வருங்கால மாமனாரையும் மாமியாரையும் சேர்த்து வைக்கிறார்.

சத்யராஜ், தனது ஈகோவை விட்டு விட்டு ராதிகாவிடம் பேசுகிற காட்சியும் வசனமும் வெகு இயல்பு. படத்தின் குறை பாடலும், இசையும்தான். தாமரையும் சரி, யுவன்ஷங்கர் ராஜாவும் சரி எந்த இடத்திலும் தென்படவில்லை. ஒளிப்பதிவும் சுமார். மலேசியா காட்சிகள் நம் ஊர் ஸ்பென்சரில் எடுத்தது போலுள்ளது. திரைக்கதை, இத்தனையையும் சமாளித்து வெற்றி பெற்றுள்ளது. இயக்குநருக்கு சபாஷ்!

- ஆரணி யுவராஜ்



இதயம் காக்க உதயம்!

ஏழு மாதக் குழந்தை அருணாசலத்தை மருத்துவரிடம் அழைத்துக்கொண்டு போனபோது, 'குழந்தைக்கு இதயத்தில் ஓட்டை இருக்கிறது' என்ற குண்டைத் தூக்கிப் போட்டார் டாக்டர். வசதி இல்லாத குடும்பம் என்பதால், அப்போதைக்கு அப்படியே விட்டுவிட்டார்கள். சில மாதங்களுக்கு முன்பு அந்தச் சிறுவனுக்கு நெஞ்சு வலி. பரிசோதித்துப் பார்த்த டாக்டர், உடனடியாக இதய ஆபரேஷன் செய்யும்படிக் கூறினார். பையனை அழைத்துக்கொண்டு அரசு குழந்தைகள் மருத்துவ மனைக்குச் சென்றார்கள். ஆபரேஷனுக்கு இரண்டு ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டும் என்று தெரிய வர, மனமொடிந்து போன அந்தக் குடும்பத்துக்கு, தக்க சமயத்தில் கை கொடுத்தது அப்போலோ மருத்துவமனை. அவர்களது 'குழந்தை இதயத்தைக் காப்போம்' என்ற திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சம் வரை செலவு பிடிக்கும் இதய ஆபரேஷனை, மிகக் குறைந்த செலவில் செய்து கொண்டு, இப்போது அருணாசலம் நலமாக இருக்கிறான்.

கடந்த 2003 ஆண்டில் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இதயம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கும் நோக்கத்துடன் துவக்கப்பட்ட திட்டம்தான் 'சச்' என்ற Save a Child's Heart. இத்திட்டத்தின் கீழ் இதுவரை இந்தியா முழுவதுமாக சுமார் முப்பதாயிரம் ஏழைக் குழந்தைகள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் இதயம் பாதிப்புக்குள்ளான தொள்ளாயிரம் குழந்தைகளுக்கு அப்போலோ மருத்துவமனையில் இதய அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அண்மையில் குழந்தைகள் தினமன்று இத்திட்டத்தில் மறுவாழ்வு பெற்ற ஏராளமான குழந்தைகள் கலந்துகொள்ள, விழா நடத்தப்பட்டது.

''வறுமை காரணமாக இதய சிகிச்சை பெற வாய்ப்பில்லாத குழந்தைகளுக்குச் சிகிச்சை அளித்துக் காப்பதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம். அப்போலோ மருத்துவமனைகள் அனைத்திலும் பணியாற்றும் மருத்துவ நிபுணர்கள் முதல் சாதாரண ஊழியர்கள் வரை அனைவரது குழந்தைகளும் இந்த விழாவில் பங்கேற்றனர். பல்வேறு போட்டிகள் நடத்திப் பரிசுகளும் வழங்கப்பட்டன'' என்கிறார் அப்போலோ மருத்துவமனையின் ப்ரீதா ரெட்டி. தமிழக அமைச்சர் பூங்கோதை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, போட்டியில் வென்ற குழந்தைகளுக்குப் பரிசளித்தார்.



* குழந்தைகளுடன் அமைச்சர்

- மானஸா



விழாக் காலங்களில் தி.நகர் பகுதியில் ஏற்படும் நெரிசலைச் சமாளிக்கப் பல சாலைகளை ஒருவழிப் பாதைகளாக மாற்றி இருக்கிறோம். மேம்பாலங்களும் கட்டப்பட்டு வருகின்றன. இதனால், ஒட்டுமொத்த மாநகரப் போக்குவரத்தும் பலன் பெறும்.

காதலர்களால் காவல் துறைக்குச் சறுக்கல்!

சென்னை மாநகர போலீஸ் கமிஷ்னராகப் பதவியேற்றது முதல், தமது அதிரடி நடவடிக்கைகள் மூலம், மக்கள் மனத்தில் இடம் பிடித்தவர் நாஞ்சில் குமரன். அவர் நமக்களித்த பேட்டியிலிருந்து...

சட்டம் ஒழுங்கு, போக்குவரத்து, குற்றப் புலனாய்வு வரிசையில் காவல் துறைக்கு எது கடினமான சவால்?

''சென்னை மாநகரில் சட்டம் ஒழுங்கு ஒரு பெரிய பிரச்னையே இல்லை. இதற்குக் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள், குற்றவாளிகளைப் பிடிக்கத் துரித நடவடிக்கை எடுப்பது இரண்டையுமே காரணமாகச் சொல்லலாம். ஆனால், போக்குவரத்துதான் எங்களுக்குப் பெரிய சவால். சென்னையில் நாளொன்றுக்கு எண்ணூறு புதிய வாகனங்கள் பதிவாகின்றன. இவற்றில் இரு சக்கர வாகனங்கள் அதிகம். இருந்தும் சமாளித்தே வருகிறோம்.''

என்னென்ன விதங்களில் என்று சொல்ல முடியுமா?

''சென்னை முழுக்கக் கள ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, திருவிழாக் காலங்களில் ... இந்த நடவடிக்கைகள் காரணமாக மக்கள் சிக்னல்களில் நீண்ட நேரம் காத்திருந்து, மனித நேரமும் பெட்ரோலும் வீணாவதும் மட்டுப்படும்.''

பார்க்கிங்கும் இன்றைக்குப் பெரிய பிரச்னையாயிருக்கிறதே...?

''இப்போது புதிதாகக் கட்டப்படும் வணிக வளாகங்கள், ஓட்டல்கள், தியேட்டர்கள் மற்றும் இதரக் கட்டடங்களில் 'இவ்வளவு வாகன நிறுத்தும் இட வசதி இருக்க வேண்டும்' என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதைச் சரிபார்த்த பிறகே காவல் துறையால் 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' வழங்கப்படுகிறது.''

சில குற்றங்கள் உடனுக்குடன் கண்டுபிடிக்கப்படும் அதே நேரம், சில நீண்ட காலம் இழுத்து விடுவது ஏன்?

''உண்மைதான். அண்மைக் காலத்தில் ஏ.டி.எம்.மில் நடந்த கொலை, ஒரு குழந்தையைக் கடத்திய சம்பவம் ஆகியவற்றில் போலீஸ் துரிதமாகச் செயல்பட்டுக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்தார்கள். ஆனால், அதேசமயம் இன்னும் சில வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டு

கமிஷ்னர் நாஞ்சில் குமரன் பேட்டி

பிடிக்க முடியவில்லை! தமிழகக் காவல் துறை எப்போதுமே சிறப்பாகத்தான் செயல்படுகிறது; செயல்படும். விரைவில் அனைத்துக் குற்றங்களுக்கும் தீர்வு காண்போம்.''

வெள்ளி, சனி இரவு ரோந்துகள் நடத்தப்படுவது காவல் துறை சுறுசுறுப்பாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளத்தானா?

''போலீஸார் குற்றங்களைத் தடுக்கவே இரவு நேரங்களில் சந்தேகத்துக்குரிய இடங்களில் அதிரடி சோதனை நடத்துகிறார்கள். சந்தேகத்துக்குரியவர்களைக் காவல் நிலையத்துக்கு அழைத்து வந்து தீவிரமாக விசாரிக்கிறார்கள். இவர்களில் பல முன்னாள் கிரிமினல்களும், ரௌடிகளும்கூடச் சிக்குகிறார்கள். இதன் பலனாகப் பல வழக்குகளில் துப்புகள் கிடைத்திருக்கின்றன; குற்றவாளிகளும் சிக்கி இருக்கிறார்கள். கிழக்குக் கடற்கரைச் சாலை, ஐ.டி. காரிடார் போன்ற பகுதிகளில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் போது, இரவு இரண்டு மணிக்கு ஓர் ஆணும் பெண்ணும் காரில் செல்லும் போது போலீஸ் நிறுத்தினால், அதைச் சிலர் தங்களுக்கு போலீஸ் வீண் தொல்லை தருவதாகக் கோபப்படுகிறார்கள். அது தவறு. போலீசார் தங்கள் கடமையைச் செய்கிறார்கள். குற்றங்கள் நடக்கும்போது போலீஸ் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது.''

பெருகி வரும் சைபர் குற்றங்கள் குறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

''இன்றைக்கு சாஃப்ட்வேர் துறையில் நடைபெறும் பல விதமான குற்றங்கள் தவிர, செல்போன் மூலமாகப் பெண்களுக்குத் தொல்லை தரும் விதமாகப் பேசுவது, ஆபாச படங்கள் எடுத்து அனுப்புவது போன்றவை அதிகரித்து வருகின்றன. சாஃப்ட்வேர் துறை, தொழில் வர்த்தக அமைப்புகளுடன் காவல்துறை இணைந்து செயல்பட்டு, இத்தகைய குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைப் பிடிக்கவும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. சென்னை நகரில் ஐ.பி.எஸ். அதிகாரி டாக்டர் சுதாகர் தலைமையில் இயங்கி வரும் 'சைபர் க்ரைம் செல்' மிகவும் திறமையாகச் செயல்பட்டு வருகிறது.''

சென்னை மாநகர போலீஸ் கமிஷ்னர் பொறுப்பில் ஒவ்வொரு முறை மாற்றம் நிகழும்போதும் பரபரப்பு ஏற்படுவதற்கு என்ன காரணம்?



"காவல்துறை என்பது பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் துறையாக இருந்து வருகிறது. குறிப்பாக, மீடியா காவல் துறை மீது அதிக ஆர்வம் செலுத்தி வருகிறது. எனவே, காவல்துறை பொறுப்புகளில் ஏற்படும் மாற்றங்களைப் பரபரப்பான செய்திகளாக்குகிறார்கள். சமீபகாலமாக, சிறு விஷயங்களைக்கூட கூர்ந்து கவனித்து மீடியா மிக முக்கியப் பணியாற்றி வருவது கவனிக்கத்தக்கது."



ஹெல்மெட் விஷயத்தில் சில நாட்கள் அதுபற்றிக் கண்டுகொள்வதே இல்லை. பிறகு திடீரென்று ஒரு நாள் ஹெல்மெட் அணியாதவர்களைப் பிடித்து அபராதம் விதிக்கிறீர்கள். ஹெல்மெட் சட்டத்தை நிறைவேற்றுவதில் ஏன் இந்தத் தடுமாற்றம்?

"தற்போது அறுபது சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் ஹெல்மெட் அணிந்துதான் இரு சக்கர வாகனங்களை ஓட்டுகிறார்கள். சிலர் தலைவலி, ஹெல்மெட்டுகளைப் பாதுகாக்க வசதி இல்லை என்றெல்லாம் அணியாததற்குக் காரணம் சொல்கிறார்கள். சிலர் மருத்துவச் சான்றிதழுடன் தங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கோருகிறார்கள். தனி நபர்களுக்குச் சட்டத்திலிருந்து எப்படி விதிவிலக்கு அளிக்க முடியும்? நாளுக்கு நாள் நிலைமையில் முன்னேற்றம் இருக்கிறது. ஹெல்மெட் அணிவது தங்களின் பாதுகாப்புக்குத்தான் என்று மக்கள் உணர்ந்தாலே, ஹெல்மெட் அணிய ஆரம்பித்து விடுவார்கள். ஹெல்மெட் அணியாவிட்டால் ஐம்பது ரூபாய் அபராதம் என்பதால், பல இளைஞர்கள், மாட்டிக் கொண்டால் அபராதம் கட்டி விட்டுப் போய்விடுகிறார்கள். நாளடைவில் அனைவரும் ஹெல்மெட்டின் அவசியம் உணர்ந்து அணிவார்கள் என்பது நிச்சயம்."

ஹெல்மெட் அணிவது தங்களின் பாதுகாப்புக்குத்தான் என்று மக்கள் உணர்ந்தாலே, ஹெல்மெட் அணிய ஆரம்பித்துவிடுவார்கள்!

காதலர்கள் பீச்சுக்கு வருவது குற்றமா? அவர்களை போலீஸ் குற்றவாளிகள்போல விசாரித்துத் துன்புறுத்துவது எப்படிச் சரியாகும்?

"சென்னையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த புகார்களின் அடிப்படையில் ஈவ் டீசிங்கில் ஈடுபடுபவர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கும்படி பெண் போலீசாருக்கு உத்தரவிட்டேன். பல குழுக்கள், ஈவ் டீசிங்கில் ஈடுபட்டவர்களைப் பிடித்தார்கள். பீச் பக்கம் சென்ற போலீஸ் குழு, ஆர்வக் கோளாறு காரணமாகப் பலரையும் கேள்வி கேட்டு விசாரித்தார்கள். பீச்சுக்கு வரும் காதலர்களைத் துன்புறுத்துவது எங்கள் நோக்கம் இல்லை. நல்ல நோக்கத்துடன் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையில் போலீஸுக்கு ஏற்பட்ட ஒரு சிறிய சறுக்கல் அது."

எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பில் குறைபாடு என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளதே?

"பொதுவாக ஒய், இசட், இசட் ப்ளஸ் என்று பலதரப்பட்ட பிரிவுகளிலும் உள்ள முக்கிய பிரமுகர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பில் எந்தவிதக் குறைபாடும் இல்லாமல் கவனம் செலுத்தப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்பு விஷயம் தற்போது உயர்நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், அதுபற்றி பதிலளிக்க இயலாது."

- எஸ்.சந்திரமௌலி

படங்கள் : ஸ்ரீஹரி

கமல் சொன்ன வேல் கதை!

குமுதம் பத்திரிகையில் துணை ஆசிரியராக நாற்பத்திரண்டு ஆண்டு காலம் பணி புரிந்த எழுத்தாளர் ரா.கி.ரங்கராஜனின் எண்பதாவது பிறந்த நாளையொட்டி, ஆறு சிறுகதைத் தொகுப்புகள் சமீபத்தில் மயிலாப்பூர் பாரதிய வித்யா பவனில் வெளியிடப்பட்டன. நூற்றாண்டு விழா கண்டுள்ள அல்லயன்ஸ் பதிப்பகம் ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவில் ஏராளமான அறிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை உலகத்தினர் கலந்து கொண்டனர்.

சில தெறிப்புகள்:

நடிகர் கமலஹாசன்:

'மஹாநதி' படத்தில் ரா.கி.ர.வோடு எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள்தான் பல படங்களை உருவாக்க எனக்கு உதவின. அவர் பணிபுரிந்த குமுதத்தில் என்னைப் பற்றிப் பல கிசுகிசுக்கள் வெளிவந்திருக்கின்றன. ஆனால், இவ்விழாவில் கலந்து கொண்ட பிறகே - பேசியவர்களின் பேச்சுக்களிலிருந்து குமுதத்தைப் பற்றிய பல கிசுகிசுக்கள் எனக்குத் தெரிய வருகின்றன, சந்தோஷம்! ரா.கி.ர. தம் சட்டைப் பையில் எப்போதும் ஒரு வேல் வைத்திருப்பார். அதைத்தான் நான் 'தெனாலி' படத்தில் பயன்படுத்தினேன்.

ஜ.ரா.சுந்தரேசன்:

'விகடன் ஆபீஸில் துணையாசிரியர்களுக்கு கார் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த வசதி எங்களுக்கும் வேண்டும்' என்று ரா.கி.ர. ஒருமுறை குமுதம் எடிட்டர் எஸ்.ஏ.பி.யிடம் கேட்டார். அன்றிலிருந்து எடிட்டர் ஆபீஸ் வருவதை நிறுத்திவிட்டு, கன்னிமரா நூலகத்தில் உட்கார்ந்து கொண்டு குமுதத்துக்குத் தேவையானதை எழுதிக் கொடுத்தார். இதை ரா.கி.ர.விடம் நான் தெரிவித்தபோது, பதறிப் போனவர், 'அந்த விஷயத்தை நான் வலியுறுத்தப் போவதில்லை. எடிட்டரை அலுவலகம் வரச் சொல்லுங்கள்' என்று என்னையே தூது அனுப்பினார். இப்படிப் பல முறை இருவருக்குமான தூதுவனாக நான் செயல்பட்டிருக்கிறேன்.

திலகவதி ஐ.பி.எஸ்.

ரா.கி.ர. எழுத எழுத, அவரது எழுத்துக்கள் மெருகேறிக்கொண்டே வருகின்றன. வெகுஜன இதழுக்கு எழுதுவதாலேயே அது இலக்கியம் இல்லை; ஆழமில்லை என்பதாக ஒரு கருத்து நிலவுவது சரியல்ல. ஏராளமாக எழுதித் தள்ளினாலும் வீரியம் குறையாத வித்து அவரது எழுத்துக்களில் உண்டு.

கிரேஸி மோகன் – எஸ்.வி.சேகர்:

ரா.கி.ர. மட்டும் இல்லையென்றால் எங்களது முதல் முயற்சியான 'கிரேஸி தீவ்ஸ் இன் பாலவாக்கம்' குமுதத்தில் தொடராக வந்திருக்காது. நாடகத் துறையில் நாங்கள் முத்திரை பதிக்க ரா.கி.ர.வே காரணம்.

சீதா ரவி:

நூறாண்டுகளுக்கு ஒரு பதிப்பகம் நல்ல நூல்களை மட்டுமே வெளியிடுவது தவம்; அதையே வெற்றிகரமாகச் செய்வது வரம். தவமும் செய்து வரமும் பெற்ற அல்லயன்ஸ் நிறுவனத்துக்கு வாழ்த்துகள்.

- மெலட்டூரான்



✱ ரா.கி.ர.

ஆசிரியர் பக்கம்

இந்தியாவின் மனசாட்சி இவான்ஸ்!

பத்திரிகைத் துறையில் அந்நிய முதலீடு அனுமதிக்கப்பட்டிருப்பது குறித்து மீடியா உலகம் மிகவும் உற்சாகம் கொண்டுள்ள இன்றைய காலகட்டத்தில், பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஹாரல்ட் இவான்ஸ் விடுக்கும் எச்சரிக்கை நம்மை நிதானப் படுத்த வேண்டும்.

''இந்தியா போன்ற பல்முனை கலாசார சமூகத்தில், மீடியாவை அந்நிய முதலாளிகள் கட்டுப்படுத்துவது பெரிய ஆபத்தில் முடியும். மேலை நாட்டு மீடியா அதிபர்கள் கலாசாரத்தை வெறும் சந்தையாகத்தான் காண்கிறார்கள்; பண்பாடு, பழக்க வழக்கம் போன்றவற்றின் நுணுக்கங்களும், நுட்பமான முக்கியத்துவமும் அவர்களுடைய கண்களில் படாது. அவர்களுக்கு மீடியா என்பது ஒரு



தொழில் குழுமம்; அச்சு இதழ்களை அதிலே ஒரு சிறிய அங்கமாகத்தான் அவர்கள் கருதுவார்கள். இந்தியப் பத்திரிகைகள், குடும்பத் தொழில் பாரம்பரியத்தில் தொடர்வதுதான் நல்லது. இந்த அமைப்பில் மட்டுமே அவற்றைப் பொதுச் சொத்தாகக் கருதி விழுமியங்களைக் கட்டிக்காக்க முடியும். தொழில் முறை முதலீடு என்று அந்நிய நிறுவனங்கள் பணம் போட்டுவிட்டால், அதன் பிறகு லாப நோக்கு மட்டுமே குறிக்கோளாகி விடும். சமுதாயப் பொறுப்பு, புலனாய்வு, உண்மையை வெளிப்படுத்துதல் போன்றவற்றுக்கு எவ்வித இடமும் இருக்காது.''

தலைநகர் டெல்லியில் மாமன் மாப்பிள்ளை நினைவுச் சொற்பொழிவு ஆற்றியவர் ஹாரல்ட் இவான்ஸ், மேலை நாட்டு மீடியா அதிபர்களை நன்கு அறிந்த பத்திரிகையாளராகப் பேசியிருக்கிறார்; இந்திய மீடியா மீது அக்கறை கொண்டும் பேசியிருக்கிறார்! ஆனால், இந்தியாவில் அந்நிய முதலீடு ஆரம்பிப்பதற்கு முன்பாகவே, இவான்ஸ் பட்டியலிட்ட சீரழிவுகள் பத்திரிகைத் துறையில் நுழைந்துவிட்டன.

பயங்கரவாதத்தின் கருவியாக நமது பத்திரிகைகள் மாறி வருவது குறித்தும் எச்சரித்திருக்கிறார் இவான்ஸ்:

''வன்முறை, ரத்தம், மரண தண்டனை, ஜிஹாதி கொலைகள் போன்றவற்றைச் செய்தியாக்கும்போது பட்டவர்த்தனமாகப் படங்களை, வீடியோவைப் பதிப்பிப்பதும் ஒளிபரப்புவதும்கூட பயங்கரவாதம்தான். படங்களை வெளியிடுவோர் பயங்கரவாதிகளின் கருவிகளாக மாறி, அவர்களுடைய எதிர்பார்ப்புகளைத்தான் பூர்த்தி செய்கிறார்களேயொழிய பயங்கரவாதத்தை ஒழிக்க உதவுவதில்லை'' என்கிறார் இவான்ஸ்!

''ஒரு பத்திரிகையாளனின் சிறப்பு உரிமைகள் அவனுடைய பிறப்புரிமைகள் அல்ல. தனது தொழில் கடமையை நிறைவேற்றும் முனைப்பில், அவன் தனி நபர் உரிமைகளை மீறவும் கூடாது; சமுதாய நலனைச் சோதிக்கவும் கூடாது!'' என்பதும் இவான்ஸின் கருத்து.

நமக்குத் தெரியாத புது விஷயங்களைச் சொல்லிவிடவில்லை இவான்ஸ். ஆனால், நாமே உணராத, சிந்திக்காத விஷயங்களை மேலை நாட்டவர் சொன்னால் ஏற்பது நம் வழக்கம்! இந்தியாவின் மனசாட்சியாக நின்று இவான்ஸ் பேசிவிட்டார். ஏற்றால் பிழைப்போம். ○

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

